உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 347 ஐப்பசி 22ஆம் நாள் வியாழக்கிழமை 08 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

வடமாகாண மர நடுகை மாதம்
கார்த்திகை - 2018

ஒரு மரம் பட்டுப் போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ் விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்

கரோலஸ் இலினேயஸ்
(தாவர வகைப்பாட்டியலாளர்)

நடுநிலை வகிக்க மைத்திரி கோரிக்கை
முடிவு மாறாது என்றது கூட்டமைப்பு

நேற்று நேரில் சந்தித்தபோது இரு தரப்பும் சுமுகமான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 8

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடுநிலமை வகிக்கவேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரிக்கை முன்வைத்துள்ளார். இருப்பினும், கூட்டமைப்பு அந்தக் கோரிக்கையை அடியோடு நிராகரித்துள்ளதுடன், தமது கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கும் முடிவை ஏற்கனவே எடுத்துள்ளதாகவும் கூறியுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்; நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன் ஆகி » 25

கூட்டமைப்பு பங்கேற்கும்

கொழும்பு. நவ. 8

வடகிழக்கு அபிவிருத்திச் செயலணியின் இன்றைய கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு அபிவிருத்திக்கான அரச தலைவர் செயலணியின் கூட்டம் இன்று காலை இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் புதிதாக நியமிக்கப்பட்ட தலைமை அமைச்சர் மகிந்த ராஜ » 22

விபத்தில் கோத்தா நேற்று அருந்தப்பு

கொழும்பு, நவ. 8

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும், அவரது மனைவியும் பயணித்த வாகனம், நேற்றுக் காலை விபத்துக்குள்ளாகியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாந்தோட்டை மெதமுலானவில் உள்ள தமது இல்லத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது, ஹக்கம » 25

தீர்வு வேண்டுமெனில் நடுநிலமை கட்டாயம்

சுதந்திரக் கட்சி மிரட்டல்

கொழும்பு, நவ. 8

தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடுநிலையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பு டார்லி » 25

14ஆம் திகதி வாக்கெடுப்பு நடக்கும்

மகிந்த அணியின் எதிர்ப்பையும் மீறி சபாநாயகர் நேற்று முடிவு

கொழும்பு, நவ. 8

நாடாளுமன்றம் எதிர்வரும் 14ஆம் திகதி கூட்டப்படும் போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்புக்கு அனுமதி » 25

வடக்கு, கிழக்கு இணைப்புக்கும் கூட்டாட்சிக்கும் எதிர்ப்பேயில்லை

தடாலடியாக மைத்திரி குத்துக்கரணம்

யாழ்ப்பாணம், நவ. 8

கூட்டாட்சி அரசமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கு இணைப்பு என்பன நான் உயிரோடு இருக்கும் வரையில் நடக்காது என்று ஒரு போதும் கூறவில்லை. நான் அவ்வாறு தெரிவிக்கவில்லை என்பதைப் பொது மேடையில் விரைவில் அறிவிப்பேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளார். » 25

நாடாளுமன்றம் நள்ளிரவுடன் கலைக்கப்படும்

ஐ.தே.கவின் குற்றச்சாட்டால் நேற்றுப் பெரும் பரபரப்பு

கொழும்பு, நவ. 8

நாடாளுமன்றத்தை நேற்றிரவு கலைப்பதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ள தாக, தகவல்கள் கிடைத்துள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு முன்வைத்தது. ஐக்கிய » 25

நாடாளுமன்றம் கலைக்கப்படாது! ஐ.தே.கவின் கட்டுக்கதை அது!

மைத்திரி - மகிந்த தெரிவிப்பு

கொழும்பு, நவ. 8

இலங்கையின் தற்போதைய அரசமைப்புச் சட்டத்தை மீறி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் நடவடிக்கையில் அரச தலைவர் மைத்திரிபால இறங்கியுள்ளார் எனவும், பெரும்பாலும் நள்ளிரவு சபையைக் கலைக்க அரச தலைவர் உத்தேசித்துள்ளார் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு » 25

மக்களாட்சிக்கு முரணான பதவியை பெற்று கீழ்த்தரமாக நடக்கமாட்டேன்

சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, நவ. 8

2015ஆம் ஆண்டு அரச தலைவராக மைத்திரிபால சிறிசேனவை தெரிவுசெய்வதற்கும், தலைமை அமைச்சராக ரணில் விக் » 25

see more news in newuthayan.com

ரணில் வென்றாலும் மைத்திரி விலகார்

யாழ்ப்பாணம், நவ. 8

நாடாளுமன்றத்தில் மகிந்த அரசை நம்பிக்கையில் லாத் தீர்மானத்தின் ஊடாக ரணில் விக்கிரமசிங்க தோற்கடித்தா » 22

ராஜபக்ச குடும்பத்திலிருந்து ஒருவருக்கு அமைச்சுப் பதவி

கொழும்பு, நவ. 8

இரண்டு புதிய அமைச்சரவை அமைச்சர்களும் ஒரு இராஜாங்க அமைச்சரும் அரச தலைவர் முன்னிலையில் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளதாக அரச தலைவர் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சமல் ராஜபக்ச » 25

வடகிழக்குச் செயலணி மகிந்தவுக்கே அழைப்பு

கொழும்பு, நவ. 8

வடக்கு கிழக்கு அரச தலைவர் அபிவிருத்திச் செயலணியின் இன்றைய கூட்டத்தில், புதிய தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான முன்னைய அரசின் அமைச்சர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு அரச தலைவர் அபிவிருத்திச் » 25

நாடாளுமன்றம் கூடியதும் சபை ஒத்திவைப்பு யோசனை

காலத்தை இழுத்தடிக்க சு.க. திட்டம்

கொழும்பு, நவ. 8

எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடியதும், அரச தலைவர் கொள்கை அறிவிப்பை வெளியிட்ட பின்னர் நாடாளுமன்றத்தை ஒத்தி வைப்பதற்கான யோசனையை சபை முதல்வர் முன்வைப்பார். தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்பிக்கப்பட்டால் அது நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளடக்கப்பட்டு கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எதிர்வரும் 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடுமென அரச தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் அமைச்சர்கள் அனைவரும் பதவியேற்று அதற்கான அரசிதழ் அறிவித்தல் வெளியிடப்படும். அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றச் செயலர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்குரிய ஆசனங்களை நாடாளுமன்றில் ஒதுக்குவார்கள். அரசில் அங்கம் வகிப்பவர்கள் ஆளும் தரப்பில் அமர்வார்கள். மற்றைய தரப்பினர் எதிர்க்கட்சித் தரப்பில் அமர்வார்கள்.

அரச தலைவர் கொள்கை அறிவிப்பை வெளியிட்ட பின்னர் நாடாளுமன்றத்தை ஒத்தி வைப்பதற்கான யோசனையை சபை முதல்வர் முன்வைப்பார். தலைமை அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்பிக்கப்பட்டால் அது நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளடக்கப்பட்டு கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன் பின்னரே அது சபையில் விவாதத்துக்கு உட்படுத்தப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படும். நாடாளுமன்றில் எவருக்கு பெரும்பான்மை உள்ளதென நிரூபிப்பதற்கான சில முறைமைகள் உள்ளன. நிலையியல் கட்டளைகள் மற்றும் நாடாளுமன்ற சம்பிரதாயங்களுக்கு உள்பட்டு பெரும்பான்மையை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

(5,10)

சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்கும் சீனாவுக்கு அடிபணிவது விரோதமானது

விக்கிரமபாகு காட்டம்

கொழும்பு, நவ. 8

ஜனநாயக முறையில் நாகரீகமான அரசியலை முன்னெடுத்துவரும் ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து பயணிக்காது, பொதுத் தேர்தலைக்கூட நடத்தாது ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்துவரும் சீனாவுக்கு அடிபணிந்து செல்வது மக்கள் ஆட்சிக்கு விரோதமானது என்று நவ சமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மனித உரிமைகள் தொடர்பில் எவ்வித அக்கறையுமின்றி ஒரு தரப்பை அதிகாரத்தில் வைத்துக் கொள்ள அரச தலைவர் இவ்வாறு நடந்து கொண்டுள்ளதுடன், பன்னாட்டுச் சமூகத்துக்கு எதிரான கருத்துகளையும் முன்வைத்து நாட்டை இருள் சூழ்ந்த யுகத்தை நோக்கி நகர்த்தி வருகிறார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில், பன்னாட்டு மனித உரிமை நியமங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார், இதுதான் ஜனநாயக ஆட்சியா? ஐரோப்பிய நாடுகளுக்கு அடிப்பணிந்து நடந்து கொள்ள மாட்டோம் என்கிறார்.

ஆனால், சீனாவுடன் அடிபணிந்து நடந்து கொள்ள லாமா?. கோடிக்கணக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணத்தை பகிர்கின்றனர். எவ்வாறு அதனை மீண்டும் பெற்றுக்கொள்ளப் போகின்றனர்?. ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது சீனா ஜனநாயக அரசியலை முன்னெடுக்கும் நாடு அல்ல. அங்கு எந்தவொரு பொது வாக்கெடுப்பும் நடைபெறுவதில்லை. சர்வாதிகாரத்தில் இயங்கும் நாட்டில் கடனைப் பெற்றால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். என்றார்.

(5,10)

நிர்வாக அதிகாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வெளியானது

யாழ்ப்பாணம் நவ 8

இலங்கை நிர்வாக சேவை (எஸ்.எஸ்.ஏ.எஸ்) ஆட்சேர்ப்பிற்காககடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிப்பரீட்சை முடிவு கள் நேற்று வெளியாகியுள்ளது. இந்த முடிவுகளில் 220 பரீட்சார்த்திகள் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதில் 175 வெற்றிடங்கள் நிரப்பப்படும். அவர்களில் 69 பேர் தமிழ் மொழி மூலம் தோற்றி தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(8)

மைத்திரி வழங்கிய விருதை திருப்பி அனுப்புகிறார் நேசையா

யாழ்ப்பாணம் நவ 8

ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கும் முரணான வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு வருவதாக கவலை தெரிவித்திருக்கும் ஓய்வுபெற்ற சிவில் சேவை அதிகாரியான கலாநிதி தேவநேசன் நேசையா கடந்த வருடம் தனக்கு மைத்திரியால் வழங்கப்பட்ட தேசமான்ய விருதுக்கான பதக்கத்தையும் சான்றிதழையும் திருப்பியனுப்பப்போவதாக தெரிவித்துள்ளார்.

தற்போது வெளிநாட்டில் இருக்கும் கலாநிதி நேசையா அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பகிரங்கக் கடிதமொன்றை எழுதியிருக்கிறார்.

அவர் தனது கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது;

" விசுவாசமான ஒரு இலங்கையன் என்ற வகையிலும் தகுதியானவன் என்று என்னைக் கண்டு 2017 மார்ச்சில் தங்களால் தரப்பட்ட தேசமான்ய விருதைப் பெருமையுடன் பெற்றுக்கொண்டவன் என்ற முறையிலும் உங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன். எமது மகத்தான தேசத்துக்கு நான் செய்திருக்கக்கூடிய சேவைகளுக்கு அரச தலைவரிடமிருந்து கிடைத்த அங்கீகாரமாக எனக்கு அளிக்கப்பட்ட தேசமான்ய விருதைக் கொண்டாடுவதற்கு அன்று மூன்று கண்டங்களில் இருந்து எனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நெருங்கிய நண்பர்கள் நாட்டுக்கு வந்திருந்தார்கள்.

" உங்களை முன்கூட்டியே நான் பெரிதாக தெரிந்தவன் அல்ல. ஆனால், நீங்கள் அரச தலைவராக தெரிவுசெய்யப்பட்டபோது எனது குடும்பத்தவர்களும் நண்பர்களும் நானும் பெருமகிழ்ச்சி அடைந்தோம். அந்த மகிழ்ச்சியும் நம்பிக்கையும் கடந்த சில நாட்களாக எமது 70 வருடகால பழமைவாய்ந்த ஜனநாயகத்தை அப்பட்டமாக நீங்கள் அவமதித்து முன்னெடுத்திருக்கின்ற நடவடிக்கைகள் இல்லாமல் செய்துவிட்டன.

"நீங்கள் எனக்குத் தந்த தேசமான்ய பதக்கத்தையும் சான்றிதழையும் கவலையுடன் திருப்பித்தருவதை விட வேறு வழி எனக்கு ஒரு விசுவாசமான , தேசப்பற்றுடைய இலங்கையன் என்ற வகையில் தெரிய வில்லை. நான் இப்போது வெளிநாட்டில் இருக்கிறேன். நாடு திரும்பியதும் பதக்கத்தையும் சான்றிதழையும் உங்கள் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகளைச் செய்வேன்.

" எனது இந்த முடிவு எளிதாகவோ அல்லது அவசரமாகவோ எடுக்கப்பட்ட ஒன்றல்ல. 60 வருடங்களுக்கு முன்னர் இலங்கை சிவில் சேவையில் முதலில் இணைந்துகொண்ட நாளில் இருந்து நான் வரித்துக்கொண்ட கோட்பாடுகளின் பிரகாரமே செயற்பட்டுவந்திருக்கின்றேன்.

அது எனக்குச் சுமையாக இருந்தாலும் பெருமையுடன் ஏற்றுக்கொண்ட சுமை. எனது நீண்டகால சிவில் சேவையில் எனது விழுமியங்களை விட்டுக்கொடுப்பதற்கு மறுத்த காரணத்தால் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கங்களின் கீழும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கங்களின் கீழும் நான் அடிக்கடி தொல்லைகளுக்குள்ளாக்கப்பட்டிருந்தேன்.

"நீங்கள் தந்த தேசமான்ய விருதில் பெருமைப்பட இனிமேலும் எனக்கு எதுவுமில்லை என்பதால் நான் இதுவரை மதித்து வைத்திருந்த பதக்கத்தையும் சான்றிதழையும் திருப்பியனுப்புவதைத் தவிர எனக்கு வேறு தெரிவு இருக்கவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் 14ஆம் திகதி மைத்திரியின் உரை மாத்திரம்தான்

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நடக்காது என்கிறார் லக்ஸ்மன்

கொழும்பு, நவ. 8

அரச தலைவரால் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கூட்ட சபாநாயகருக்கு எந்த அதிகாரமும் இல்லை. எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அரச தலைவரின் சிறப்பு உரையைத்தவிர வேறு எந்த விடயமும் இடம்பெறாது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தலைமை அமைச்சர் பணிமனையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

தற்போதுள்ள அரசியல் பிரச்சினைக்கு இன்னும் இரண்டு வாரங்களுக்குள் தீர்வு கிடைக்கும். மக்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதை கடந்த 5ஆம் திகதி காட்டியிருக்கின்றோம். இதனையும் மீறி செய்வதென்றால் பொதுத் தேர்தலொன்றுக்கே செல்லவேண்டும். அதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

தற்போதுள்ள நிலையில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம். அவ்வாறில்லாவிட்டால் நாட்டில் அரசியல் உறுதிப்பாடற்ற நிலையால் ஏற்படும் பிரச்சினையை கருத்தில் கொண்டு அரச தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம் என்றார்.

(5)

சபாநாயகரின் அறிக்கைகள் எல்லாம் செல்லுபடியற்றதாம்

மகிந்த சமரசிங்க சீற்றம்

கொழும்பு, நவ. 8

அரச தலைவரால் நாடாளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சபாநாயகரால் வெளியிடப்படும் அறிக்கைகள் செல்லுப்படியற்றது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

புதிய தரப்பினர் பெரும்பான்மையை நிரூபிக்கும்வரை ஏற்கனவே இருந்த அரசைதான் ஏற்றுக்கொள்வேன் என்று சபாநாயகர் கருஜயசூரிய வெளியிட்டிருந்த அறிக்கை தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

சபாநாயகர் அரசியலுக்கு அடிபணியாது அரசமைப்பு மற்றும் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். அரசமைப்பின் பிரகாரமே அரச தலைவர் புதிய அரசையும், புதிய தலைமை அமைச்சரவையும் நியமித்துள்ளார்.

அரச தலைவர் அரசமைப்பை மீறியுள்ளதாக அவரின் நடவடிக்கைகளை சவாலுக்கு உட்படுத்த வேண்டுமென்றால் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்ய முடியும்.

சபாநாயகரின் அறிக்கை தவறானது. அவருக்கு அவ்வாறாக கூறுவதற்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. அவர் எத்தனை அறிக்கைகளை வெளியிட்டாலும் அது செல்லுபடியற்றதாகும். சபாநாயகரின் அறிக்கையை நாங்கள் நிராகரிக்கின்றோம் என்றார்.

(5,10)

ஜனநாயகத்துக்கு எதிரான சதித்திட்டத்துக்கு நாங்கள் ஒருபோதும் துணைபோக மாட்டோம்

கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவிப்பு

கொழும்பு ,நவ .8

ஜனநாயகத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள அரசியல் சதித்திட்டத்துக்கு நாங்கள் ஒரு போதும் துணைபோக மாட்டோம் என்று முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இடையிலான சந்திப்பொன்று அரச தலைவர் செயலகத்தில் இடம் பெற்றது. இது தொடர்பில் அவர் தெரிவித்துள் ளதாவது:

இன்று (நேற்று) இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினர்களிடம் அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு புதிய அரசில் இணைந்து செயற்படுங்கள் அல்லது எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பெரும் பான்மையை நிரூபிக்க வாக்களிக்கின்ற சந்தர்ப்பத்தில் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது நடுநிலைமைத் தன்மையை பேணுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஆனால், நாங்கள் அவரிடம், இந்த நாட்டில் ஜனநாயகத்துக்கு விரோதமாக அல்லது ஜனநாயகத்தை பழுதடையச்செய்வதான விடயங்களுக்கும், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழந்து தனிப்பட்டவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கும் எந்தவொரு சந்தர்ப் பத்திலும் ஒத்துழைப்பு வழங்கமாட் டோமென தெளிவாக வலியுறுத்தியுள் ளோம். வாக்களிப்பின்போது ஜனநாயகத்தை பாதுகாக்க வாக்களிக்க உள் ளோம் என்பதையும் திட்டவட்டமாக அறிவித்துள்ளோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியை பொருத்தவரை ஐக்கிய தேசியக் கட்சி அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளுமே நாட்டை ஆட்சி செய்யும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் எங்களுடைய மக்களுக்கு எவ்வாறான சேவைகளை செய்ய வேண்டுமோ அதன் அடிப்படையில் இணைந்து செயற்படுவோம்.

ஆனால், ஜனநாயகத்தை பாதிப்புக்கு உள்ளாக்கும் வகையில் அல்லது ஜனநாயகத்தை மதிக்காமல் செயற்படுகின்ற சந்தர்ப்பங்களில் எந்தக் கட்சியாக இருந்தாலும் அதற்கு துணை போக மாட்டோம்- என்றார்.

(10)

தனியார் பேருந்துக் கட்டணம் இன்று நள்ளிரவு முதல் குறைப்பு

கொழும்பு ,நவ .8

தனியார் பேருந்துக் கட்டணத்தைக் குறைப்பதற்கு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பேருந்துக் கட்டணத்தை இன்று நள்ளிரவு முதல் 2 வீதத்தால் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாகத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆரம்ப பேருந்து கட்டணத்தில் எவ்வித மாற்றமுமில்லையெனத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

சபாநாயகர் நடுநிலை தவறக்கூடாது

கூறுகிறார் செகான் சேமசிங்க



கொழும்பு ,நவ .8

சபாநாயகர் கரு ஜயசூரிய நாடாளுமன்றத்தில் நடுநிலையாகச் செயற்படவேண்டும். நாடாளுமன்றம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தா அல்ல என்பதை அவர் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மகிந்ம அணி உறுப்பினர் செகான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள அரசிதழின் பிரகாரமே நாடாளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் . தற்போதைய நெருக்கடியை சபாநாயகர் மேலும் வலுப்படுத்தினால் அவர் பெரும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

தற்போது நாடாளுமன்றத்தில் எவ்விதமாக மாற்றங்களும் இடம்பெறவில்லை. கடந்த 26ஆம் திகதிக்கு முன்னர் எவ்வாறு நாடாளுமன்றம் காணப்பட்டதோ அதே போன்றே செயற்படும் என்று குறிப்பிட்டுள்ளமை அரச தலைவரின் தீர்மானத்தை மீறுவதாகும்.

சபாநாயகர் ஐக்கிய தேசிய கட்சிக்காகவே செயற்படுகின்றார். கடந்த காலங்களில் நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற பல நிகழ்வுகளில் இதனை நிரூபித்துள்ளார். 14 ஆம் திகதி நாடாளுமன்றம் புதிய அமைச்சரவையின் செயற்பாடுகளே இடம்பெறும். தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக கொண்டு வரவுள்ளதாக குறிப்பிடப்படும் நம்பிக்கையில்லா தீர்மானத்தை பெரும்பான்மையுடன் தோற்கடிப்போம் -என்றார்.

நாடாளுமன்றத்தை கலைக்கக்கூடாது சரத்பொன்சேகா எச்சரிக்கை

கொழும்பு ,நவ .8

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைக்க திட்டமிட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ள அதேவேளை முன்னாள் அமைச்சர் சரத்பொன்சேகா இதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

அரச தலைவர் நாடாளுமன்றத்தை கலைக்க முயலக் கூடாது என சரத்பொன்சேகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அது ஜனநாயக விரோத நடவடிக்கையாக அமையும் என தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் இதற்கெதிராக கிளர்ந்தெழுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசமைப்பின் கீழ் நாடாளுமன்றத்தின் முழுமையான ஆயுள்காலம் பூர்த்தியாகும்வரை அதனைக் கலைக்க முடியாது என சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரசொன்று அதன் நாலரை வருடகாலத்தை நிறைவு செய்யும்வரை அதனை கலைக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை என்னுடைய பீல்ட்மார்சல் பதவியையும் அரச தலைவர் பறிக்க முடியாது எனவும் சரத்பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

பாதாள உலக குழுவினரின் ஆலோசனையை செவிமடுத்து அரச தலைவர் என்னுடைய பீல்ட்மார்சல் பதவியை பறித்தால் உள்நாட்டிலும் பன்னாட்டு அளவிலும் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

ரணிலின் வீட்டில் நடப்பது எமக்குத் தேவையற்றது

ஹிருணிகா பதில்

ரணில் விக்கிரமசிங்க குறித்து சிறிசேன தெரிவித்த வண்ணாத்திப்பூச்சி குற்றச்சாட்டுத் தொடர்பில் கருத்து தெரிவித்த கிருனிகா .ரணில் வீட்டுக்குள் நடப்பவைகள் குறித்து எவரும் அலட்டிக்கொள்ள தேவையில்லை என குறிப்பிட்டுள்ளார் .

அரச தலைவர் சிறிசேனவின் கருத்தை ஹிருணிகா கண்டித்துள்ளார்.

அரச தலைவர் தான் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதற்காக ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டிற்கும் அறைக்கும் செல்வாரா எனவும் அவர் கேள்விஎழுப்பியுள்ளார்.

ஏனையவர்கள் மீது நான் சுமத்தும் குற்றச்சாட்டுகளை நிருபிக்கவேண்டிய தேவை ஏற்படுமென்றால் நான் அவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைக்க மாட்டேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஏனையவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை எங்களிற்கு தேவையற்ற விடயம்.இது எங்கள் பிரச்சினைகளிற்கு தீர்வை கொண்டுவராது என ஹிருணிகா தெரிவித்துள்ளார்.

காலையில் அலரி மாளிகையில்; மாலையில் அமைச்சுப் பதவி

கிண்டலடிக்கின்றனர் அமைச்சரவைப் பேச்சாளர்கள்

கொழும்பு ,நவ.8

113க்கு மேல் பெரும்பான்மை வாக்கு எமக்கு ஏற்கனவே இருக்கின்றது. பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய தேவை எமக்கில்லை. காலையில் ரணில் விக்கிரமசிங்கவுடன் அலரிமாளிகையில் இருக்கின்றவர்கள், மாலையில் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்கின்றார்கள். நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் தீர்மானம் கொண்டு வந்து தமக்கு ஆதரவு இருக்கின்றதா இல்லையா என்பதை ஐக்கிய தேசியக் கட்சிதான் நிரூபிக்க வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளர்களான கெஹலிய ரம்புக்வெல மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோர் தெரிவித்தனர்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

அங்கு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில்,

கேள்வி: ரணில் விக்கிரமசிங்கவுக்கு 119க்கு மேல் பெரும்பான்மை இருக்கின்றது என்று ஐக்கிய தேசிய கட்சி தரப்பு தெரிவித்துள்ளது. உங்களால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியுமா?

பதில்: எமக்கு ஏற்கனவே 113 க்கும் மேல் பெரும்பான்மை இருக்கின்றது. பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டிய தேவை எமக்கில்லை. காலையில் ரணில் விக்கிரமசிங்கவுடன் அலரிமாளிகையில் இருக்கின்றவர்கள் மாலையில் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்கின்றார்கள். நாடாளுமன்றில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்து தமது ஆதரவு இருக்கின்றதாக இல்லையா என்பதை ஐக்கிய தேசியக் கட்சிதான் நிரூபிக்க வேண்டும்.

மைத்திரியின் வண்ணாத்துப்பூச்சிக் கதைக்கு புது விளக்கமளித்த பேச்சாளர்கள்

கொழும்பு ,நவ .8

அரசுக்கு ஆதரவாக நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் யாரையும் பாலியல் ரீதியில் கொச்சைப்படுத்தும் வகையில் வண்ணத்துப்பூச்சி என்ற வார்த்தைப் பிரயோகத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பிரயோகிக்கவில்லை. அது ஒரு அப்பாவி உயிரினம். இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர்கள். அது ஒரு அப்பாவி உயிரினம்எனத் தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர்களான கெஹெலிய ரம்புக்வெல மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோர்தெரிவித்தனர். ரணில் மற்றும் அவரைச் சுற்றியுள்ள தரப்பினரே நாட்டின் அனைத்துதீர்மானங்களையும் எடுத்தனர் என்பதையே அரச தலைவர் குறிப்பிட்டதாக கூறினார்கள்.

அரசதகவல்திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது ஊடகவியலாளர்கள்எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர்கள் இதனை கூறினர்.

மகிந்தவுக்காகக் கட்சியின் யாப்பில் திருத்தம்; சிறிலங்கா சுதந்திரக் கட்சி முடிவு

கொழும்பு,நவ.8
சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பிலான முக்கியமான செயற்குழுக் கூட்டம் இன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.

பத்தரமுல்லையில் பிற்பகல் 4 மணியளவில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்சவும் கலந்து கொள்ளவுள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டங்களில் பங்கேற்பதை சில காலமாகத் தவிர்த்து வந்த மகிந்த ராஜபக்ச இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளஇருப்பது முக்கிய அம்சமாகும்.

இந்தக் கூட்டத்தில், கட்சியை மறுசீரமைப்பது மற்றும், கட்சியின் யாப்பில் திருத்தங்களைச் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதாக. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் லக்ஸ்மன் பியதர்ச தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்சவுக்குக் கட்சியில் கூடுதல் பொறுப்பை அளிக்கும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

மைத்திரியின் தீர்மானம் நாட்டின்நன்மைகருதியதாம்

என்கிறார் பிரபு நசெபி

கொழும்பு,நவ.8
இலங்கையின் தலைமை அமைச்சரை மாற்றியது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானம் அரசமைப்புக்கு முரணானதல்ல எனப் பிரிட்டன் பிரபு பாரொன் நசெபி தெரிவித்தார். நாட்டின் நன்மை கருதியே அரச தலைவர் இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பிரிட்டனில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"தலைமை அமைச்சர் நீக்கப்பட்டு புதிய தலைமை அமைச்சர் நியமிக்கப்பட்டமை வழக்கத்துக்கு மாறான செயல். ஆனால் அது அரசமைப்புக்கு முரணானது அல்ல. இவ்வாறு வழக்கத்துக்கு மாறான செயற்பாடுகள் பிரிட்டனிலும் இடம்பெறுகின்றன. நிறைவேற்று அதிகார அரச தலைவர் என்ற ரீதியில் இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தீர்மானம் எடுத்துள்ளது நாட்டுக்காகவே.
இதேவேளை, நான் அரச தலைவர் மைத்திரியைப் பல சந்தர்ப்பங்களில் சந்தித்துள்ளேன். அவர் தூரநோக்குடைய நாட்டின் நன்மைக்காக செயற்படும் தலைவரே ஆவார்.
மேலும், அரச தலைவரின் செயற்பாடு அரசமைப்புக்கு உட்பட்டதா? இல்லையா? என்பதைத் தீர்மானிப்பது வெளிநாடுகள் அல்ல" - என்றார். இலங்கை தொடர்பில் கடந்த காலங்களில் சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவித்து வந்தவரே பிரபு நசெபி. குறிப்பாக இறுதிக்கட்டப் போரில் வெறும் 8 ஆயிரம் பேரே உயிரிழந்தனர் என்று இவர் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

மகிந்த – மைத்திரி அரசில் முஸ்லீம் உறுப்பினர்கள் இணைவர்

கூறுகின்றார் பிரதி அமைச்சர் நிஷாந்த

கொழும்பு,நவ.8
தலைமை அமைச்சர் மகிந்த மற்றும் அரச தலைவர் மைத்திரி தலைமையிலான புதிய அரசில் மேலும் இரு உறுப்பினர்கள் இணையவுள்ளதாகப் பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம தெரிவித்துள்ளார்.
அத்துடன் எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்படும்போது தாங்கள் பெரும்பான்மையை நிரூபிப்போம் என்றும் கூறினார். காலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தப் புதிய அரசில் ஐக்கிய தேசிய முன்னணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணையவுள்ளனர். மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதியுதீன் மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் எமது அரசில் இணையவுள்ளனர்-என்றார்.

மகிந்தவுடன் இணைகிறதா முஸ்லிம் காங்கிரஸ்?

மறுக்கிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு,நவ.8
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் புதிய அரசுடன் இணையவுள்ளதாக, பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம கூறியுள்ள கருத்தை ரவூப் ஹக்கீம் மறுத்துள்ளார். ரவூப் ஹக்கீமின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் இரவு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அம்பாறை, மட்டக்களப்பு உலமாக்கள் இடையே சந்திப்பு இடம் பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் புதிய தலைமை அமைச்சராகப் பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசுக்கு ஆதரவளிப்பது தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை எந்த விதமான தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை.
அதேவேளை, புதிய அரசில் இணைவதாகப் பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம கூறிய கருத்தைத் தான் மறுப்பதாகவும் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (ஐ)

நாட்டுக்கு ஹிட்லர் ஆட்சி தேவையில்லை

கூறுகின்றார் தம்மசார தேரர்

கொழும்பு,நவ.8
நாட்டுக்கு ஹிட்லர் ஆட்சி தேவையில்லை ஜனநாயக ஆட்சியே தேவை என்று போபிட்டிய தம்மசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை கூடிய பிக்குகள், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசமைப்புக்கு அமைவாகச் செயற்படவேண்டும் என்றும், நாடாளுமன்றத்தைக் கூட்டி அரசமைப்பு நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறும் தீர்மானம் நிறைவேற்றினர்.
இதன்போதே போபிட்டிய தம்மசார தேரர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கரு ஜெயசூரியவையும், சஜித் பிரேமதாசவையும் தலைமை அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு நான்கு மாதங்களுக்கு முன்னர் கோரியதாக இலங்கை அரச தலைவர் கூறியுள்ளார். இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.
ஏனென்றால், தன்னைக் கொல்லும் சதித் திட்டம் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கியதாக அவர் கூறியிருந்தார்.

ஆனால், கொலைச் சதி முயற்சி அண்மையில் நடந்த விவகாரம்.
அதற்கு முன்னரே, கரு ஜெயசூரியவையும், சஜித் பிரேமதாசவையும் தலைமை அமைச்சர் பதவியை ஏற்குமாறு அழைத்திருப்பது எப்படி?
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடருமானால் அனைத்துலக சமூகம் கடுமையான நடவடிக்கையில் இறங்கக் கூடும்" -என்றார். (ஐ)

அரச தலைவரின் அழைப்பை நிராகரித்தது தமிழ் முற்போக்குக் கூட்டணி

கொழும்பு,நவ.8
அரசுடன் இணைந்து கொள்ளுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விடுத்த கோரிக்கையை தாம் நிராகரித்துள்ளதாக தமிழ்முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.
அரச தலைவருக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை அரச தலைவர் இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போது, தமது கூட்டணியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் அரசுடன் இணையமாட்டோம் எனத் தமது நிலைப்பாட்டை அறிவித்ததாக, சந்திப்பின் பின்னர் மனோகணேசன் தனது கீச்சகத்தில் தெரிவித்துள்ளார். (ஐ)

வடக்கு - தெற்கு மக்களின் அடிப்படை தேவைகளைக்கூட அரசியல்வாதிகள் தீர்க்கவில்லை

முரளி குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.8
வடக்கு,தெற்கிலுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட அரசியல்வாதிகள் பூர்த்தி செய்யவில்லை என்று இலங்கையின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையர முரளிதரன் குற்றம் சுட்டியுள்ளார்.
இலங்கையில் அரசியல் குழப்பம் நீடித்து வரும் நிலையில் நேற்றுமுன்தினம் பிபிசிக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"இலங்கை மக்கள், அரசியல்வாதிகளிடம் இருந்து ஜனநாயகம் மட்டுமன்றி உணவு உள்ளிட்ட அடிப்படை தேவைகளையும் எதிர்பார்க்கின்றனர். இந்த நிலையில் அரசியல்வாதிகள் தெற்கிலும், வடக்கிலும் உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்யவில்லை. குறிப்பாகத் தமிழ் அரசியல்வாதிகள் ஜனநாயகத்தையும் பழைய விடயங்களையும் பற்றிப் பேசுகின்றனரே தவிர மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் பேசுவது இல்லை" என்றார். (ஐ)

அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு பொதுத் தேர்தலே

கூறுகின்றார் முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா

கொழும்பு,நவ.8
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வாக நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலுக்குச் செல்லவேண்டும் என்று முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா அரச தலைவருக்கு வலியுறுத்தியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
"அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் 70ஆவது உறுப்புரையின் பிரகாரம் நான்கரை வருடங்களுக்குப் பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும்.
ஆனால், நிறைவேற்று அதிகாரத்தின் ஊடாக அரச தலைவரால் அதற்கு முன்னரே நாடாளுமன்றைக் கலைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

19ஆவது திருத்தச்சட்டத்தின் 33 ஆவது உறுப்புரையின் பிரகாரம், நாடாளுமன்றைக் கூட்டும், ஒத்திவைக்கும் மற்றும் கலைக்கும் அதிகாரம் அரச தலைவருக்கு உள்ளது.
நாடாளுமன்றை சர்வஜன வாக்கெடுப்பின்றிக் கலைக்க முடியாதென்ற வகையில் 19ஆவது திருத்தச் சட்டத்தில் அறிமுகப்படுத்திய திருத்தத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றமும் தீர்ப்பளித்திருந்தது.
எனவே, அரச தலைவருக்கு நாடாளுமன்றைக் கலைக்கும் அதிகாரம் தற்போதும் இருக்கிறது. அதனை, தேவைப்படும் பட்சத்தில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். அந்த வகையில், மக்களுக்கும் நாட்டுக்கும் தேவைப்படும் போது, உறுதியற்ற நிலையில் உள்ள நாடாளுமன்றை அரச தலைவர் கலைக்கலாம்"- என்றார். (ஐ)



கோரிக்கைகள் நிறைவேறாவிடின் அரசில் இருந்து வெளியேறுவேன்

கூறுகின்றார் பிரதி அமைச்சர் வியாழேந்திரன்

கொழும்பு,நவ.8

11 அம்ச கோரிக்கைகளை முன்வைத்தே அரசில் பிரதி அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டேன். அந்த கோரிக்கைகளில் 30 சதவீதம் நிறைவேற்றப்படாவிட்டாலும் அரசில் இருந்து வெளியேறுவேன் என்று பிரதி அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த 11 அம்சக் கோரிக்கைகளில் 30 விகிதம் கூட நிறைவேற்றப்படவில்லை என்றால் இந்த அரசைக் கூட விமர்சிப்பேன் என்றும் கூறினார். கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஊடக சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேசும் பங்கேற்று. தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்தார். (ஐ)

வியாழேந்திரனை மீண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட அழைப்பு

கொழும்பு,நவ.8

பிரதி அமைச்சர் எஸ்.வியாழேந்திரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட உடனே வருமாறு மட்டக்களப்பு மாவட்ட கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சி மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக மநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட பிரமுகர்கள் ஒருமித்து மேற்படி வேண்டுகோளை விடுத்தனர்.

அவர்கள் விடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயகத்துக்கு முரணாகவும் அரசமைப்புக்கு மாறாகத் தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை நியமித்த அரச தலைவர் தற்போது யார் தலைமை அமைச்சர் ரணிலா? மகிந்தவா? என்ற நிலமையை ஏற்படுத்தியுள்ளார்.

இதனால் நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்காகப் பல நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்பக்கம் இழுக்கும் முயற்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் மகிந்த பக்கம் சோரம்போய் பிரதி அமைச்சர் பதவியைப் பெற்றுள்ளார்.

அவர் சில அழுத்தங்களால் அல்லது சலுகைகளால் அப்படி சென்றாலும் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட உடனே வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கின்றோம் .

கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தமிழர் விடுதலைக் கூட்டணி மூலம் தெரிவாகி மட்டக்களப்பில் 1977ஆம் ஆண்டில் செல்லையா இராசதுரை சோரம்போய் ஐ.தே.கட்சியில் இணைந்து இந்து கலாசார அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டார்.

அதற்கு பின்பு தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சோரம் போய் கிழக்கு மாகாண பிரதி அமைச்சர் பதவியை பெற்றுள்ளார். அம்பாறை மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தெரிவான க.கனகரெட்ணம் ஐ.தே.க. இல் இணைந்து மாவட்ட அபிவிருத்தி அமைச்சராகவும் பின் 1994ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ரெலோ நாடாளுமன்ற உறுப்பினர் தி.தீவ்வியநாதனும் சோரம்போனார், 2010 ஆம் ஆண்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பியசேனா ஐ.ம.சு.கூட்டமைப்புக்குச் சோரம் போனார்.

எனவே தற்போது உள்ள கால எல்லையில் வியாழேந்திரன் மக்களின் எண்ணத்துக்கு மதிப்பளித்து மீண்டும் உடனடியாகக் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட ஒரு வாய்ப்பு வழங்கப்படுகின்றது" என்றனர். (ஐ-105)

ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் இடம்பெற்ற மிகப் பெரும் சதி!

வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்குச் சபாநாயகர் கடிதம்



கொழும்பு,நவ.8

ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கி, மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சராக்கியமை ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் இடம்பெற்ற சதி என சபாநாயகர் கருஜெயசூரிய வர்ணித்துள்ளார்.

இலங்கையில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் தூதரகங்களுக்கும் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் சபாநாயகர் இதனைத் தெரிவித்துள்ளார் என்று ரொய்ட்டர் செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் சபாநாயகர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாகத் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் விடயங்களை வைத்து பார்க்கும் போது துப்பாக்கிகளையும் டாங்கிகளையும் பயன்படுத்தாமல் இடம் பெற்ற சதிப் புரட்சி என்றே குறிப்பிடலாம்

முழு விடயங்களும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டே நடைபெறுகின்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளிப்படைத்தன்மை, ஒழுக்கம், ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி ஆகியவற்றுக்கு மாறாக நடந்து கொள்கின்றார்.

தான் நிலைநிறுத்துவதாக சத்தியப்பிரமாணம் செய்த அரசமைப்புக்கு முரணாக நடந்து கொள்கின்றார் மைத்திரி எனவும் கடிதத்தில் தெரிவித்துள்ளார் என ரொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (ஐ)

இந்தியாவுடனான பேச்சுக்களில் இழுபறி

கொழும்பு,நவ.8

இலங்கையில் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்பினால், கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக, இந்தியாவுடன் நடத்தப்படவிருந்த பேச்சுக்களில் இழுபறி ஏற்பட்டுள்ளது.

கொழும்பு கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்வது தொடர்பாக 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

மலிக் சமரவிக்ரமவுக்கும் சுஸ்மா சுவராஜ்க்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசு விரும்பிய போதும், இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சரான மகிந்த சமரசிங்கவும் அதனை எதிர்த்தனர்.

இதனால், இழுபறிகள் ஏற்பட்டிருந்தன.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை அமைச்சர் பதவி நீக்கப்படுவதற்கு முன்னர் இறுதியாக நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது, இது குறித்து இந்தியாவுடன் பேசி முடிவெடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போதைய அரசியல் நெருக்கடிகளால், திட்டமிட்டபடி இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்த முடியவில்லை என்று துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சரான மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டப்பட்ட பின்னர், இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவுடன், இதுபற்றித் பேச்சு நடத்தவுள்ளேன்.

கொழும்பு மேற்கு கொள்கலன் முனையத்தில் இந்தியாவின் முதலீட்டை ஏற்றுக் கொள்வதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தயாராக இருக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

சு.கவுடன் கைகோர்த்தாலும் தனித்தே தேர்தலில் போட்டி

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி

கொழும்பு, நவ. 8

பொதுமக்கள் முன்னணி எதிர்வரும் காலங்களில் தாமரை மொட்டுச் சின்னத்திலே போட்டியிட வேண்டும் என்பது கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது. தற்போதைய அரசியல் மாற்றத்தின் பிரகாரம் இரண்டு தரப்பினரும் திருப்தியடையக் கூடிய தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின் பொதுச் செயலர் சாகல காரியவசம் தெரிவித்தார். இடம்பெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் எவ்வாறு போட்டியிடும் என்பது தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வும், புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுமே தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (5)

உந்துருளிகள் விபத்து

கொடிகாமம், நவ. 8
மீசாலைச் சந்தியில் ஏ-9 முதன்மைச் சாலையிலிருந்து ஒழுங்கைக்குச் சென்ற உந்துருளியை அதே திசையில் வந்த மற்றொரு உந்துருளி மோதியது. ஒரு உந்துருளியில் பயணித்த பெண்ணுக்கு கால் முறிந்த நிலையில் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.
கொடிகாமத்திலிருந்து தீபாவளிக்கான பொருள்களை வாங்கிக் கொண்டு உந்துருளியில் சென்று கொண்டிருந்த மீசாலை மேற்கைச் சேர்ந்த பெண் தனது உந்துருளியின் சமிக்ஞை விளக்கினை எரியவிட்டு ஒழுங்கைக்குள் திருப்பிய வேளை யில் அதே திசையில் வந்த மற்றொரு உந்துருளிஅவரை மோதித் தள்ளியதுஎன்றுவிபத்தை நேரில் பார்த்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.
(ம-9,159)

விஞ்ஞான தின விழா

யாழ்ப்பாணம், நவ. 8
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் விஞ்ஞானதின விழாவும், 'முகை' சஞ்சிகை வெளியீடும் இன்று இடம்பெறவுள்ளன.
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் முதன்மை மண்டபத்தில் இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி எம். விமலநாதனின் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையின் மருத்துவர் திருமதி பாமினி ரமணன் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

கறிமுருங்கைச்செய்கைக்கு குடாநாட்டில் பெரும் ஆர்வம்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாணக்குடாநாட்டில்அனேகமானோர் கறிமுருங்கைச் செய்கையில்ஈடுபடுவதற்கு ஆர்வம்காட்டிவருகின்றனர்என்றுவிவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது.



இது தொடர்பில் விவசாயத் திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது:
கூடுதலானவிளைச்சலைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய நல்லின கறிமுருங்கைச் செய்கையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அதிகமானோர் ஈடுபட்டுள்ளனர். குடாநாட்டில்சகலபிரதேசங்களிலும் இந்தச் செய்கை பரவலாக மேற்கொள்ளப் பட்டுள்ளது. கடும் வறட்சி, வெப்பம் போன்ற கால நிலைகளில் கறிமுருங்கைகள்கூடுதலாகபூத்துக்காய்க்கும் தன்மை வாய்ந்தன. இந்த வருடம் கறிமுருங்கைச்செய்கையில்ஈடுபட்டவர்கள்நல்லவருவாயைப் பெற்றனர். இதையடுத்தே கறிமுருங்கைச் செய்கையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது - என்றுள்ளது.
(ம-17)

வட இலங்கை சமாதான நீதவான்கள் சங்கத்தின் முதலாவது நிர்வாக சபைக் கூட்டம் இலங்கை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் பீ. ஜெயவிந்தன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. புதிதாக யாப்பு தயாரித்தல் தொடர்பான விடயங்கள் இந்த நிர்வாக சபைக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.
(ம-422)

கட்டாத கால்நடைகளைப் பிடிக்க நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 8
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டாமல் அவிழ்த்துவிடப்பட்டு, பொதுமக்களுக்கு இடையூறாகத் திரியும் கால்நடைகளைப் பிடிப்பதற்கு சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.
இந்த விடயம் தொடர்பில் சபையின் தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்ததாவது:
கால்நடைகளை வளர்ப்போர் அவற்றைக்கட்டிவளர்க்கவேண்டும். மேச்சலுக்காக அவற்றை அவிழ்த்துவிடுவதால் பொதுமக்களுக்கு இடையூறாக நடமாடித் திரிகின்றன. இவற்றால் வாகன விபத்துக்கள்ஏற்படுகின்றன. அத்துடன் பயிர்களையும் அவை அழித்துவிடுகின்றன. கால்நடைகளைவளர்ப்போர்இந்தவிடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சபையால் பிடிபடும் கால்நடைகளுக்கு உரியவர்களிடம் இருந்து தண்டம் விதிக்கப்படும் - என்றார்.
(ம-17)



தீவகமறைக்கோட்டப்பீடப்பணியாளர்களுக்கானவதிவிட கருத்தரங்கு நிகழ்வு சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை ஆலயத்தில்கடந்த3ஆம், 4ஆம்திகதிகளில்நடைபெற்றது. தீவக மறைக்கோட்ட பீடப் பணியாளர்களின் காப்பாளர் அருட்திரு எரோனியஸின் நெறிப்படுத்தலில் மறை மாவட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரீபனின் வழிநடத்தலில் இந்தக் கருத்தரங்கு இடம் பெற்றது. 150க்கும்அதிகமானபீடப்பணியாளர்கள்இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றினார்கள்.
(ம-222)

விபத்து!

கைதடி தெற்கில், சாலை வளைவில் திரும்பிய முச்சக்கரவண்டி குடை சாய்ந்ததில்அதில்பயணித்தசாரதிஉட்பட இருவர்காயமடைந்தனர். இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கைதடிக்குச் சென்றுவிட்டுத் திரும்புகையிலேயே இந்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர்கள் சாவகச்சேரி மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சாரதி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். மற்றைய நபர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றார்.
(ம-9)

நூல் வெளியீடு

காரைநகர், நவ. 8
காரைநகர் மணிவாசகர் சபையின் நிறுவுனர் கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீசுவரக்குருக்களின் மூன்றாம் ஆண்டு நினைவை முன்னிட்டு 'திருவாதவூரடிகள் புராணம்' வெளியீடுகாரைநகர் இந்துக்கல்லூரியின் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்றது.
மணிவாசகர் சபையின் தலைவர் கலாபூசணம் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளையின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வரவேற்புரையை ஓய்வுபெற்ற அதிபரும் சபையின் இணைச் செயலாளருமான வே. முருகமூர்த்தியும் நினைவுரையை பண்டிதர் தி. பொன்னம்பலவானரும், நூல் நயப்புரையை சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கமும் நிகழ்த்தினர்.
சபையின் உப தலைவரும் ஓய்வுபெற்ற அதிபருமான க. தில்லையம்பலம் நூலை வெளியிட்டு வைக்க, நூலின் முதற் பிரதியை தொழிலதிபர் இ. ச. பே. நாகரத்தினமும் சிறப்புப் பிரதியை ச. சிவஞானமும் பெற்றுக்கொண்டனர்.
கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீசுவரக்குருக்களின் மூன்றாம் ஆண்டு நினைவை முன்னிட்டு மணிவாசகர் சபையினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பேச்சு, பண்ணிசை, திருக்குறள் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.
(ம-250)

வீதி துப்புரவாக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 8
சண்டிலிப்பாய் பகுதியில் நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாமல் பற்றைக் காடுகளாக இருந்த வீதிகள் தற்போது சீரமைக்கப்பட்டுள்ளன.
வடக்கு உலக்காவளை வீதி, மண்டுமண்டை வீதி, விளாவெளி வீதி, விளாவெளி விவசாயிகள் வீதி என்பனவற்றில் மக்களின் போக்கு வரத்துக்கு இடையூறாக நீண்ட காலமாகப் பற்றைகள் இருந்தமை இந்தப் பற்றைகள் வலிதென்மேற்கு பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான ச. அனுசனின் முயற்சியால் அண்மையில் துப்புரவாக்கப்பட்டன.
(ம-63)

ஒளி விழாக்களும் பரிசளிப்பு விழாக்களும்

யாழ். இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.
கல்லூரி அதிபர் சதா நிமலன் தலைமையில் இடம்பெற்ற விழாவில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக சிவா ராஜேந்திரம் (பொறியியலாளர் ஆஸ்திரேலியா) கலந்து சிறப்பித்தார்.

பரமேஸ்வரா வித்தியாலம்

யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை அதிபர் த.செல்லக்குமார் தலைமையில் இடம் பெற்றது.
விழாவுக்கு முதன்மை விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் மு.கனகேஸ்வரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ்.திரவியராசா கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை

மிருசுவில் றோமன் கத்தோலிக்கதமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வு கடந்த திங்கட் கிழமை நண்பகல் 11 மணிக்கு பாடசாலையின் அதிபர் க.சத்தியானந்தன் தலைமையில்நடைபெற்றது.
இந்த விழாவில் முதன்மை விருந்தினராக செபமாலைத் தாசர் சபையின் மாகாணத் தலைவர் அருட்தந்தை ஜெயசீலன் கலந்து சிறப்பித்தார். ஒளிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலம்

கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் கா.கணேச பாலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.
இந்தவிழாவில்முதன்மை விருந்தினராக வடமாகாண பிராந்திய அலுவலக தேசிய சேமிப்பு வங்கி நிறைவேற்று அலுவலர் திருமதி மிதிலா மயூரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி நிருபராணி அமிர்தலிங்கம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன், மதிப்புறு விருந்தினராக துசா பல்மூக்கு கண்ணாடியக உரிமையாளர் லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர் லயன் ரி.மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மிருசுவில் றோ.க.பா.

மிருசுவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றன.
பாடசாலை அதிபரின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மிருசுவில் பங்குத் தந்தை, பிரதேச பொதுச் சுகாதாரப்பரிசோதகர்கள் சூ.குணசாந்தன் மற்றும் அ.அல்பிரட் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(ம-9,159,7,8,422)

யாழ். நகரப் பகுதிக்குட்பட்ட 3 உணவகங்களுக்குச் சீல்

வலி.தென்மேற்கு, நவ. 8
யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் மேலும் மூன்று உணவகங்களுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது. குருநகர் பகுதியில் சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் இயங்கி வந்த இரு வெதுப்பகங்கள் உட்பட ஆறு உணவகங்களின் உரிமையாளர்களுக்கு 65 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான் அவற்றில் மூன்று உணவகங்களை உடனடியாக மூடிச் சீல் வைக்குமாறு உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சுரேஸ்குமார் கடந்த 30ஆம் திகதி குருநகர் பகுதியிலுள்ள உணவகங்களையும் வெதுப்பகங்களையும் சோதனைக்கு உட்படுத்தியபோது இரு வெதுப்பகங்களும் 4 உணவகங்களும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் இயங்கி வந்தமை தெரியவந்தது. இதையடுத்து அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக சுகாதாரப் பரிசோதகரால் யாழ். நீதிமன்றத்தில் கடந்த 2ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வழங்கு உடனடியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உரிமையாளர்களுக்குத் தண்டம் விதித்த நீதவான், மூன்று உணவகங்களை உடனடியாக மூடிச் சீல் வைக்குமாறும் உணவகங்களின் நிலமை குறித்து சுகாதாரப் பரிசோதர்களின் அறிக்கை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின் உணவகங்கள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

(ம-115)

கந்த சஷ்டி உற்சவங்கள்

யாழ்ப்பாணம், நவ. 8
ஸ்கந்த சஷ்டி உற்சவத்தின் போது, யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால், 'ஆறுபடை வீடுகள்' என்ற தலைப்பில், ஞானவேள்வி தினந்தோறும் மாலை 6.45மணி முதல் 7.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள 'ஞானவேல்' ஆச்சிரமத்தில் நடைபெற உள்ளது.

☆ ☆ ☆

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் அருள்மிகு கதிரேசன் கோவில் என வழங்கும் அருள்மிகு வள்ளி தேவசேனாசமேத செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் வருடாந்த ஸ்கந்த சஷ்டி திருவிழாக்கால சிறப்புச் சொற்பொழிவுகள் ஆலயத்தின் முதன்மை மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை மாலை 4.30 மணிக்கு க.நிஜலிங்கத் தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.
இன்று சைவப்புலவர் கந்தசத்தியதாசன் 'தன் வினை தன்னைச் சுடும்' என்னும் விடயப் பொருளிலும், நாளை சைவப்புலவர் ச.நவநீதன் 'கந்த புராணம் . உணர்த்தும் மும்மலங்கள்' என்னும் விடயப் பொருளிலும், நாளைமறுதினம் மூன்றாம் நாள் சைவப்புலவர் கா.கமலநாதன் 'நிலைமாறும் தேவரை நிலை நிறுத்தும் கந்தன்' என்னும் விடயப் பொருளிலும், எதிர்வரும் ஞாயிறுக்கிழமை நான்காம் நாள் சைவப்புலவர் ச.முகுந்தன் 'திருப்பெரும் வடிவம்' என்னும் விடயப் பொருளிலும், எதிர்வரும் திங்கட்கிழமை ஐந்தாம் நாள் சைவப்புலவர் செ.த.குமரன் 'ஒன்றொரு முதல்வனாகி உறைதரு மூர்த்தி' என்னும் விடயப் பொருளிலும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆறாம் நாள் சைவப்புலவர் பொன்.சந்திரவேல் 'நீதியால் உலகு அளிப்பதே அரசர்தம் நெறி' என்னும் விடயப் பொருளிலும் சொற்பொழிவு ஆற்றவுள்ளனர்.

(ம)

மூத்தோரை மதிப்பளிக்கும் நிகழ்வு

கொடிகாமம், நவ. 8
பன்னாட்டு லயன்ஸ் கழகத்தின் வடமாகாணக் கிளைகள் இணைந்து தீபாவளி நாளில் மூத்தோரை மதிப்பளிக்கும் நிகழ்வை கைதடி சாந்தி நிலையத்தில் நேற்றுமுன்தினம் முன்னெடுத்தன.
லயன் சி.சுந்தரேஸ்வரன் தலைமையில்நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பன்னாட்டு லயன்ஸ் கழக ஆளுநர் லயன் மருத்துவர் வை.தியாகராசா கலந்து கொண்டார். கைதடி சாந்தி நிலையத்தில் தங்கியுள்ள முதியோர்கள் மதிப்பளிக்கப்பட்டுள்ளதுடன் முதியோர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

(ம-9,159)

தீபாவளியை முன்னிட்டு இராணுவத்தினரால் வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வுவடமராட்சிப் பகுதியில்நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

(ம)

யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த, புகையிரத நிலைய அதிபர் க.கலைவேந்தனுக்கு தேசகீர்த்தி விருது சமாதான நீதிவான்களுக்கான அமைப்பால் அண்மையில் வழங்கப்பட்டது.

(ம)

மன்னாரில் 18 சிறுவர்களின் எலும்புக் கூடுகள் இதுவரை மீட்பு

சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவிப்பு

மன்னார், நவ .8
மன்னாரில் இது வரையான அகழ்வுப் பணிகளின் போது கிடைக்கப் பெற்ற மனித எலும்புக்கூடு களில் 18 மனித எலும்புக்கூடுகள் சிறுவர்களுடயவை எனவும், பெண்கள் தொடர்பான விவரங்கள் முழுமையான பரிசோதனையின் பின்னரே தெரிய வரும் எனவும் சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியானது 102ஆவது நாளாக நேற்றும் இடம் பெற்றது.
தொடர்ச்சியாக மழை பெய்கின்ற போதும் மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டும் அப்புறப்படுத்தப்பட்டும் வருகின்றன.
மன்னார் நீதிவான் ரி.சரவணராஜா மேற்பார்வையிலும் சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ச தலைமையிலும் அகழ்வுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.
மனிதப் புதைகுழி வளாகத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த சட்ட மருத்துவ அதிகாரி, நேற்றைய தினத்துடன் 102 ஆவது தடவையாக மனித எலும்புக்கூடுகள் அகழ்வுபணிகள் இடம்பெற்றன. இதுவரை 232 மனித எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதில் 224 மனித எலும்புக்கூடுகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.மேலதிக மனித எலும்புக்கூடுகளைஅப்புறப்படுத்தும் பணிகள் தொடர்சியாக இடம் பெறுகின்றது.
இது வரையான அகழ்வுப் பணிகளின்போது கிடைக்கப் பெற்ற மனித எலும்புக் கூடுகளில்



18 மனித எலும்புக்கூடுகள் சிறுவர்களுடயவை பெண்கள் தொடர்பான விவரங்கள் முழுப் பரிசோதனையின் பின்னரே தெரியவரும் கடந்த வாரத்தில் சந்தேகத்துக்கு உரிய விதமாக சில தடயப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், அதில் மோதிரம் போன்ற ஒரு தடயப் பொருளும், மாபிளை ஒத்த ஒரு தடயப் பொருளும் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
மனிதப் புதை குழியில் இருந்து கிடைக்கப்பெற்ற முக்கிய தடயப் பொருளான மெலிபன் பைக்கற் தொடர்பான அறிக்கையானது நீதி மன்றத்துக்கு நேரடியாக அனுப்பப்பட்டுள்ளதாகவும் தனக்கு அந்த அறிக்கை தொடர்பான விவரங்கள் தெரியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.
(56)



வீதியில் கொட்டப்படும் கழிவுகளால் நோய்கள் பரவும் அபாயம்

வவுனியா,நவ.8
வவுனியாவில் உள்ள பிரதான உள்ளக வீதிகளில் ஒன்றான குட்செட் வீதியின் கரையோரங்களில், வீதியால் சென்று வருபவர்கள், முச்சக்கரவண்டி ,உந்துருளி போன்ற வாகனங்களில் சென்று வருவோர் மூலம் கொட்டப்படும் கழிவுகள் ஊடாக நோய்கள் பரவும் அபாயம் காணப்படுகிறது. தற்போது மழையால் நீர் பாய்ந்து ஓடுவதனால், அருகில் உள்ள கடைகள் குடியிருப்புக்களுக்குள் அழுக்கு நீர் செல்கின்றது.
அந்தப் பிரதேசத்தில் இருக்கும் மக்களால் வவுனியா தெற்குப் பிரதேச சபைக்குத் தெரியப்படுத்தியும், எவ்வித நடவடிக்கையும் இன்றுவரை எடுக்கப்படவில்லை. இந்த வீதியால் தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் பயணம் செய்வது வழக்கமாக உள்ளது. (222)

இலவச வகுப்புக்களை நடத்துவதற்கான நிதி உதவி

முல்லைத்தீவு ,நவ.8
ஒட்டுசுட்டான் வித்தியாபுரம் மாணவர்களுக்கான மேலதிக இலவச வகுப்புக்களை நடத்துவதற்கான நிதி உதவியை வித்தியாபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரிடம் அக்ரட்நிறுவனம் வழங்கியுள்ளது.
வித்தியாபுரம் மாணவர்கள் கல்வியில் மேம்பாட்டை நோக்கி கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாகிகள். மற்றும் மக்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அக்ரட் நிறுவனம் இந்த உதவியை வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
(500)

கலாசார விழா

கொடிகாமம், நவ.8
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் கலாசார் அலுவல்கள் திணைக்களம் பளைப் பிரதேச செயலக கலாசார பேரவையுடன் இணைந்து நடத்தும் கலாசார விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச கலாசார மண்டபத்தில் இடம் பெறும்.
பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான திருமதி ப.ஜெயராணி தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (159, 9)

ஒளி விழா நிகழ்வு

சாவகச்சேரி, நவ. 8
சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஒளி விழா நிகழ்வுகள் இன்று பகல் 11 மணிக்கு கல்லூரி முதன்மை மண்டபத்தில் நடைபெறுமென அதிபர் திருமதி ல.முகுந்தன் அறிவித்துள்ளார். (9-159)

சட்டவிரோத விவசாயத்தைப் பார்க்கச் சென்றவர்கள் மீது தாக்குதல்

மன்னார்,நவ.8
மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் கீழ்ப் பகுதியில் உள்ள நொச்சிக்குளம் புலவில் சட்டவிரோதமான முறையில் விவசாயத்தை மேற்கொண்டவரை விசாரிக்கச் சென்ற பொறியியல் உதவியாளரும், விவசாய அமைப்பின் தலைவரும் தாக்கப்பட்டமைக்கு பொலிஸில் முறையிட்டும் இதுவரை பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லையென விவசாய அமைப்புக்கள் அதிருப்தி அடைந்துள்ளன. மன்னார் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் உள்ள அடைக்கலமோட்டை வாய்க்கால் பகுதியிலுள்ள புலவுக் காணியில் ஒருவர் சட்டவிரோதமாக விவசாயம் மேற்கொள்வதாக கட்டுக்கரைக்குளம் முகாமைத்துவக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட வரை கண்காணிக்க சென்றவர்கள் ஒளிப்படம் எடுத்துள்ளனர் ஒளிப்படம் எடுத்தவர்களை மண்வெட்டியாலும் கைகளாலும் தாக்கியமையால் காயமடைந்தனர். இது தொடர்பாக உயிலங்குளம்பொலிஸ் நிலையத்தில் முறையீடு செய்தும் பொலிஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை இதனையடுத்து மன்னார் மாவட்ட செயலரையும் பொலிஸ் அத்தியட்சகரையும் சந்தித்து மனு வழங்கி முறையீடு செய்வது எனக் கட்டுக்கரைக்குளம் திட்ட முகாமைத்துவக் குழுவினர் தீர்மானம் மேற்கொண்டுள்ளனர். (60)

யானைத்தாக்குதலால் விவசாயி தப்பி ஓட்டம்

வவுனியா,நவ .8
வவுனியா ஓமந்தைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் யானைத்தாக்குதலில் விவசாயி ஒருவர் உயிர் தப்பியுள்ளதுடன், அவரது உந்துருளி சேதமடைந்துள்ளது.
ஓமந்தை இளமருதங்குளம் பகுதியிலுள்ள தனது வயலினைப் பார்வையிடுவதற்காக சென்ற விவசாயி யானை நிற்பதை அறிந்து அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.
சம்பவ இடத்தில் கைவிடப்பட்ட தனது பாவனையிலிருந்த உந்துருளியை தேடிச் சென்றபோது உந்துருளி யானையின் தாக்குதலில் சேதமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.
அண்மைய காலங்களில் யானைகளின் அச்சுறுத்தல்கள் அதிகரித்துக்காணப்படுவதாகவும், காட்டு யானையை யாரோ அப்பகுதியில் கைவிட்டிருக்கலாம் என்றும், இந்த அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த வேண்டும் அந்தப் பகுதி மக்கள் கோருகின்றனர்.

நூல் நிலையத்துக்கு புத்தகங்கள் தேவை

நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராயா வேண்டுகோள்

வவுனியா,நவ .8
வவுனியாவில் கல்வி நிறுவனங்கள் பல இருக்கின்றன, யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம், தொழில்நுட்பக் கல்லூரி, தேசியகல்வியற் கல்லூரி என்பன இருப்பதால் வவுனியா நகரசபைக்குப் புதிய புத்தகங்கள் தேவைப்படுகின்றன. இந்திய அரசால் யாழ். நூலகத்துக்கு வழங்கபட்ட 50 ஆயிரம் புத்தகங்களில், ஆயிரம் புத்தகங்களையாவது வவுனியா நூல் நிலையத்துக்கு பகிர்ந்தளிக்கவேண்டும் என்று இந்திய தூதுவரையும், யாழ். மாநகரசபை முதல்வரிடமும் வேண்டுகோள்விடப்படவேண்டும்.
வவுனியா நகரசபையின் கடந்த மாதாந்த அமர்வில் நகரசபை உறுப்பினர் நா.சேனாதிராசாவால் மேற்படி தீர்மானம் முன்வைக்கப்பட்டு சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
தற்போது வடமாகாண சபை செயலிழந்து போனதால், மாகாணசபை உறுப்பினர்களின்ஆலோசனைகளை பெற்று, மக்களின் தேவைகளை இனம்கண்டு நிறைவேற்றுகின்ற கிராம மட்ட தலைமைத்துவம் முற்றாக ஒழிக்கபட்டுள்ளது. பொதுமக்களுடைய ஆலோசனைகள் அபிவிருத்திகள் தொடர்பாக முன்மொழிவுகள் இல்லாமல் ,அனைத்தும் அதிகாரிகளின் கைகளுக்குச் சென்றுவிடுகிறது. இதை நிவர்த்தி செய்யும் முகமாக வடமாகாண ஆளுநர் வடமாகாண உள்ளூராட்சி மன்றத்தின் தலைவர்கள், உபதலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு முன்னுரிமைகொடுத்து அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அபிவிருத்தி வேலைகளைச் செய்வதுடன், அவர்களை நிகழ்வுகளிலும் ஆலோசனைக் கூட்டங்களிலும் பங்குபற்றுவதற்கும் ஏற்ற ஒழுங்குகளை செய்யவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.
(110)

இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 19.8 அடியாக உயர்வடைந்தது

கிளிநொச்சி, நவ .8
கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 19.8 அடியாக உயர்வடைந்துள்ளது. அண்மைய நாள்களாக நாட்டில் நிலவும் பருவப் பெயர்ச்சி மழை காரணமாக, குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வருகின்றது.



கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப் பெரும் நீர்பாசனக் குளமான இரணைமடுக் குளத்தின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்த வருகின்றது.
குளத்தின் நீர்மட்டம் நேற்று அதிகாலைவரை 19.8 அடியாக பதிவாகியுள்ளது. குளத்திற்கு அதிக நீர் தற்போதும் வருகின்றது . குளம் அபிவிருத்தி செய்யப்பட்டதன் ஊடாக அதிக நீர் தேக்கும் வகையில் உள்ள 22 அடிவரை நீர் உயர்ந்தால் இவ்வருட காலபோகத்தினை 22 ஆயிரம் ஏக்கர்களாக வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும் எனவும் விவசாயிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.
தொடர்ந்தும் நீர் வருவதாலும், மேலும் மழைவீழ்ச்சி கிடைக்கும் என்பதாலும் குளத்தின் வான் கதவுக்ள் திறக்கலாம் எனத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் இரணைமடு விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
(6)

கம்போடிய நிபுணர்கள் முகமாலைக்கு வருகை

அபாயப் பிரதேசங்களைப் பார்வையிட்டனர்

கிளிநொச்சி,நவ .8
கண்ணி வெடி அகற்றும் கம்போடியப் பிரிவினர் கிளிநொச்சி முகமாலை பிரதேசத்துக்கு வருகை தந்துள்ளனர்.
நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் ஒன்பது பேர் அடங்கிய, கண்ணி வெடி அகற்றும் கம்போடியக் குழுவினர் முகமாலையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, கண்ணி வெடி அகற்றும் பணியை பார்வையிட்டுள்ளனர்.
கம்போடியாவும் உள்நாட்டு போரின் காரணமாக அதிகளவு கண்ணி வெடி அபாயம் நிறைந்த நாடாக காணப்படுவதனால், இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கண்ணி வெடி அகற்றும் செயற்பாடுகளைப் பார்வையிட இந்தக் குழுவினர் வருகை தந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
தேசிய கண்ணிடி வெடி அகற்றும் நிலையத்தின் ஏற்பாட்டில் இந்தக் குழுவினர் வருகை தந்துள்ளனர்.
(214)

ஓதுவார்கள் மதிப்பளிப்பு

பளை, நவ .8
இயக்கச்சி மல்வில் கிருஸ்ணன் கோவிலில் நான்காயிரம் திவ்வியப் பிரபந்தம் பாடிய் ஓதுவார்கள் இருவர் கோவில் நிர்வாகத்தினரால் நேற்று முன்தினம் மதிப்பளிக்கப்பட்டனர்.
வட்டக்கச்சியைச் சேர்ந்த செ.சுப்பிரமணியம் கரந்தாயைச் சேர்ந்த திருமதி பூரணம் செல்லையா ஆகிய இருவருக்கும் பொன்னாடை போர்த்திப் பொற்கிளி வழங்கப்பட்டது .
கோவில் நிர்வாகத்தின் சார்பில் இராசரத்தினம், திருமதி கனகம்மா சதாசிவம் ஆகியோர் பொன்னாடை போர்த்த சி.சுந்தரலிங்கம் பொற்கிளி வழங்கி மதிப்பளித்தார்.
(9, 159)

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின்
புதிய பணிப்பாளர் கடமைகளை பொறுப்பேற்றார்

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்ட மருத்துவக் கலாநிதி தங்கராஜா காண்டீபன் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையில் நேற்று உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.
இவர் நீண்ட கால இடைவெளியின் பின்னர் கிளிநொச்சி மருத்துவமனையில் கடமையேற்ற நிரந்தரப் பணிப்பாளர்.
யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரியின் பழைய மாணவரான த. காண்டீபன் தமது மருத்துவக் கல்வியை யாழ்ப்பாண மருத்துவபீடத்திலும், மருத்துவ முதுமாணிக் கற்கை நெறியினை கொழும்பு மருத்துவபீடத்திலும் பூர்த்தி செய்துள்ளார். இவர் அரச மருத்துவர் சங்கத்தின் வடமாகாண ஒருங்கிணைப்பாளராக இருக்கின்றார்.
(214)

மருத்துவ அதிகாரிக்கு எதிராக விசாரணை

வவுனியா,நவ.8
மாங்குளம் மருத்துவமனையின் மருத்துவ அதிகாரிக்கு எதிராக வவுனியா மனித உரிமைகள் ஆணைக் குழுவில் கடந்த 5ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டுள்ளது.
வவுனியா கனகராயன்குளத்தில் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகிய நபரொருவருக்கு, உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கவில்லை எனத் தெரிவித்து, பாதிக்கப்பட்ட நபரான பேரம்பலம் வசந்தகுமார் மற்றும் அவரது மனைவி வ.சர்மிளா ஆகியோர் வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவிற்கு வழங்கிய முறைப்பாட்டையடுத்து இந்த விசாரணை முன்னெடுக்கப் பட்டது.
வவுனியா கனகராயன் குளத்தில் முன்னாள்ப் போராளியான பே.வசந்தகுமார் குடும்பத்தினர் மீது கடந்த ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி ,கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியின் தலைமையில், சிவில் உடையில் சென்ற பொலிஸார் தாக்குதல் நடத்தியிருந்தனர்.
பொலிஸாரின் தாக்குதலில் கடுமையாகப் பாதிப்படைந்த பே.வசந்தகுமார் மாங்குளம் மருத்துவமனையில்சேர்க்கப்பட்டார்.
அங்கு அவருக்கு உரிய முறையில் சிகிச்சைவழங்காது பொலிஸாரிடம் மீண்டும் கையளித்தனர். இது தொடர்பில் மருத்துவ அதிகாரிக்கு எதிராகச்சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்எனத் தெரிவித்து, வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டது.
(110)

கல்விக்கு பண உதவி

கொடிகாமம் ,நவ. 8
கல்விக்கு கரம் கொடுக்கும் நோக்கில்,
ஜேர்மனி ஸ்ருட்காட் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் உறுப்பினர்களால் பண உதவி வழங்கப்பட்டுள்ளது.
பிரான்சில் வசிக்கும், தெ.சுதாகுமார் மற்றும் பே.கோபிகா ஆகிய இருவரும்,
வறுமையின் காரணமாக படிப்பைத் தொடர முடியாமல் இருந்த கிளிநொச்சியைச் சேர்ந்த எ.பிரவீன், எ.சஞ்சிகா ஆகியோருக்கு மாதந்தம் ஐயாயிரம் ரூபாவைப் படிப்பு முடியும் வரை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.
முதற்கட்ட உதவி நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.
(159)

யாழ். நகர் உள்ளிட்ட இடங்களில்

சட்டவிரோதமாகக் குப்பை கொட்டுபவர்கள் தண்டனையை எதிர்கொள்ளத் தயாராகவும்

மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாண நகரத்தில் சட்டத்துக்கு முரணாக குப்பைகள் கொட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாணப் பொலிஸ் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வர்ணஜெயசுந்தர தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்பான கூட்டத்தில் அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நகரத்தின் முதன்மையான ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ் வீதி மற்றும் முதன்மை வீதி உட்பட பல்வேறு முக்கிய வீதிகளிலும் பொதுமக்களால் குப்பைகள் கொட்டப்படுவதைப் பொலிஸார் தடுக்கவேண்டும் என்று பலரும் வலியுறுத்திவருகின்றனர்.

பொதுமக்கள் பொருத்தமில்லாத இடங்களில் குப்பைகளைக் கொட்டுவதோடு உரிய முறைமையின்றிக் கண்டகண்ட இடங்களிலெல்லாம் வீசிவிடுகின்றனர்.

கொழும்பு உள்ளிட்ட சில நகரங்களில் பொதுமக்கள் குப்பைகளைக் கொட்டுவதற்கென பிரத்தியேகமான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாநகரசபை, நல்லூர்ப் பிரதேச சபை ஆகியன பொதுமக்கள் குப்பைகளைக் கொட்டுவதற்குப் பொருத்தமான இடங்களை உடனடியாக அடையாளப்படுத்திக்கொடுக்க வேண்டும். குப்பைகளைக் கொட்டுவதற்கு இடங்கள் அடையாளப்படுத்தப்பட்ட பின்னரும் பொதுமக்கள் வீதிகளில் குப்பைகளைக் கொட்டினால் பொலிஸார் உடனடியாகச் சட்டநடவடிக்கை எடுப்பார்கள் என்று அவர் தெரிவித்தார்.

37 வர்த்தகர்கள் தண்டம் செலுத்தினர்

சட்டத்துக்குப் புறம்பான வகையில் வர்த்தகநிலையங்களின் கழிவுகளை வெளியேற்றிய 37 வர்த்தகர்கள் மீது இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் குப்பைகளைக்கொட்டிய 7 பேர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. தடைசெய்யப்பட்ட பொலித்தீன்களைப் பாவித்த 40 பேர் சட்டநடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டனர். 4 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகளில் பொலிஸார் டெங்குப் பரிசோதனை நடத்தி 26 வீடுகளுக்குச் சிவப்பு எச்சரிக்கை விடுத்தனர் என்றும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில், வெளிநாடுகளில் வசிப்பவர்களின் காணிகள் சுத்தமில்லாதுவிடினும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வெளிநாடுகளில் வசிப்பவர்களின் காணிகளில் சட்டவிரோதமாகக் குப்பைகளை போடுபவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மூத்த பொலிஸ் அத்தியட்சகர் வர்ணஜெயசுந்தரவின் தலைமையில் யாழ்ப்பாண பொலிஸ்நிலைய கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு கூட்டத்தில் யாழ்ப்பாணப் பிராந்தியத்துக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பொதுசுகாதார பரிசோதகர்கள், கிராம அலுவலர்கள் கலந்துகொண்டிருந்தனர். (4)

புங்குடுதீவு வல்லன் பகுதியில்

கற்றாழைச் செடிகளை வெட்டியோர் சிக்கினர்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாணம் புங்குடுதீவு வல்லன் பகுதியில் வளரும் கற்றாழைச் செடிகளை வெட்டிக்கொண்டு சென்றனர் என்று தென்னிலங்கையைச் சேர்ந்த இருவர் பிரதேச மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றது. இருவரும் அங்கு வளரும் கற்றாழைச் செடிகளை வெட்டி பட்டா ரக வாகனத்தில் ஏற்றிச் சென்றபோது பிரதேச மக்கள் அவதானித்துள்ளனர். அவர்களின் வாகனத்தை வழிமறித்துப் பிடித்தனர். கடல் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு அந்தப் பகுதியில் உள்ள கற்றாழைச் செடிகளை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் கற்றாழைச் செடிகளை வெட்டிக் கொண்டு செல்ல முற்பட்டவர்கள் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

அவர்கள் கிராம அலுவலரின் உதவியுடன் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் கூறினர். (4,7)

ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்டோரை இனங்காண நடவடிக்கை இல்லை

வடக்கு மாகாண சபை மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 8

வடக்கு மாகாணத்தில் ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனம் காணும் முறை மற்றும் சிகிச்சை முறை தொடர்பில் வடக்கு மாகாண சபை ஆக்கபூர்வமான எந்தநடவடிக்கையும் எடுக்கவில்லை என்று துறைசார்ந்தவர்கள்- கவலை தெரிவிக்கின்றனர்.

ஓட்டிசம் என்று சொல்லப்படும் மூளை மற்றும் நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்ட சிறுவர்களை வடக்கு மாகாணத்தில் இனங்காண முடியாது. அதற்குரிய சிகிச்சை முறை தொடர்பில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. 2017ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சராக இருந்த சத்தியலிங்கத்தின் முயற்சியால் மருத்துவர்கள், மருத்துவ ஆலோசகர்கள் கொண்ட குழு ஓட்டிசத்துக்கான கொள்கையைத் தயாரித்தது. 17 பக்கங்களை கொண்ட இந்தக் கொள்கையில் ஓட்டிசம் உள்ள சிறுவர்களை இனங்காணுதல், அவர்களுக்கான சூழலை உருவாக்கல், சிகிச்சை முறைகளை வழங்கல் போன்ற விடயங்கள் உள்ளடங்கிய கொள்கை 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி வெளியிடப்பட்டது.

வடக்கு மாகாண சபையில் கொள்கை ஆவணம் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்படுவதன் மூலமாக கொள்கையை நடைமுறைப்படுத்த முடியும். ஐந்து ஆண்டுக்காலப்பகுதிகள்கொள்கை ஆவணத்தின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இவ்வாறான சிறுவர்களை இனங்கண்டிருக்க முடியும். ஆனால்தயாரிக்கப்பட்ட கொள்கை சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. கடந்த மாதம் 23 ஆம் திகதியுடன் வடக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு விட்டது. வடக்கு மாகாணத்தில் இவ்வாறான சிறுவர்களை இனங்காண முடியாது. இனங்காணவே முடியாது என்றால் அவர்களுக்கு என்ன தேவை, சிகிச்சை முறை என்ன என்பது தொடர்பில் ஆராய்வதில் எந்தப் பயனும் இல்லை.

வடக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பெற்றோர்கள் வேறு சிகிச்சைகளுக்கு மருத்துவ மனைகளுக்குக் கொண்டு வரும் சந்தர்ப்பத்தில் அவர்கள் இனம் காணப்பட்டு மாதவம் அமைப்பின் ஊடாக அவர்களுக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டுவருகின்றன. வடக்கு மாகாணத்தில் சுமார் 100 வரையானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இன்னமும் எத்தனையோ சிறுவர்கள் இனங்காணப்படாதுள்ளனர்.

அவர்களை இனங்காண்பதற்குச் சிகிச்சை வழங்குவதற்கு வடக்கு மாகாணத்தில் கொள்கை ரீதியான எந்த நடவடிக்கையும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)



கௌரிவிரத காப்புக்கட்டு, வழிபாடு வடக்கில் சிறப்பாக இடம்பெற்றன

யாழ்ப்பாணம், நவ. 8

இந்துக்கள் முக்கியத்துவம் கொடுத்துக் கடைப்பிடிக்கும் விரதங்களில் ஒன்றான கௌரி விரதத்தின் இறுதிநாளான நேற்று வடக்கில் அநேகமான இடங்களில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

ஆண்களும் பெண்களும் பக்திபூர்வமாக நேற்று வழிபாடுகளில் ஈடுபட்டுக் காப்புக் கட்டினர். இவற்றை அநேகமான கோவில்களில் அவதானிக்க முடிந்தது.

ஏனைய கோவில்களுடன் ஒப்பிடும்போது குறிப்பாக அம்மன் கோவில்களில் அதிகளவான எண்ணிக்கையில் பக்தர்களைக் காண முடிந்தது.

கிளிநொச்சியில் உள்ள பல ஆலயங்களில் குறிப்பாக சிறப்பாக இடம்பெற்று நிறைவுபெற்றது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் கௌரி விரதம் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த விரதம் 21 நாள்கள் கடைப்பிடிக்கப்படுகிறது.

முதன்மைக் குரு கீர்த்தி ஸ்ரீவாசன் குருக்கள் தலைமையில் பூசைகள் இடம்பெற்றன. இவ்வாறே ஏனைய மாவட்டங்களிலும் இந்தப் பூசைகளும் வழிபாடுகளும் காப்புக் கட்டுவதும் சிறப்பாக இடம்பெற்றன. (4,214,17)

குகேந்திரன் சபை உறுப்பினராகலாமா? மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு இன்று

யாழ்ப்பாணம், நவ. 8

ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வேலும்மயிலும் குகேந்திரன் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ளதால் மாநகர சபையில் அங்கம் வகிக்க முடியாது எனத் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் இன்று வழங்கப்படவுள்ளது.

குகேந்திரன் (ஜெகன்) இரட்டைக் குடியுரிமையைக் கொண்டுள்ளதால் உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்க முடியாது இதனால் அவரின் மாநகர சபை உறுப்புரிமை செல்லுபடியற்றது என்று தேர்தல் ஆணையகத்துக்கு உத்தரவிடக்கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர் நடுவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்குத் தொடுநர் தரப்பில் அரசதலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், நிரான் அங்கிற்றல் ஆகியோர் முற்பட்டிருந்தனர்.

இருதரப்பு வாதமும் நிறைவுற்று எழுத்து மூலமான சமர்ப்பணத்துக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இருதரப்புச் சட்டத்தரணிகளும் தத்தமது எழுத்துமூல சமர்ப்பணத்தை ஒக்பரோபர் 12ஆம் திகதிக்கு முன்பாக முன்வைக்க வேண்டும் என்று கோரப்பட்டது.

எதிர் மனுதாரர் சார்பில் எழுத்து மூல சமர்ப்பணம் முன்வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் இடம்பெற்ற வழக்கை ஆராய்ந்த நீதிமன்று நவம்பர் 8ஆம் திகதிக்கு (இன்று) தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தது. (4,105)

யாழ்.பல்கலையில் இன்று கலந்துரையாடல்

ருக்கி பெர்னாண்டோ உரை

யாழ்ப்பாணம், நவ. 8

இலங்கையில் சீர்திருத்த செயற்பாட்டு வாதத்தின் எதிர்காலமும் சிவில் சமூக அல்லது மாணவர் செயற்பாட்டு வாதத்தின் பங்கும் என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று இடம்பெறும்.

கலைப்பீட அறை இலக்கம் 207இல் பிற்பகல் 2 தொடக்கம் 3.30 வரை இது இடம்பெறும்.

இதில் ருக்கி பெர்னாண்டோ உரையாற்றவுள்ளார்.

அவர் மனித உரிமைப் பணிகளுக்காக 2014இல் அருட்பணி பிரவீன் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட மக்களின் போராட்ட செயற்பாட்டாளர் ஜெயக்குமாரி ஆகியோருடன் கைது செய்யப்பட்டு பின்னர் பன்னாட்டு அழுத்தத்தால் விடுவிக்கப்பட்டார். 1997இல் இருந்து வடக்கு - கிழக்கு தொடர்பிலான மனித உரிமை விடயங்களில் முன்னரங்கில் நின்று பணியாற்றியவர். (4)

இரணைமடுக் குளத்தில்

நன்னீர் மீன்பிடிக்க இடம் அமைப்பதை நிறுத்துமாறு மாவட்டச் செயலர் உத்தரவு

பயிர்ச் செய்கைக்குப் பாதிப்பு என்பதால் நடவடிக்கை

கிளிநொச்சி, நவ. 8

இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன்பிடி என்னும் பெயரில் மேற் கொண்ட வாய்க்கால் அமைக் கும்பணியை உடனடியாகநிறுத் துமாறு மாவட்டச்செயலர் நீர்ப்பா சனத் திணைக்களத்துக்கு உத்த ரவிட்டுள்ளார்.

புதிய வாய்க்கால் அமைக்கும் பணியால்ஒட்டுமொத்தவிவசாயி களின் வாழ்வாதாரம் பாழடிக்கப் படும் நிலை ஏற்படும் என்று விவ சாய சம்மேளனம் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அரு மைநாயகத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்றநிலையில்பணி நிறுத்தப்பட்டுள்ளது.

இரணைமடுக் குளத்தின் உட்பு றத்தில் வலது கரைப் பக்கமாக வாய்க்காலின் அருகே நன்நீர் மீன்பிடித் திட்டத்தின் கீழ் வாய்க் கால் அமைக்கும் புதிய திட்டத்துக்கான சகல ஏற்பாடுக ளும் பூர்த்தியாக்கப் பட்டுப் பணி கள்தனியார்நிறுவனம்மூலமாக ஆரம்பிக்கப்பட்டன.

விவசாயத்துக்குத் தண்ணீர் பாச் சும் முதன்மை வாய்க்காலுக்கு மிகஅருகில்10மீற்றர்இடைவெளி யும் இன்றி அந்தப் பணி இடம் பெறுவதால் மிகவிரைவில் முதன்மைவாய்க்கால்முழுமை யாக அழிவடையும் ஆபத்து உள்ளது என்று சுட்டிக்காட்டப்ப டுகிறது. வாய்க்காலில் தேங்கிய மண் அனைத்தும் அகற்றப்பட்டு பெரும்நிதிச்செலவில்கடந்தவரு டமே வாய்க்கால் சீர்செய்யப் பட்டது. அவ்வாறிருக்க குளத்தில் நன்னீர் மீன்பிடிக்காக அமைக் கப்படும் வாய்க்காலில் அகழப்ப டும் சேற்று மணல் முதன்மை வாய்க்காலை அடைக்கக்கூடிய நிலை காணப்படுகின்றது. போதியதிட்டமிடலோவிவசாயிக ளின் ஆலோசனையோ பெறப்ப டாது மேற்கொண்ட திட்டத்தில் குறைந்த பட்சம் நீர்ப்பாசனத் திணைக்களமேனும் தொடர் கண்காணிப்பில்ஈடுபட்டிருந்தல் வேண்டும். இவை எதுவுமின்றி மேற்கொண்ட பணியால்பெரும் ஆபத்தே ஏற்படவுள்ளது.

குளத்துக்கு அதிகநீர்வரத்துஏற்ப டும்பட்சத்தில்விவசாயநீர்ப்பாச்சல் வாய்க்காலேமுழுமையாகஅழி வடையும் நிலை ஏற்படலாம்.

முதன்மைவாய்க்காலை உடன டியாகச்சீர்செய்யமுடியுமாஎன்று நாம் ஆராய்ந்தபோதும் அதற் கானசாத்தியப்பாடுகளும்இருக்க வில்லை. காரணம், தற்போது மழை ஆரம்பித்துவிட்டதோடு கனரகவாகனங்களைக்கொண்டு செல்லும் மார்க்கத்தையும் திட் டத்தை மேற்கொள்வோர் விட்டு வைக்கவில்லை என்று தெரிவிக் கப்படுகிறது. இது தொடர்பில் மாவட்டச் செயலாளர் ஆராய்ந்து உடனடியாகச் சகல தரப்புக் கூட் டத்துக்கும் ஏற்பாடு செய்வதோடு வாய்க்காலைச் சீர் செய்வதற்கு உரிய நடவடிக்கையை உடன் எடுக்குமாறுஇரணைமடுவிவசா யிகள் சம்மேளனச் செயலாளர் மாவட்டச் செயலாளருக்கு எழுத் தில் சமர்ப்பித்தார்.

இவைதொடர்பில்மாவட்டநீர்ப்பா சனப் பொறியியலாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, இது தொடர்பில் உடனடியாகவே கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.

"குறித்த விடயம் தொடர்பில் கடந்த வாரம் ஆராய்ந்தபோது புதிய வாய்க்கால் அமைப்புப் பணி காரணமாக விவசாயப் பயன்பாட்டுக்கான வாய்க்காலுக் குப் பாதிப்பு ஏற்படும் நிலையுள் ளது.

எனவேகுறித்தபணியைஉடன டியாக நிறுத்துமாறு பணித்துள் ளேன்" என்று மாவட்டச் செயலா ளர் தெரிவித்தார். (4,105)

கண்ணீருக்கும் தண்ணீருக்கும் மத்தியில் போராடும் எமக்கு உரிய தீர்வு தாருங்கள்

முல்லையில் போராடும் தரப்புக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, நவ. 8

கண்ணீருக்கும் தண்ணீருக்கும் மத்தியில் போராடிக் கொண்டிருக்கிறோம். எமது கோரிக்கைகளை நிறைவேற் றுங்கள், என்று கேப்பாபிலவில் காணி விடுவிப்புக்கோரிப் போராடுவோரும், காணாமல் ஆக்கப்பட்டோரைத்தேடும் உறவுகளும் கவலையுடன் தெரிவித்தனர்.

எமது உறவினர்களை எம்மிடம் ஒப்படையுங்கள் என்று 610 ஆவது நாளாக முல்லைத்தீவில் போராடி வருவதாக காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவினர்கள் தெரிவித் துள்ளனர்.

காணிவிடுவிப்புக்காகத் தொடர்ந்து போராட்டம் மேற்கொண்டுவரும் கேப்பாபிலவு மக்கள் தங்கள் பூர்வீக நிலங்களை விடுவித்தால்தான் எங் களுக்கான பாரம்பரிய கொண்டாட் டங்களை நடத்தமுடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

"அரசு என்னதான் அறிவித்தாலும் எங்கள் நிலத்தில் நாங்கள் குடியேற வேண்டும், எங்கள் ஆலயங்களில் நாங்கள் வழிபாடுசெய்ய வேண் டும். அதுவரை எங்களுக்கான தீபா வளியோ தமிழ்ப் பண்டிகைகளோ கிடையாது. அரசு உரிய தீர்வைத் தரும்வரை எமது போராட்டம் தொட ரும்" என்று அவர்கள் மேலும் தெரி வித்தனர்.

(4,ரி3)

பன்னாட்டு கணக்கீட்டுத் தினம் யாழ்.பல்கலையில்

யாழ்ப்பாணம், நவ. 8

பன்னாட்டுக் கணக்கீட்டுத் தினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தில்நாளைமறுதினம் சனிக்கிழமை காலை இடம்பெறவுள்ளது.

பல்கலைக்கழக கைலாசபதி கலை யரங்கில் இந்த நிகழ்வு நடைபெற் றுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தின ராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர். விக்னேஸ்வரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக முகாமைத்து வக் கற்கைகள் வணிகபீடாதிபதி பேராசிரியர் ரி.வேல்நம்பி, மதிப் புறு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலக முதன்மைக் கணக்காளர் கில்வாட்குணம், பட்ட யக் கணக்காளர் வி.அரியரத்னம் ஆகியோர் கலந்துகொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

காணி சீர்திருத்த ஆணைக்குழு வழங்கிய காணிகளுக்கான ஆவணம் அடுத்தவருடம்

யாழ்ப்பாணம், நவ. 8

வடக்கு மாகாணத்தில் காணி சீர்தி ருத்த ஆணைக்குழுவழங்கியகாணி களுக்கான உரிமப் பத்திரங்கள் அடுத்த வருட நடுப்பகுதிக்குள் வழங் கப்படும்.

அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன என்று யாழ்ப்பாணப் பிராந்திய காணி சீர்திருத்த ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட் டதாவது,

வடக்கு மாகாணத்தில் காணி இல் லாத பொதுமக்களின் நன்மைகருதி அரசகாணிகள் வழங்கப்பட்டுள்ளன. காணி சீர் திருத்த ஆணைக்குழுவுக் குச் சொந்தமான காணிகள் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக் கேற்ப கால் ஏக்கர் தொடக்கம் 2 ஏக்கர் வரை வழங்கப்பட்டுள்ளன.

முன்னர் வழங்கப்பட்ட காணிகள், ஆணைக்குழு மீள உருவாக்கப்பட்ட பின்னர் அளவீடு செய்யப்பட்டுள்ளன. அதன்பின்னர் தற்காலிக உரிமப் பத் திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் வீட் டுத்திட்டம், மலசலகூடம் அமைத்தல் காணி பயன்பாட்டு நிதியாக வருடம் ஒன்றுக்கு ஒரு ஏக்கருக்கு 630 ரூபா வீதம் காணி வழங்கப்பட்ட நாளில் இருந்து உரிமையாளர் செலுத்த வேண்டும். அந்த நிதி தற்போது உரி மையாளர்களால் செலுத்தப்பட்டு வரு கிறது.

கிளிநொச்சி மன்னார் மாவட்டங்களி லேயே அதிமாகக் காணிகள் வழங்கப் பட்டுள்ளன. அடுத்த ஆண்டின் நடுப் பகுதிக்குள் சுமார் 3 ஆயிரத்து 500 பேருக்குக் காணி உரிமப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

அதற்கான வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காணி பயன் பாட்டு நிதி செலுத்தாதவர்களுக்கு அது பற்றிக் கடிதங்கள் மூலமாக அறிவிக் கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட் டது. (4,7)

வடக்கு மருத்துவமனைகளில்

சிறுநீரகங்களைச் சுத்திகரிக்கும் இயந்திரங்கள் இயங்க ஆரம்பம்

வடக்கு சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம், நவ. 8

வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட மற்றும் ஆதார மருத் துவ மனைகளுக்கு வழங்கப் பட்ட சிறுநீரக சுத்திகரிப்பு இயந்தி ரங்கள்தற்போதுபயன்பாட்டுக்கு வந்துள்ளன என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவித்த தாவது,

சிறுநீரகம் செயலிழந்தவர்க ளுக்கான சுத்திகரிப்புமுறை யின் அவசியத்தைக் கருத்திற் கொண்டு கொழும்பு சுகாதார அமைச்சு ஆரம்பத்தில் இரண்டு இயந்திரங்களை மருத்துவ மனைகளுக்கு வழங்கியது. மாவட்ட மற்றும் ஆதார மருத்து வமனைகளுக்கு வழங்கப்பட்ட இந்த இயந்திரம் ஊடான சிகிச் சையை ஆரம்பிப்பதற்கு மருத்து வமனைகளில் இடங்கள் மற் றும் ஆளணிப் பற்றாக்குறை நிலவியது. அவை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுச் சிகிச்சை கள் ஆரம்பமாகியுள்ளன.

தனியார் மருத்துவமனைகளில் ஒருமுறை இந்தச் சிகிச்சையை மேற்கொள்ள சுமார் ஒரு லட்சம் ரூபா வரையில் தேவைப்படும். சிறுநீரகம் செயலிழந்தவர் களின் சிறுநீரக தன்மைக்கேற்ப அவர்களின் சிறுநீரகம் மாற்றப் படவேண்டும். அல்லது இவ்வா றான சுத்திகரிப்பு முறைகளை மேற்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணம் மற்றும் வவு னியா மாவட்ட மருத்துவமனை களில் ஏற்கனவே இந்தச் சிகிச்சை முறைகள் நடைமுறை யில் உள்ளன. ஆனாலும் அதி கமான நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கவேண்டியுள் ளது. கொழும்பு சுகாதார அமைச்சுகிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட மருத் துவ மனைகளுக்கும், தெல்லிப் பழை, பருத்தித்துறை, சாவகச் சேரி, செட்டிகுளம் ஆதார மருத் துவ மனைகளுக்கும் தலா இரண்டு இயந்திரங்கள் வீதம் வழங்கப்பட்டன. அவை தற் போது பயன்பாட்டுக்கு வந்துள் ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

க.பொ.த சாதாரணதர பரீட்சை 3ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 8

இந்த வருட ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை கள் எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரி வித்துள்ளது. 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு சமய பாடங்களுடன் பரீட்சை ஆரம்பமாகி டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி புதன் கிழமை நிறைவடையும்.

கடந்தமாதம் 18 ஆம் திகதி ஆரம்பமான அழ கியல் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சை கள் நேற்றுமுன்தினம் நிறைவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட் டது. (4,7)

தனியார் பேருந்தில் பலர் முன்பாக தவறாக நடந்துகொண்ட இளம் ஜோடி

அவர்களை இறக்கிவிட்ட நடத்துநருக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், நவ. 8

தனியார் பேருந்துக்குள் தவறான நட த்தையில்ஈடுபட்டனரென்று இளைஞனும் இளம்பெண்ணும் நடத்துநரால் பேருந்தி லிருந்து கீழே இறக்கிவிடப்பட்டனர். நடத்து நருடைய இந்தச் செயலைப் பேருந்தில் பயணித்த மக்கள் பாராட்டினர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகருக்குச் செல்லும் 782 இலக்கப் பேருந்தில் சில நாள்களுக்கு முன்னர் மாலை 5. 45அள வில் சம்பவம் இடம்பெற்றது.

பேருந்தின் பின் ஆசனத்தில் அமர்ந் திருந்த இருவரும் பேருந்தில் பயணித்த வர்கள் முகம்சுழிக்கும் அளவுக்கு நடந்துகொண்டுள்ளனர்.

பேருந்தில் சிறுவர்களும் பயணித்திருந்த னர். பேருந்தில் பலரும் உள்ளனர் என் றும் கருதாது, இருவரும் தொடர்ந்தும் இவ்வாறு நடந்துள்ளனர்.

இது குறித்து பேருந்து நடத்துநருக்கு அறி விக்கப்பட்டது. நடத்துநரும் அதனைக் கவனிக்கத் தவறவில்லை. பேருந்து சித் தன்கேணிப் பகுதியை அண்மித்தபோது "பொது இடத்தில் மற்றவர்கள் அருவருக் கத்தக்க செயலை செய்யவேண்டாம், உங்களுடைய செயற்பாட்டை உங்க ளுக்குள்ளேயே வைத்திருங்கள். பேருந் தில் பயணிக்கும் சிறுவர்களும் நாளை உங்களுடைய செயற்பாடுகளைக் கண்டுநடந்துகொள்வார்கள் கீழே இறங் குங்கள்" என்று தெரிவித்து இருவரையும் பேருந்திலிருந்து இறக்கினார். குறித்த நபர்களுடன் கூடவந்த பெண் ஒருவரும் பேருந்திலிருந்து இறங்கினார். இறங்கிய வர்கள் நடத்துநரை மோசமான வார்த் தைகளால் திட்டித் தீர்த்தனர்.

நடத்துநருடைய செயற்பாட்டை பேருந் தில் பயணித்த மக்கள் பாராட்டினர். குறித்த நபர்களைப் பொலிஸில் ஒப்ப டைத்திருக்க வேண்டும் என்று தெரிவித் தனர். இவர்களைப் போன்றவர்களா லேயே பேருந்தில் பயணிக்கும் பெண் கள் மீது மற்றவர்கள் தவறாக நடந்து கொள்கின்றனர் என்று தெரிவித்தனர்.

(4,21)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

ரணிலுடனான இணக்கப்பாடு என்ன?

மகிந்தராஜபக்சவுக்கு எதிரானநம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பது என்றுதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்தாயிற்று. அதேபோன்று ஜே.வி.பியும் அத்தகைய முடிவை எடுத்துவிட்டது. எனவே இந்த இருதரப்புகளினதும் ஆதரவுடன்மகிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டால், அது மறைமுகமாக ரணிலுக்கு ஆதரவளிப்பதாகவே முடியும். இத்தகைய தொரு நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணி லிடம் இருந்து எதைப் பெற்றுக்கொள்ளப் போகிறது என்பதில் அது கவனம் செலுத்தியிருக்கிறதா?

கொழும்பில் ஓரிரு நாள்களுக்கு முன்னர்நடந்த தேசிய தீபாவளி நிகழ்வில் உரையாற்றிய அரசதலைவர்மைத் திரிபால சிறிசேன, கடந்த மூன்றரை வருடங்களில் இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாண்பதற்கானமுயற்சிகளை எடுத்திருக்கவேண்டியரணில்அதனைச்செய்யவில்லை என்று முழுப்பழியையும்அவர்மீதுதூக்கிப்போட்டார். அது முற்றிலும்உண்மை என்றில்லாவிட்டாலும்மைத் திரியின்கூற்றில்உண்மை இல்லாமலும்போகவில்லை.

நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றிய கையோடு, ராஜபக்சாக்கள்தோல்வியால்துவண்டிருந்த சமயத்தில் புதிய அரசமைப்புக்கான பணிகளைத் துரித மாகநகர்த்தி அந்தப்பணியைமுடித்திருக்கவேண்டியவர் ரணில் விக்கிரமசிங்கவே. அதைச் செய்யாமல் வழிந டத்தல் குழுவில் மகிந்த தரப்பினர் இழுத்த இழுப்புக் கெல்லாம் ஆடி, ஆடி மூன்றரை ஆண்டுகளாகப் புதிய அரசமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படாமல் இருப்பதற்கு ரணிலும்பாத்திரவாளிஎன்பதில்மாற்றுக்கருத்து இருக் கமுடியாது.

அதேபோன்றுபலசமயங்களில்தமிழ்மக்களுக்குவழங் கிய வாக்குறுதிகளையும்ரணில்நிறைவேற்றவில்லை. ரணிலுக்கும்மைத்திரிக்கும் இடையில்உறவுகள்மோச மாகி, மைத்திரியின் ஆதரவுடன் ரணில் மீதான நம்பிக் கையில்லாத்தீர்மானம்நாடாளுமன்றத்திற்குக் கொண் டுவரப்பட்ட போதுகூடதமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்றஉறுப்பினர்களால்வலியுறுத்தப்பட்ட10 கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித் தவர் ரணில் விக்கிரமசிங்க. ஆனால், அதன் பின்னர் அந்தக்கோரிக்கைகளில்ஒன்றைக்கூடஅவர்நிறைவேற் றவில்லை.

அப்படிப்பட்ட நிலையில் மகிந்தவை எதிர்ப்பதன் மூலம் ரணிலை ஆதரிப்பதால் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப் போகும் நன்மை என்ன என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெளிவுபடுத்த வேண்டும். ஒருவேளைமீண்டும்தலைமைஅமைச்சராகும்வாய்ப்பு ரணிலுக்குக் கிட்டினால் அப்போது தமிழ் மக்களுக்கு அவர் என்ன செய்வார் என்பதையாவது ரணில் தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

மகிந்தவைத் தோற்கடிப்பதன் ஊடாகத் ரணிலைத் தலைமை அமைச்சராகத் தொடர்ந்தும் பதவியில் இருத்தி வைத்திருப்பதன் மூலம் புதிய அரசமைப்புப் பணியைத் தொடர்வது முற்றிலும் சாத்தியமற்றதாகிவி டும். இந்த நிலையில் ரணிலுக்கு ஊடாக எத்தகைய தீர்வைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தருவதற்குத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புமுன்வந்திருக்கிறதுஎன் பதைப் பகிரங்கப்படுத்த அந்தக் கட்சி கடமைப்பட் டுள்ளது.

இதுவரையில் அத்தகைய எந்தச் செயல்முறையிலும் கூட்டமைப்பு ஈடுபடவில்லையாயின் உடனடியாக ரணிலுடன் பேசி அந்த முடிவுகளை மக்களுக்குப் பகி ரங்கப்படுத்துவது அவசியம். ரணிலின்அரசைத் தொட ரச்செய்வதன்மூலம்தமிழ் மக்களுக்கு முக்கியநன்மை ஏதும்கிட்டாதுஎன்றால்பின்னர்எதற்காகத்தமிழ்மக்கள் ரணிலைஆதரிக்கவேண்டும்என்கிறகேள்விஎழுவதும் தவிர்க்க முடியாததே.

கொழும்பு அரசியல் கொதிநிலை

ஜனநாயகம் அழிந்துபோக பாசிசம் துளிர் விடுகின்றது

கூட்டாக அரசை அமைத்திருந்த தென்னிலங்கைக் கட்சிகள் இரண்டுக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றின. இதனால்தான் வேறு வழியின்றித் தன்னுடைய கட்சியைச் சேர்ந்த முன்னாள் எதிரி மகிந்தவுடன் கைகோர்ப்பதற்கு மைத்திரிபால முடிவுசெய்தார். அரச தலைவராக அவரது பதவிக்காலம் முடிந்த பிறகு, மீண்டும் அவர் அரச தலைவராக வர விரும்பியே மகிந்தவின் பக்கம் சாய்ந்தார். அவரது இந்தச் செயற்பாடு ஏற்புடையதல்ல. இது இலங்கையின் ஜனநாயகத்தைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. நாடு பாசிசத்தை நோக்கிச் செல்லக்கூடும் என்ற அச்சம் எழுந்திருக்கிறது. முடிவில் மக்களே பாதிக்கப்படுவார்கள். என்பதை விவரிப்பதுடன் இலங்கையின்அரசியல் நிலவரம் பற்றியும் சிறியளவில் ஆராயும் வகையிலனாது இந்த ஆக்கம்.



அகிலன் கதிர்காமர்

இலங்கையில் 2015ஆம் ஆண்டில் நடந்த அரச தலைவர் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் நாட்டில் மிகப் பெரிய ஜனநாயக மாற்றத்தைக் கொண்டுவந்தன. நாட்டின் பிற பகுதிகளுக்கு எப்படியோ, வடக்குக்கும் கிழக் குக்கும் இது இரவுக்கும் பகலுக்கும் இடையி லான வித்தியாசத்தைப் போல இருந்தது. 2014ஆம் ஆண்டில்கூட வடக்குக் கிழக்கு மக்கள் மகிந்த அரசுக்கு எதிராகச் சிறிய விமர் சனத்தை முன்வைப்பதற்குக் கூடப் பயந்தார் கள். அந்த அளவுக்கு அச்சம் பரவியிருந்தது. ஆனால், கடந்த மூன்றாண்டுகளில் இவை யெல்லாம் மாறின. மக்கள் பல கோரிக்கைக ளுக்காகத் தெருவில் இறங்கிப் போராட்டங் களை நடத்தினார்கள். கேள்வியெழுப்பினார் கள். ஜனநாயகம் குறித்த நம்பிக்கை ஏற்பட் டது.

மகிந்த - மைத்திரி பிரிந்திருப்பதையே ரணில் விரும்பினார்

2015ஆம் ஆண்டுத் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவும் ரணிலும் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது, ஊழல்செய்தவர்களைக் கண்டறிந்து தண்டிப்பது உள்ளிட்ட பல வாக்குறுதிகளை வழங்கினார் கள். ஆனால், இவை எவையும் சரி யாக முன்னெடுக்கப்படவில்லை. வேண்டுமென்றே தாமதிக்கப்பட்டதா கக் கூடக் கூறலாம். இதில் ரணிலுக் குத்தான் முக்கிய பொறுப்பு உண்டு. நல்லிணக்க ஆட்சியின்போது மகிந்த மீதான விசாரணைகளை ரணில் தடுத்ததாக அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன குற்றம்சாட்டினார். தலைமை அமைச்சர் ரணில் ஏன் விசாரணைகளை முன்னெடுக்கவில்லை யென்றால், இந்தக் குற்றச்சாட்டு களால் மகிந்தவின் செல்வாக்குச் சரிந்தாலோ, அவர் சிறை சென்றாலோ, சிறி லங்கா சுதந்திரக் கட்சி முழுமையும் மைத்தி ரிபால சிறிசேனவின் பக்கம் வந்திருக்கும். அதை ரணில் விரும்பவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரின் விசுவாசம் மைத்திரி பால சிறிசேனவுக்கும் மகிந்த ராஜபக்சவுக்கும் இடையில் பிரிந்துகிடப்பதையே அவர் விரும்பி னார். அதன் மூலம்தான் மைத்திரி பலவீன மாக இருப்பார் என்று கருதினார். இதை விரைவிலேயே மைத்திரிபால சிறிசேன உணர்ந்துகொண்டார்.

உள்ளூராட்சி மன்றத் தோல்வியைத் தொடர்ந்து பிளவு

கடந்த பெப்ரவரி மாதம் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்

ஜக்கிய தேசியக் கட்சியும் பெரும் தோல்வியைச் சந்தித்த நிலையில், மகிந்த ராஜபக்சவின் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி பெரும் வெற்றிகளைப் பெற்றது. இந்தத் தோல்வியையடுத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ரணில் அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரச் செய்தார். இதை ஜக்கிய தேசியக் கட்சி தோற்கடித்தது. இதற்குப் பிறகு இருவருக்கும் இடையிலான முரண்பாடுகள் முற்றின. இதனால்தான் வேறு வழியின்றித் தன்னுடைய முன்னாள் எதிரி மகிந்தவுடன் கைகோர்ப்பதற்கு மைத்திரிபால முடிவுசெய்தார். அரச தலைவராக இந்தப் பதவிக்காலம் முடிந்த பிறகு, மீண்டும் தான் அரச தலைவராக வர விரும்பியே மகிந்த பக்கம் சாய்ந்தார் மைத்திரி. அவரது இந்தச் செயற்பாடு சிறிதும் ஏற்கத்தக்கதல்ல. இது இலங்கையின் ஜனநாயகத்தைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. நாடு பாசிசத்தை நோக்கிச் செல்லக்கூடும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. முடிவில் மக்களே பாதிக்கப்படுவார்கள்.

நடக்கவிருக்கின்ற தேர்தல்களும் சிறுபான்மையினரின் அச்சமும்

அடுத்த ஆண்டில் இலங்கையில் மூன்று மிகப் பெரிய தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. நாடு முழுவதும் மாகாண சபைகளுக்கான தேர்தலும் அரச தலைவர் தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் நடக்கவிருக்கின்றன. இப்போது மகிந்தவும் மைத்திரிபால சிறிசேனவும் இணைந்திருப்பதால், கட்சி முழுமையாக மகிந்தவின் கட்டுப்பாட்டில் வரும். இதையடுத்து, நாடு முழுவதும் சிங்கள இனவாதத்தைத் தூண்டி, தங்கள் அதிகாரத்தை அவர்கள் அதிகரித்துச் செல்வார்கள் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த அரச தலைவர் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் மகிந்தவைத் தோற்கடிப்பது என்பதே இரண்டு கட்சிகளின் இலக்காக இருந்தது. அதுவே விவாதப் பொருளாகவும் முன்வைக்கப்பட்டது. ஆகவே, பொருளாதாரம், அரசியல் தீர்வு போன்றவை பின்னுக்குத் தள்ளப்பட்டன. ஆகவே அடுத்த தேர்தலிலாவது சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வு, புதிய அரசமைப்பு ஆகியவை குறித்து விவாதம் நடக்கும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில் மீண்டும், யார் ஊழல் செய்தார்கள், யார் துரோகம் செய்தார்கள் என்ற சச்சரவை முன்வைத்தும் தனி நபர் மோதல்களை முன்வைத்தும் தேர்தல் பரப்புரை நடக்க விருப்பது கவலைதரும் விடயம்.

கூட்டமைப்பின் தீர்மானம் பாராட்டுக்குரியது

தற்போதைய அரசியல் நெருக்கடியைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் தெளிவான தீர்மானத்தில் இருப்பது பாராட்டுக்குரியது. வரவேற்கத்தக்கது. கூட்டமைப்பைப் பொறுத்தவரை கடந்த 4 வருடங்களாக ஓர் அளவுக்கு மத்திய அரசுடன் இணைந்து செயல்படவே நினைத்தார்கள். அதனால், எதிர்க்கட்சியாக இருந்தபோதும் இந்த அரசு செய்த பிழைகளைக் கண்டிக்கவில்லை. மாணவர்கள், தொழிற்சங்களின் போராட்டத்தை இந்த அரசு ஒடுக்கியபோது அவர்கள் கண்டிக்கவில்லை. இதனால், தமிழ் மக்களுக்குப் பெரிதாக ஏதும் நடக்கவில்லை.

தற்போதைய அரசியல் நெருக்கடியைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் தெளிவான தீர்மானத்தில் இருப்பது பாராட்டுக்குரியது. வரவேற்கத்தக்கது. கூட்டமைப்பைப் பொறுத்தவரை கடந்த 4 வருடங்களாக ஓர் அளவுக்கு மத்திய அரசுடன் இணைந்து செயல்படவே நினைத்தார்கள். அதனால், எதிர்க்கட்சியாக இருந்தபோதும் இந்த அரசு செய்த பிழைகளைக் கண்டிக்கவில்லை. மாணவர்கள், தொழிற்சங்களின் போராட்டத்தை இந்த அரசு ஒடுக்கியபோது அவர்கள் கண்டிக்கவில்லை. இதனால், தமிழ் மக்களுக்குப் பெரிதாக ஏதும் நடக்கவில்லை.

மகிந்தவைச் சுற்றி எழும் போலித் தேசிய வாதிகள்

வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் தீர்வுக்கான கோரிக்கைகளையும் பிரச்சினைகளையும் முன்வைத்து மக்களைத் திரட்டும் முயற்சியில் கூட்டமைப்பு ஈடுபட்டிருக்க வேண்டும். அதைச் செய்யவேயில்லை. இப்போது கூட்டமைப்பு ஒரு சிதறுண்ட நிலையில் இருக்கிறது. சி.வி. விக்னேஸ்வரன் பிரிந்து சென்றிருக்கிறார். அவரும் சரி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்ற குறுந்தேசியவாதிகளும் சரி, எந்த விதத்திலும் தென்பகுதி அரசியல்வாதிகளுடன் இணைந்து செயற்படவில்லை. ஒருவகையில், மீண்டும் மகிந்த அதிகாரத்துக்கு வரவேண்டும் என்றே இவர்கள் நினைக்கிறார்கள்.

அப்போதுதான் மகிந்தவைக் காட்டியே தங்களுடைய போலித் தேசிய வாதத்தைப் பேச முடியும் என நினைக்கிறார்கள். கடந்த நான்கைந்து ஆண்டுகளாக இவர்கள் கொழும்பு அரசைக் குறைகூற மட்டுமே செய்தார்கள். அரசுடன் இணைந்து செயற்பட முன்வர வில்லை. கூட்டமைப்பு தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்ததற்கு இது மிக முக்கியமான காரணம்.

சிக்கலின் மையப்புள்ளியான ரணிலின் கட்சிக் கட்டுப்பாடு

தற்போதைய சிக்கலின் மையப்புள்ளியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஜக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருக்கிறார். தன்னுடைய தலைமைத்துவத்தை விட்டுக்கொடுப்ப தற்கு அவர் தயாராக இல்லை. 2001இலிருந்து 2003 வரையான ஆண்டுகளில் முதன் முதலாக அவர் தலைமை அமைச்சரானார்.

அதற்குப் பிறகு எத்தனையோ தேர்தல்களில் ஜக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்துள்ளது. இந்தத் தோல்விகளின் மூலம் ஜக்கிய தேசியக் கட்சிக்கு மட்டுமல்லாமல் இலங்கையில் ஜனநாயகத்துக்கும் அவர் பின்னடைவைக் கொண்டுவந்துள்ளார். அவர் விலகியிருந்தால் அந்தக் கட்சியில் ஒரு வலுவான தலைமை தோன்றியிருக்கக்கூடும்.

அது ஜனநாயகத்தை வலுப்படுத்தியிருக்கும். ஆனால், அவர் அதற்கு இடம் கொடுக்கவில்லை. தொடர்ந்து கட்சியைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

மகிந்தவின் அரசியல் ஓயாது

நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் தோல்வியடைந்தாலும் மகிந்த ராஜபக்ச ஓயமாட்டார். அவர் தேர்தலில் வல்லவர். ஆகவே, மீண்டும் சிங்கள - பௌத்த இனவாதத்தைத் தூண்டுவார் என்ற அச்சம் சிறுபான்மை மக்களிடம் இருக்கிறது.

இலங்கையில் விவாதிக்கப்பட்டு வரும் புதிய அரசமைப்பைப் பொறுத்தவரை இனிப் பெரிதாக ஏதும் நடக்காது. ஏதாவது செய்வதாக இருந்தால் இரண்டு ஆண்டுகளுக்குள் செய்திருக்க வேண்டும்.

ஒருவேளை வாக்கெடுப்பில் மகிந்த தோற்றுவிட்டால் பிறகு என்ன நடக்குமெனத் தெரியவில்லை. இது தொடர்பாக அரசியல் நிபுணர்கள் பலவிதமான கருத்துகளைச் சொல்கிறார்கள். இரண்டு தரப்புகளும் அந்தச் சூழலை எப்படிக் கையாள்கின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

நன்றி .பி.பி.சி தமிழ்

ஆசிரியருக்கான கடிதம்

அரசமைப்பும் சிங்கள மொழியும்

ரணில் விக்கிரமசிங்கவைத் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கி விட்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை அந்தப் பதவியில் அமர்த்தியிருக்கிறார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. இந்தச் செயலை அரசமைப்பின் சட்ட விதிப்படியே தான் செய்திருப்பதாகவும் அவர் அறிவித்திருக்கிறார். இலங்கையின் அரசமைப்புக்கு இது முரணானது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி என்பன குற்றம் சாட்டி வருகின்றன.

இதையே ஐரோப்பிய நாடுகள், இந்தியா, ஐ.நா செயலர், அமெரிக்க என எல்லாமே ஒன்றுசேர்ந்து கூறி வருகின்றன. இவை எல்லாவற்றுக்கும் ஒரு வசனத்தில் அரச தலைவர் பதில் வைத்திருக்கிறார்.

"19ஆவது அரசமைப்புத் தித்தத்தின் சிங்கள மொழியிலான பதிப்பில் அதற்கான அதிகாரம் எனக்குண்டு" என்று.

ஒரு நாட்டில் அரசியல் சாசனம் எத்தனை மொழியில் மொழி பெயர்க்கப்பட்டாலும் விடயம் ஒன்றாகவே இருக்கும். சிங்களம் மட்டும்தான் சரியென்றால் ஏனைய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

நீதிமன்றத் தீர்ப்புக்கள் பலவற்றிலும் சிங்கள மொழியில் உள்ள சரத்துக்களின் படி தீர்ப்புக்கள் வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

அவ்வாறெனில் இலங்கையில் முதலில் போராட வேண்டிய விடயம், அல்லது மக்கள் எழுச்சி பெற வேண்டிய விடயம் இலங்கை அரசியல் சாசனத்தை எல்லா மொழிகளுக்கும் பொதுவாக மாற்ற வேண்டும் என்பதற்காகவே.

மொழி பெயர்ப்பில் இத்தனை வேறுபாடுகள் இருக்கும்போது பிழையான மொழி பெயர்ப்பின் அடிப்படையில் தீர்வுகள் பற்றிச் சிந்திப்பது பிழையானது. ஐ.நா சபை முதலில் இதை ஒழுங்கு செய்யவேண்டும். அதன்பிறகே, ஜனநாயக நடைமுறைகளைப் பேண வேண்டும் என இலங்கை ஆட்சியாளர்களை நிர்ப்பந்திக்க வேண்டும். தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியல் கூழலில் ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என மல்லுக்கட்டிக் கொண்டு புறப்பட்டிருக்கின்ற ஜனநாயக நாடுகளும், பன்னாட்டு அமைப்புக்களும் 2009ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்காலில் மிகப்பெரிய மனித அழிவுகள் ஏற்பட்டபோது விடுமுறையில் எங்காவது வேற்றுக் கிரகத்துக்குப் போயிருந்தார்களா? ஒரு நாட்டின் அரசமைப்பில் அடிக்கடி சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது அதிலுள்ள குறைபாட்டையே காட்டுகிறது பிரித்தானியாவின் மிக நீண்ட அரசியல் பாரம்பரியத்துக்கு அங்கு எழுதப்படாத அரசமைப்பு இருப்பதே காரணமாகும். இலங்கையிலோ எழுதப்பட்டதில் பல குறைபாடுகள் இருப்பதும், அதிலும் சிங்களத்தில் உள்ளது மட்டும்தான் சரி என்பதும் ஜனநாயக மரபுகளுக்கு முரணானவை.

ச.கிருபானந்தன், பளை



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் தாக்குதல்

8 பொலிஸ் அதிகாரிகள் சாவு!

காபூல்.நவ.8

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரிகள் 8 பேர் சாவடைந்தனர். இந்த வாரத்தில் மட்டும் தலிபான்கள் நடத்திய இரண்டாவது தொடர்த் தாக்குதல் இதுவாகும். ஆப்கானிஸ்தானில் வ்பராஹ் நகரில் செவ்வாய்க்கிழமை இரவு தலிபான்கள் நடத்திய தாக்குதலில் 8 பொலிசார் சாவடைந்தனர். அதற்கு முதல் நாளன்று வ்பராஹ் நகரின் எல்லையோரத்தில் தலிபான்கள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப் படைச் சிப்பாய்கள் 20 பேர் சாவடைந்தனர். 20 பேர் கடத்தப்பட்டனர் என்று உள்நாட்டுச் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தலிபான்கள் ஆதிக்கம்

ஆப்கானிஸ்தானில் அரச படைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அரச படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கக் கூட்டுப் படை அங்கு முகாமிட்டுள்ளது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் தலிபான் அமைப்பைச் சேர்ந்த தற்கொலைப் படை ஆயுததாரி தலைநகர் காபூலில் வெடிகுண்டுகள் நிரப்பிய நோயாளர் காவு வண்டியை வெடிக்கச் செய்ததில் 100க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அண்மைக் காலமாகத் தலிபான்களின் தாக்குதல்கள் அங்கு அதிகரித்து வருகின்றன. கடந்த மூன்று வருடங்களில் தலிபான்களின் ஆதிக்கம் ஆப்கானிஸ்தானில் அதிகரித்து வருவதாக அமெரிக்கா சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில் கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஓட்டுநர் இல்லாமல் நீண்டதூரம் பயணித்த தொடருந்து

சிட்னி.நவ.8

பொருள்களை ஏற்றிச்சென்ற தொடருந்து ஒன்று ஓட்டுநர் இல்லாமல் 92 கிலோ மீற்றர் தூரம் வரை பயணித்த சம்பவம் ஆஸ்திரேலியா நாட்டில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. ஆஸ்திரேலியாவின் பிரமாண்டமான பி.எச்.பி. சுரங்கம் பெர்த் நகருக்கு அருகே அமைந்துள்ளது. இங்கிருந்து ஒருங்கிணைந்த தானியங்கிச் செயற்றிட்ட மையத்திலிருந்து இரும்புத் தாதுகளை ஏற்றிக்கொண்டு தொடருந்து ஒன்று புறப்படுவதற்குத் தயாராக இருந்தது. அதற்குள் இயந்திர உபகரணங்கள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா? என்பதைக் கண்காணிப்பதற்காக அதன் ஓட்டுநர் தனது இருக்கையிலிருந்து இறங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது. அவர் திரும்பி வருவதற்குள் ரயில் பயணிக்கத் தொடங்கியிருக்கிறது. மெல்ல வேகமெடுத்து, மணிக்கு 110 கிலோ மீற்றர் வேகத்தில் பயணித்த ரயில் 92 கிலோ மீற்றர் தூரம் வரை தங்கு தடை இல்லாமல் பயணித்தது. அதன்பிறகு கட்டுப்பாட்டு மையத்திலிருந்து ரயிலை நிறுத்தியுள்ளனர். தொடருந்து நிறுத்தப்பட்ட இடம் ஹெட்லேண்ட் துறைமுகத்துக்கு முன்னதாக 119 கிலோ மீற்றர் தூரத்தில் என்று கூறப்படுகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் 'உலகின் முதல் நீண்ட தூரத் தானியங்கி கனரக சரக்கு ரயில்' போக்குவரத்தை ஆஸ்திரேலியா ரயில்வேதுறை செயல்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ள நிலையில் ஆளில்லாமலேயே ஒரு சரக்கு தொடருந்து சுரங்கத்திலி ருந்து 92 கிலோ மீற்றர் தூரம் வரை பயணித்த சம்பவம் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்காவில் இ

எதிர்க்கட்சி முன்னிலை - ட்ர

வோசிங்டன்.நவ.8

அமெரிக்காவில் பிரதிநிதிக்களுக்கான இடைத் தேர்தலில் ட்ரம்பின் குடியரசுக் கட்சி சரிவைச் சந்தித்துள்ளது. ஆனால் செனட் சபையைக் குடியரசுக் கட்சி தக்க வைத்துள்ளது. அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் இடைத் தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

அமெரிக்காவில் நடைபெற்ற இடைத் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகத் தொடங்கின. வெளியான முடிவுகளில் எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்று முன்னிலை வகித்தது. அமெரிக்க நாடாளுமன்றத்துக்கான 'மிட்டெர்ம்' தேர்தல் எனப்படும் இடைக்காலத் தேர்தல் நேற்றுமுன்தினம் நடந்தது.

இதில் 100 பேரில் மூன்றில் ஒரு பங்கு விகிதத்துக்குச் செனட் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அமெரிக்க பிரதிநிதிகள் சபையைச் சேர்ந்த 436 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். இது அதிபர் தேர்தலுக்குச் சமமான தேர்தலாகக் கருதப்படுகிறது. மேலும் 36 மாகாணங்களுக்கு இந்த வருடம் ஆளுநர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

இந்தத் தேர்தல் அமெரிக்க அரசியலில் மிக முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது. இந்த நிலையில் இடைத்தேர்தல் முடிவுகள் வெளியாகி உள்ளன. இதுவரை வெளியான முடிவுகளில் எதிர்க் கட்சியான ஜனநாயகக் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இந்த கட்சி 194 இடங்களில் வெற்றி பெற்று கட்சி 174 இடங் அதிபர் ட்ரம்புக்கு ஏனெனில் ட்ரம் சியிலிருக்கின்ற டங்கள் கொண உறுப்பினர்கள அதே நேரத்தில் குடியரசுக் கட் யைத் தக்க வை

"வல்லபாய் பட்டேலுக்குச் சிலை நிறுவியது முட்டாள்தனம்" பிரிட்டனைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் விமர்சனம்



லண்டன்.நவ.8

அண்மையில் இந்திய அரசு சர்தார் வல்லபாய் பட்டேலுக்குப் பிரம்மாண்ட சிலையை நிறுவியிருந்தது. உலகின் மிகப் பெரிய சிலை என்கின்ற பதிவு அந்தச் சிலைக்குக் கிடைத்தது. வல்லபாய் பட்டேலுக்குச் சிலை நிறுவியது முட்டாள்த்தனமானது என்று இங்கிலாந்தைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் விமர்சனம் செய்துள்ளார்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் 182 மீற்றர் உயரத்தில் வல்லபாய் பட்டேலுக்கு இந்திய அரசு சிலை அமைத்தது. பட்டேலுக்குச் சிலை அமைத்ததை எதிர்க்கட்சித் தலைவர்கள் விமர்சனம் செய்தனர். இந்த நிலையில், படேல் சிலை குறித்து பிரிட்டன் நாட்டின் கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பீட்டர் போன் விமர்சனம் செய்துள்ளார். மகளிர் மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட மேம்பாட்டுக்காக கடந்த 5 ஆண்டுகளில் பிரிட்டனிடம் இருந்து இந்தியா சுமார் 10ஆயிரம் கோடி ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளது. அதே சமயத்தில் இந்தியா மிகப் பெரிய சிலை செய்வதற்கு 3ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்திருப்பது முட்டாள்தனமானது என்றும் அவர் கூறினார்.

இந்த அளவுக்குச் செலவு செய்து பிரமாண்ட சிலையை அவர்களால் செய்ய முடியும் என்றால், அந்த நாட்டுக்கு நாம் உதவி வழங்கத் தேவையில்லை என்றும் பீட்டர் குறிப்பிட்டார். மேலும் சில பிரிட்டன் அமைச்சர்களும் இந்தியாவுக்கு நிதியுதவி வழங்கக் கூடாது என்று தங்கள் கருத்தைக் கூறியுள்ளனர்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் அமைக்கப்பட்ட வல்லபாய் பட்டேலின் சிலையை இந்தியத் தலைமை அமைச்சர் மோடி திறந்து வைத்திருந்தார். இந்தச் சிலை வைப்பதற்கு அங்கு எதிர்ப்புக்களும், போராட்டங்களும் இடம்பெற்றுவந்திருந்த நிலையிலேயே இந்தச் சிலை திறந்துவைக்கின்ற நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

'ஒற்றுமைக்கான சிலை' என்று அழைக்கப்படும் 182 மீற்றர் உயரமுடைய இந்த வெண்கலச் சிலை, குஜராத்தின் சர்தார் சரோவர் அணைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. சிலை வைப்பதற்கு எதிராக அந்த பகுதியை சேர்ந்த பழங்குடி இனமக்கள் எதிர்ப்புகளை தெரிவித்து வந்தனர். உலகின் மிக உயரமான சிலையாகக் கருதப்படத்தக்க இது 7ஆயிரத்து 800கோடி செலவில் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. பலர், இந்தியா போன்ற பல வேற்றுமைகள் நிறைந்த நாடு ஒற்றுமையாக இருக்க இயலாது எனக் கருதினர் ஆனால், சர்தார் வல்லபாய் பட்டேல் இந்தியா ஒற்றுமையாக இருக்க இயலும் என்ற வழியைக் காட்டியவர். இந்திய சுதந்திரமடைந்த பின்னர் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டுக் கொண்டிருந்த மாநிலங்களை ஒன்றிணைத்த சர்தார் பட்டேலுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இந்தச் சிலை கட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கமெரூனில் கடத்தல் விவகாரம் 77 பள்ளி மாணவர்கள் விடுவிப்

மத்திய ஆபிரிக்க நாடான கமெரூனில் பள்ளிக்கூடத்திலிருந்து ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட மாணவர்கள் அனைவரும்விடுவிக்கப்பட்டுள்ளனர். கமெரூனில் பமிண்டா பகுதியில் பாடசாலை ஒன்றில் மாணவர்கள், ஆசிரியர்கள் என 80க்கும் மேற்பட்டோர் ஆயுதம் ஏந்தியவர்களால் கடத்தப்பட்டிருந்தனர். தற்போது கடத்தப்பட்ட 77 பள்ளி மாணவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால், ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் ஆயுததாரிகளி கட்டுப்பாட்டுக்குள் உள்ளனர். அவர்கள மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிற இந்தக் கடத்தலுக்கு இதுவரை எந அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. கமெரூனில் பிரிவினைவாதிகள் கடந 2017ஆம் ஆண்டு முதலே அந்நாட்டு சுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுப வருகின்றனர். இதனால் இந்தக் கடத லில் பிரிவினைவாதிகள் ஈடுபட்டிரு லாம் என்று அரசு சந்தேகம் தெரிவி துள்ளது.



இடைத்தேர்தல்

ட்ரம்ப் பின்னடைவு



பெற்றுள்ளது. அதிபர் ட்ரம்பின் குடியரசுக் 4 இடங்களைப் பிடித்துள்ளது. இதன் மூலம் ட்ரம்புக்குக் கடும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ரில் ட்ரம்புக்கு இன்னும் 2 ஆண்டுகளே ஆட் நக்கின்ற கால அவகாசம் உள்ளது. புதிய சட் கொண்டு வர வேண்டும் என்றால் இந்த னர்களின் ஆதரவு தேவை.

நேரத்தில் செனட் சபைத் தேர்தலில் ட்ரம்பின் சுக் கட்சி வெற்றி பெற்று பெரும்பான்மை க்க வைத்துள்ளது. அதில் உள்ள 100 இடங் களில் குடியரசுக் கட்சி 51 இடங்களைப் பிடித்துள்ளது. ஜனநாயகக் கட்சி 42 இடங்களைக் கைப்பற்றி யுள்ளது.

அமெரிக்காவில் சமீப காலமாக நடந்து கலாசார பிரச் சனை, இனவெறி, குடியுரிமை பிரச்சனைகள் போன் றவை காரணமாக ட்ரம்பின் மீதும் அவரது குடியரசுக் கட்சி மீதும் எழுந்த விமர்சனங்களுக்கு விளைவாக இந்த பிரதிநிதிகளுக்கானஇடைத் தேர்தலில் ட்ரம்பின் குடியரசுக் கட்சி சிறிய சரிவைச் சந்தித்துள்ளது என்று அரசியல் ஆர்வலர்கள் பலரும் விமர்சித்துள்ளன.

தீபாவளிக்குப் புதிய தபால் தலை
தீபாவளிக்குச் சிறப்பு சேர்த்தது ஐ.நா.

நியூயோர்க். நவ. 8

இந்துக்கள் கொண்டாடுகின்ற தீபாவளிப் பண்டிகையை யொட்டி ஐக்கிய நாடுகள் சபையின் தபால் சேவைத்துறை சிறப்புத் தபால் தலை ஒன்றை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.

அமெரிக்காவில் அதிகளவில் இந்துக்கள் வாழ்ந்துவரும் நிலையில் இந்துக்களின் முதன்மைப் பண்டிகையான தீபாவளிப் பண்டிகையை யொட்டி அமெரிக்க அரசின் சார்பில், அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் தீபாவளி விருந்துக் கொண்டாட்ட நிகழ்ச்சியை முன்னாள் அதிபர் பராக் ஒபாமா தொடக்கி வைத்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, 2016ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் தீபாவளிப் பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமான சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்றனர்.

இந்த நிலையில், தீபாவளியைச் சிறப்பிக்கும் வகையில் ஐ.நா. சபை சார்

பில், அமெரிக்கப் பணமான 1 டாலர் 15 சென்ட் விலைமதிப்பில் தீபங்களுடன் கூடிய முதல் தபால்தலை வரிசையை ஐக்கிய நாடுகள் சபையின் தபால் சேவைத் துறை வெளியிட்டுத் தீபாவளியை சிறப்பித்துள்ளது.

சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு அதிகரிப்பு
ஓசோன் படலம் சீரடைகிறது ஐ.நா. தகவல்

ஜெனீவா: நவ. 8

சுற்றுச்சூழல் விழிப்புணர்வால் ஓசோன் படலம் பாதிப்பில் இருந்து மெல்ல மெல்ல மீண்டு வருகிறது என ஐ.நா.சபை தெரிவித்துள்ளது. காற்றில் ஏற்பட்ட சுற்றுச்சூழல் மாசு காரணமாக ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து விட்டது.



இதனால் சூரியனில் இருந்து வெளியாகும் புற ஊதாக் கதிர்களால் புற்றுநோய் போன்றவை ஏற்பட்டு மனித குலம் பெரும் பாதிப்படைந்து வருகிறது. மேலும் பருவ நிலை மாற்றம் ஏற்பட்டு பேரழிவுகளும் ஏற்படுகின்றன. எனவே 1986ஆம் ஆண்டு முதல் நச்சு வாயுவை உருவாக்கும் இரசாயன பொருள்களுக்குத் தடைவிதிக்கப் பட்டது.

அதன் மூலம் ஓசோன் படலம் மேலும் பாதிப் படையாமல் தடுக்க நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகிறது. இதில் பொதுமக்களும் அதிக அளவில் விழிப்புணர்வுடன் உள்ளனர். அதனால் ஓசோன் படலம் பாதிப்பில் இருந்து மெல்ல மெல்ல மீண்டு வருகிறது. இந்த நிலை தொடர்ந்தால் ஓட்டை விழுந்த நிலையில் இருக்கும் ஓசோன் படலம் விரைவில் சீரடையும் என ஐ.நா. சபை தெரிவித்துள்ளது. ஐ.நா.சபையின் சுற்றுச்சூழல் கண்காணிப்புக் குழு 4 ஆண்டுகளாக ஆய்வு நடத்தி அண்மையில் அறிக்கை வெளியிட்டது. அதில் அந்தாட்டிக்கா பகுதியில் ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டை மெல்ல மெல்ல மூடப்பட்டுச் சீரடைந்து வருகிறது. இதேநிலை தொடர்ந்தால் 2060ஆம் ஆண்டளவில் 1980ஆம் ஆண்டில் இருந்தது போன்ற பழைய நிலை ஏற்பட்டுவிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருவில் பேருந்துடன் பாரவூர்தி மோதி 18 பேர் சாவு

லிமா. நவ. 8

பெரு நாட்டில் பயணிகள் பேருந்து மீது பாரவூர்தி மோதிய விபத்தில் 18 பேர் சாவடைந்த சோகத்தை ஏற்படுத்தியது. பெருநாட்டில்புனோ பகுதியில் டிடிகாகா ஏரி அருகே உள்ள தேசிய நெடுஞ்சாலையில் பயணிகள் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது அந்தப் பகுதியில் வந்த பாரவூர்தி பேருந்து மீது வேகமாக மோதியது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 18 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதில் ஒரு குழந்தை மற்றும் 12 பெண்களும் அடங்குவர். மேலும் 39 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். தகவல

நிறுந்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற பொலிஸார் போக்குவரத்தை சீர்செய்தனர். இந்த விபத்துக்கான காரணத்தை அறிய விசாரணைகளை மேற்கொள்கின்றனர். விபத்து தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிட்டனர். பயணிகள் பேருந்து மீது பாரவூர்தி மோதிய விபத்தில் 18 பேர் பலியானமை அந்தப் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆசியா பீபீயின் வழக்கறிஞரை
பாகிஸ்தானை விட்டு வெளியேறுவதற்கு கட்டாயப்படுத்தவில்லை - ஐ.நா.தகவல்



நியூயோர்க். நவ. 8

மத அவமதிப்பு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆசியா பீபீயின் வழக்கறிஞரைப் பாகிஸ்தானை விட்டு வெளியேறும்படி கட்டாயப்படுத்தியதாகக் கூறியிருப்பதாக வெளிவந்த தகவல்களை ஐ.நா. மறுத்துள்ளது.

பாகிஸ்தானில் மத அவமதிப்பு வழக்கில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட கிறிஸ்தவப் பெண் ஆசியா பீபீயை (வயது 47) உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. தீவிர மதபற்றாளர்கள் பலர், ஆசியாவுக்குச் சாவுத் தண்டனை அளிக்க வேண்டும் என்று போராட்டம் நடத்தி வருகிறார்கள். ஆசியா பீவியின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதால், அவர் நாட்டை விட்டு வெளியேறும் வாய்ப்பு உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

மறு ஆய்வு மனு மீதான தீர்ப்பு வெளியாகும் வரை ஆசியா பீபீயை நாட்டை விட்டுச் செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று அரச தரப்பில் உறுதி அளிக்கப்பட்டதை அடுத்து, தெஹ்ரீஇலப்பாயிக் பாகிஸ்தான் (டிஎல்பி) கட்சி போராட்டத்தை திரும்பப் பெற்றது. முக்கிய கட்சியான டி.எல்.பி. போராட்டத்தைக் கைவிட்டதால் பாகிஸ்தானில் இயல்பு நிலை திரும்புகிறது.

இதற்கிடையே ஆசியா பீபீ தரப்பில் நீதி மன்றில் முன்னிலையான வழக்கறிஞர் சைபுல் மாலூக் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறி நாட்டை விட்டு வெளியேறினார்.

பாகிஸ்தானில் இருந்து நெதர்லாந்தின் தி ஹேக் நகருக்குச் சென்றடைந்த அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, ஆசியா பீபீ விடுதலைக்கு எதிராகப் போராட்டம் நடந்தபோது,

தனக்கு ஐ.நா. மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தூதர்கள் பாதுகாப்பு அளித்ததாகவும், பின்னர் தனது விருப்பத்துக்கு மாறாக வெளிநாடு செல்லும்படி வானூர்தியில் ஏற்றி அனுப்பியதாகவும் கூறினார். இந்தக் குற்றச்சாட்டை ஐ.நா. செய்தித் தொடர்பாளர் எரி கனேகோ மறுத்துள்ளார். வழக்கறிஞர் சாய்புல் முலூக் கேட்டுக்கொண்டதால் பாகிஸ்தானில் உள்ள ஐ.நா. அலுவலகம் அவருக்கு உதவி செய்ததாகவும், நாட்டைவிட்டு வெளியேறும்படி கட்டாயப்படுத்தவில்லை என்றும் ஐ.நா. செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

ரஹீம் கஸாலி @RAHIMGAZALI

வெங்காயத்தை உரித்துக்கொண்டே 96 படத்தை டிவியில் பார்க்கும் பெண்கள் புத்திசாலிகள்.

மெத்த வீட்டான்@DEENNKS

பண்டிகைக் காலங்களில் அம்மாவை விட டிவி ரிமோட்டே அதிகமாக உழைக்கிறது!

கோழியின் கிறுக்கல்!!@KOZHIYAAR

எதிர்காலத்திற்கு சேமிக்கும் பழக்கத்தை பட்டாசை அடுத்த ஆண்டிற்கு சேமித்து வைப்பதில் இருந்தே துவங்குகின்றனர் குழந்தைகள்!!!

அன்புடன் கதிர்@KATHIR_TWITS

தியேட்டர் வாசலில் பிளாக் டிக்கெட் விற்றவர்கள் இப்போது நாகரீகமாக வாட்சப்களில் விற்க துவங்கிவிட்டார்கள்!

விக்ரமின் அடுத்த படம் 'கடாரம் கொண்டான்'



நடிகர் விக்ரம் உடன் கமல்ஹாசன் நடிப்பில் அக்ஷரா ஹாசன் இணைந்து நடிக்கும் சீயான் 56 படத்தின் முதல் சுவரொட்டி வெளியாகியுள்ளது.

'சாமிஸ்கொயர்' திரைப்படத்துக்குப் பிறகு கமல்ஹாசன் மற்றும் 'டிடென்ட் ஆர்ட்ஸ்' நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாக உள்ள படத்தில் நடிக்க விக்ரம் ஒப்பந்தமாகியுள்ளார். இதில் விக்ரமுக்கு ஜோடியாக அக்ஷரா ஹாசன் நடிக்க உள்ளார்.

அதன் படி படத்தின் முதல் சுவரொட்டி வெளியாகியுள்ளது. சீயான் 56 என அழைக்கப்பட்ட படத்துக்கு 'கடாரம் கொண்டான்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனை நடிகர் கமல்ஹாசன் தனது கீச்சகப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

மேடம்: எதிர்ப்பாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சராசரி இலக்கை அடைய விடாமுயற்சி தேவைப்படும்.

இடபம்: நற்செயல் மூலம் பலரின் அன்பைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரம் வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

மிதுனம்: சிறு செயலையும் நேர்த்தியாக செய்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி கண்டு மனநிறைவு காண்பீர்கள். ஆதாய உயர்வால் சேமிப்புக் கூடும்.

கடகம்: அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில் வியாபாரம் தாமத கதியில் இயங்கும். கடன் பெற நேரிடலாம். இலாபம் ஓரளவுக்கு இருக்கும்.

சிங்கம்: உணர்ச்சி வசப்படும் சூழலைத் தவிர்ப்பது நல்லது. கடின உழைப்பால் தொழிலில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

கன்னி: அன்பு மனதால் மற்றவரை அரவணைப்பீர்கள். சமயோசித செயலால் தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். இலாபம் உயரும்.

துலாம்: குடும்பத்தினர் அதிக பாசம் கொள்வர். தடைகளை தகர்த்து முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும். வருமானம் பெருகும்.

விருச்சிகம்: உங்களின் நற்செயலை சிலர் குறை சொல்வர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். இலாபம் ஓரளவுக்கு இருக்கும்.

தனுசு: திறமையை வெளிப்படுத்துவது நல்லது. தொழிலில் இடையூறுகளை உடனுக்குடன் சரிசெய்யவும். அளவான பணவரவு கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு அமைதியளிக்கும்.

மகரம்: பணிகளில் கூடுதல் அக்கறை கொள்வீர்கள். கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாக இருக்கும்.

கும்பம்: வீண்பேச்சுப் பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் உற்பத்தி, விற்பனை அளவுடன் இருக்கும். பணவரவுக்கேற்ப செலவும் அதிகரிக்கும்.

மீனம்: மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில் வளம் சிறந்து வாழ்க்கைத்தரம் உயரும். மேலதிக வருமானம் கிடைக்கும். பெண்கள் நகை, புத்தாடை வாங்குவர்.

என்ன ஒரு விஸ்வாசம்!

ஒரு குருக்களின் வீட்டு வாசலில் ஒரு கழுதை இறந்து கிடந்தது.

உடனே. அவர் நகராட்சி அலுவலகத்துக்கு போன் செய்தார்.

"ஐயா, என் வீட்டு வாசலில் ஒரு கழுதை இறந்து கிடக்கிறது.. தயவு செய்து. அதனை அகற்ற ஏற்பாடு செய்யுங்கள்"

நகராட்சி அலுவலகத்தில். போனை எடுத்தவர் நக்கலாகச் சொன்னார்,

"குருக்களே. முதலில் இறந்த அந்த கழுதைக்கு செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் செஞ்சு முடித்துவிட்டு சொல்லுங்கள். நாங்கள் வருகிறோம்"

அதற்கு அந்த குருக்கள் சொன்னார்.

"அதற்கென்ன, பேஷாகச் செய்து விடுகிறேன். இருந்தாலும் அந்தக் கழுதையோட சொந்தக்காராளுக்கு முதலில் சொல்ல வேண்டும் இல்லையா? அதுதான் உங்களிடம் சொன்னேன்" என்றார்.

எப்படியெல்லாம் இடம்பிடிக்கிறார்கள்!!

மக்கள் தொகைப் பெருக்கத்தில் நாம் நம் தேவைகளை நிறைவுசெய்துகொள்வதில் இடம்பிடித்தல் தவிர்க்கமுடியாததாக இருக்கிறது.

எங்கும் வரிசை எதற்கும் வரிசை..

இணையத்தில்சென்றுபயனச்சீட்டுமுன் பதிவு செய்யலாம் என்றால் அங்கும் வரிசை.. எமக்குமுன் ஆயிரம்பேர் ஆறு மாதத்துக்கு முன்பே பதிவு செய்து காத்திருக்கின்றனர்..

எப்படியெல்லாம் இடம்பிடிக்கறாங்கப்பா!!

கைக்குட்டை, துண்டு,
சில நேரம் குழந்தை!

கைப்பை
தண்ணீர் பாட்டில்
சில நேரம் செருப்பு!!
எதுவும் இடம்பிடிக்கும் பொருளாகிவிடுகிறது.

வண்டிவரும்போதேகாத்திருப்போர்இடம் பிடிக்க ஆரம்பித்துவிடுவார்கள். இறங்கவும் விடமாட்டார்கள்!
ஏறவும் விடமாட்டார்கள்!
இந்த இடைவெளியில் சிலர்
காலதர் (சன்னல்) வழியே
இடம்பிடித்துவிடுவர்.
சிலர் காலதர் வழியே
ஏறிக்கூடச் சென்றுவிடுவர்!
இடம் கிடைத்த ஆனந்தத்தில் சிலர்
குறட்டை விடுவர்!
இடம் கிடைக்காத வெறுப்பில்
சிலர் பொதுவுடைமை பேசுவர்!
இடம்பிடிப்பது ஒரு கலை!



நான் நீயாக மாறுகிறேன்

ஒரு அரசகுமாரனும் மந்திரியின் மகனும் ஆற்றங்கரையில் அமர்ந்திருந்து நாட்டு விடயங்கள் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். அரசகுமாரனுக்குதான் அரசபரம்பரை என்ற கர்வம் இருந்தது.

அவன் தன்னைப் பற்றி மட்டும் சிந்திருப்பவனாகவும் சுக போகங்களை அனுபவிக்க வேண்டும் என்ற சிந்தனை உடையவனாகவும் விளங்கினான்.

ஆனால் மந்திரியின் மகனோ சகல கலைகளும் கற்றுத் தேர்ந்தவன், அறிவும் அழகும் கொண்டவன், தான் மந்திரியின் மகன் என்ற தற்பெருமையோ தலைக்கனமோ சிறிதும் இல்லாதவன். பொதுநோக்குடன் பிறருக்கு உதவி செய்வதில் ஆர்வம் கொண்டவன். இத்தகைய எதிரும் புதிருமான குணங்களையுடய இருவரும் நல்ல நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்து வந்தனர். இளவரசன் மந்திரி மகனைப் பார்த்து "ஒரு மந்திரியின் மகனான உன்னால் எப்படி சாதாரண குடிமகன்போல் இவ்வளவு எளிமையாக இருக்க முடிகிறது? அத்துடன் பொதுநலநோக்கும் கொண்டுள்ளாய் நீ என் இளமைக்காலத்தைப் பொதுநலநோக்கில் செயற்பட்டு வீணடிக்கிறாய் என்று நான் நினைக்கிறேன்" என்றான். இதனைக் கேட்டுப் புன்முறுவல் பூத்த மந்திரியின் மகன் "இளவரசே! மானிடப் பிறவியை இறைவன் ஓர் அர்த்தத்துடன்தான் படைத்திருக்கிறார் என்று நினைக்கிறேன். மானிட உருவ அமைப்பு எல்லோருக்கும் ஒன்றுதான்.

ஆனால் குணங்கள் தான் வேறுவேறு. உதாரணத்துக்கு எங்கள் இருவரையும் எடுத்துக் கொள்ளுங்கள். தாங்கள் சுயநலநோக்கு கொண்டவர். நான் பொதுநலநோக்கு உடையவன். இது அர்த்த முள்ள படைப்பு. இரு குணங்களும் ஒன்றுடன் ஒன்று பொருந்துவது மிகவும் கடினம். தாங்கள் எனது குணத்துக்கு மாறலாம். அது வரவேற்கத் தக்க செயல். ஆனால் நான் தங்கள் குணத்துக்கு மாறக் கூடாது. இது வெறுக்கத்தக்க செயல் மட்டுமல்ல தீமையுமாகும்.

இதனை இடைமறித்த அரசகுமாரன் என்ன? நம் சுகங்களை விட்டு விட்டு பிறருக்கும் நம் வாழ்க்கையைத் தியாகம் செய்வதுதான் மானிடப் பிறவி என்று கூறுகிறாயா? என்றான். அதற்கு மந்திரி மகன் நான் அப்படிக் கூறவில்லை. தொண்டோ சேவையோ உதவியோ இவற்றைச் செய்யவேண்டும் என்றுதான் சொல்லவருகிறேன். எமது சுகங்களைத் துறக்கச் சொல்லவில்லை என்றான். நேரம் செலவிட என்னால் முடியாது. நீ வேண்டுமானால் என்னைப்போல வாழ முயற்சி செய் என்று கூறினான். உரையாடல் தொடர்ந்தது.

அப்போது இருவரும் ஆற்றிலேயே கால்களை வைத்துக் கொண்டிருந்தனர். அப்போது கரையை நோக்கி வந்த முதலையொன்று இராசகுமாரனின் பாதங்களைக் கௌவி சட்டென்று நீருக்குள் இழுத்தது. அப்போது ஆ.... ஆ... என்று அலறியபடி அரச குமாரன் நீருக்குள் விழுந்தான். அப்போது மந்திரிமகன் தன் இடுப்பில் இருந்த கத்தியை உருவி நீருக்குள் பாய்ந்து அசுர வேகத்தில் முதலையின் வயிற்றில் செலுத்தினான். இப்போது முதலை சாவடைந்து வாயைத் திறந்தபடி நீரில் மிதந்தது.

அரச குமாரன் மந்திரி மகனைக் கட்டித் தழுவினான். "நண்பா உன் பொதுநலநோக்கால் நான் உயிர் பிழைத்தேன். இப்பொழுதே நான் நீயாக மாறிவிட்டேன் என உருக்கத்துடன் கூறினான்.

நீங்களும் பிறருக்கு உதவி செய்யப் பழகுங்கள். ஏனெனில் நாளை உங்களுக்கும் பிறரின் உதவி தேவைப்படும்.

வர்ணம் தீட்டுவோம்



வீட்டுத்தோட்டம் வீட்டுக்கு உதவும்

ராணியின் வீட்டின் பின்புறத்தில் அதிகளவான நிலம் வெறுமனே தான் கிடக்கின்றது. லஷ்மி கட்டப்பட்டிருக்கும் கொட்டகையைத் தவிர அங்கொரு மூலையில் கோழிக் கொட்டிலும் இருக்கிறது.

பாடசாலையில் அன்றைக்கு வீட்டுத்தோட்டம் பற்றிப் படித்து விட்டு வந்தவை அவள் நினைவிலிருந்து நீங்காமல் இருந்தன. லஷ்சுமியின் சாணத்தைத் தினமும் அள்ளுகிற பாட்டி அதை ஓரிடத்தில் குவித்து வருவது வழமை. அது அப்படியே கிடந்து மக்கிப் போவதும் வழமை. இப்போது தனது பள்ளிப் படிப்புடன் அதைக் கவனித்த அபிநயாவுக்கு எண்ணங்கள் சிறகடித்தன. பள்ளியில் படித்ததுபோலவே வீட்டுத்தோட்டம் செய்தால் என்ன எண்ணினாள். அத்தோடு நிற்காமல் வேலையிலும் இறங்கினாள். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அவளுடைய வேலை கச்சிதமாக முடிந்தது.

நிலத்தைப் பண்படுத்தினாள். சிறிது தூர இடைவெளிகளில் சாணத்தை இட்டு மண்ணோடு சேர்த்தாள். நீர் பாய்ச்சி ஈரமாக்கினாள். பாட்டியும் உதவி புரிந்தார். அத்துடன் பக்குவமாக வேலை செய்கிற வழிகளையும் சொல்லிக் கொடுத்து வழிகாட்டினார். தாயின் கைவசமிருந்த செத்தல் மிளகாய் விதைகளே தற்சயம் அவளுக்கு கிடைத்தன. அவற்றை உரிய இடத்தில் நட்டு தினமும் நீர் ஊற்றத் தொடங்கினாள். மெல்லமெல்ல வளர்ந்துவந்த மிளகாய்ச் செடிகள் பூக்கத் தொடங்கின. ராணி பூரிப்படைந்தாள். சிலகாலங்களில் அவை காய்க்கவும் தொடங்கின. இப்போது அவளுக்கு மகிழ்ச்சி. தினமும் எழுந்து முதல் வேலையாக மிளகாய்க் கன்றுகளுக்கு நீர் பாய்ச்சுவாள். அத்தோடு அவற்றுடன் கதையும் பேசுவாள். அவை அவளுடன் அளவளாவுவது அவளால் மாத்திரமே உணரக்கூடியது பத்துச் செடிகள் என்றாலும் பக்குவமாக வளர்த்தால் பயன் கிடைக்கும் என்பதை ராணி அறிந்து கொண்டாள். அந்த மிளகாய் செடிகள் நன்றாகக் காய்த்துக் குலுங்கின.

இடமறிந்து பேசு

சில விடயங்களில் எங்கள் அபிப்பிராயங்களைப் பேசாமல் வாய் மூடியிருப்பது மேலானது. இருக்கும் இடம் அறிந்து விடயத்தை நன்கு புரிந்து குணமறிந்து பேசலாமா அல்லது விடலாமா எனச் சிந்தியுங்கள். மதிப்பு என்பதே என்னவென்று தெரியாத கூட்டத்தில் மாட்டிக் கொண்டு அவஸ்தைப்படுவதைவிட சும்மா பேசாதிருப்பது நல்லது. இது தோழைத்தனமானது அல்ல. நல்லோர் வல்ல புலமையாளரின் முன் பேசுதல் எமக்கான அங்கீகாரத்தை அளிக்கும். உட்பூசலுடன் இயங்குபவர்கள், பொறாமைக்காரர்கள், நல்ல விடயங்களைக் காதில் போட்டுக் கொள்ளவே மாட்டார்கள். சபை நடுவே பேசுமுன் உங்களை நீங்களே நிதானப்படுத்திக் கொள்ளுங்கள்.

சில சமயங்களில் பேச்சாளர்கள் சிறந்த முறையில் பேசும்போது மற்ற பார்வையாளர்கள் கூச்சலிடுவதுமுண்டு. இதன் பொருட்டு கோபப்பட்டுக்கொள்ளாது அமைதியுடன் இயங்கினால் சபை உங்களை ஏற்றுக் கொள்ளும். நல்ல விடயங்களைப் பேசும்போது மென்மையாக அமைதியுடன் அவை ஏற்றுக் கொள்ளப்படும்.

நான்கு முட்டாள்கள் மத்தியில் நல்ல அறிவாளி எதுவுமே பேசமாட்டான்.

கோபத்தை தவிர்ப்பது எப்படி?

1. **பொருட்படுத்தாதீர்கள்**
உங்களைப் பற்றி யாராவது அவதூறாகவோ மட்டமாகவோ எவர் பேசினாலும் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாதீர்கள். அதைக் கண்டு கொள்ளாமல் விட்டு விடுங்கள். எதிரிகள் ஏமார்ந்து விடுவார்கள்.

2. **எதையும் யாரிடமும் எதிர்பார்க்காதீர்கள்**
ஒருவரிடம் நாம் ஒன்றை எதிர்பார்த்து அது கிடைக்கவில்லையென்றால் அவர் மீது கோபம் எமக்கு வருவது இயற்கைதான். எனவே யாரிடமும் எதையும் எதிர்பார்க்காதீர்கள்.

3. **எதிரிகளை அலட்சியம் செய்யுங்கள்**
தனக்குப் பிடிக்காத மனிதர்களைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்கக் கூடாது. அதனால் எமக்கு ஆத்திரமும் கோபமும் அடிக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கலாம். தன்னம்பிக்கை உள்ளவனை ஒருபோதும் அவதூறுகளும் கடுமையான வார்த்தைகளும் பாதிப்பதில்லை.

முருகனைக் காண ஆயிரம் கண் வேண்டும்!

இன்று கந்தசஷ்டி விரதாரம்பம்

கலியுகத்தின் தெய்வம் எனக் கந்தபுராணக் கலாசாரத்தில் போற்றப்படும் கந்தப்பெருமானை நினைந்து கடைப்பிடிக்கப்படும் கந்தசஷ்டி விரதம் இன்று விசாக நட்சத்திரமும் பிரதமைத் திதியும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் மிகவும் பக்தி பூர்வமாக இந்து ஆலயங்களில் ஆரம்பமாகின்றது.

இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாகச் செறிந்து வாழ்கின்ற வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமையப் பெற்றுள்ள முருகன், விநாயகர் ஆலயங்களில் இந்த விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது.

மனம் பொறிகளின் வழிபோகாது தடுக்கும் பொருட்டு, உணவைச் சுருக்கியேனும் அல்லது முற்றாக விடுத்

தேனும் திரிகரண சுத்தியால் இறைவனைத் தூய அன்பு கொண்டு வழிபட இயற்றுவதே இந்த விரதத்தின் சிறப்பாகும்.

எந்த விரதமாக இருந்தாலும் அதை சங்கற்பபூர்வமாக முறைப்படி கடைப்பிடிப்பதால், 'தேகசுத்தி, நோயற்ற வாழ்வு, பாவநீக்கம், மனத்தூய்மை' ஆகிய நிறைவான நன்மைகள் வாழ்வில் உண்டாகுமென 'சைவ சமய சிந்தாமணி' எனும் நூலில் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை தெளிவாகக் கூறியுள்ளார்.

புரட்டாதி மற்றும் ஐப்பசி மாதங்களில் இந்துக்கள் கடைப்பிடிக்கின்ற விரதங்களுள், 'புரட்டாதிச் சனி விரதம், நவராத்திரி கும்ப மகா நவமி விரதம், கேதார நாதரை நோக்கி கௌரி அம்பாள் கடைப்பிடித்த கேதார கௌரி விரதம்' போன்றவை முதன்மையானவை.

'யாமிருக்கப் பயமேன்?' என்று அபயக் கரம் காட்டித் தன்னை வழிபடும் அடியவர்களின் துன்ப துயரங்களைப் போக்கி, வேண்டுவோர் வேண்டும் வரங்களை தருகின்ற அந்த அழகே வடிவான முருகன் ஆன்மா கொண்டுள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற மும் மலங்களையும் அழித்து அடியவர்களைக் காத்தருள்வான். ஐப்பசி மாதம் வளர்பிறைத் திதி பிரதமை முதல் சஷ்டி வரை (முடிய) ஆறு தினங்களும் இந்த விரதத்தை கடைப்பிடிக்க வேண்டும். இந்த விரதத்தை 6 வருடங்கள் அல்லது 12 வருடங்கள் கடைப்பிடித்து, விரத முடிவில் விரத உத்யாபனம் செய்து நிறைவு செய்வது சரியானது என இந்துசமய வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

சஷ்டி திதியன்று எந்தவித ஆகாரமுமின்றி உபவாசம் இருத்தல் இந்த விரதத்தின் நியதியாகும். ஸ்கந்த பஞ்சமியில் அருந்தி, கந்தசஷ்டியில் உபவாசமிருந்து ஸப்தமி திதியில் பாறணை செய்ய வேண்டும். இப்படி முறையாக விரதமிருந்தவர்கள் முருகப் பெருமானின் கருணையைப் பெறுவார்களென்பது திண்ணம். அந்த வகையில் கந்தசஷ்டி விரதத்தைப் பொறுத்தவரை உபவாசம் இருப்பது உத்தமம்.

அதைக் கடைப்பிடிக்க இயலாதவர்கள் பகல் நீங்கியபின் முருகப் பெருமானை தரிசனம் செய்து இரவில் தீர்த்தம், இளநீர், நீர் ஏதாவது ஒன்றை உட்கொள்ளலாம். பகல் பொழுதைக் கழித்து முருக வழிபாடு செய்து இரவில் ஏதேனும் ஒருவகைப் பழங்களைக் குறைவாக அருந்தலாம். இது மந்திரம்.

இவ்வாறு விரதத்தைக் கடைப்பிடிப்போர் முதல்நாள் ஒருபொழுது உணவும், அன்றிரவு சிறிதளவு பலகார வகையும் உண்ணலாம் என சைவசமய சிந்தாமணி

கந்தையா கனகசபை

நூல் இந்த விரதத்தின் மகிமை பற்றித் தெளிவாகக் கூறுகின்றது. விரத காலங்கள் தவக்காலமாக நோக்கப்படுவது இந்த விரதத்தில் மிகமுக்கிய அம்சமாகும்.

கந்தப் பெருமானது மகிமையை எடுத்துக்கூறும் கந்தபுரணப் படிப்பும், அதற்குப் பயன் சொல்லும் நிகழ்வும் இந்தவிரத காலங்களில் முருகன் ஆலயங்களில் இடம் பெறுவது இந்த விரதத்தின் சிறப்பு அம்சமாகும். வள்ளியெம்பிராட்டியாரை திணைப் புலத்தின் கண்ணே கவர்ந்த அந்த அழகே வடிவான முருகனை இந்த கந்தசஷ்டி நன்நாளிலே மனதார வணங்குவோம்.

இந்த விரதத்தைக் கடைப்பிடிக்கும் இந்துக்கள் அனைவரும் இந்த மண்ணிலே மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அனுபவித்து, இந்த மண்ணிலே நல்ல வண்ணம் வாழ்ந்து, சகல சௌபாக்கியங்களையும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ சூரனைப் போரில் வென்று தேவர் சிறைமீட்ட அழகே உருவான அந்த கந்தக்கடவுள் திருவருள்பலிப்பாராக!

கதிராய் எழுந்தாய் கதிரேசா!

ஆனைமுக நாயகனே அருமருந்தே அற்புதமே
மோனைத்த மிழ்க்காக்கும் மூவாமுதல் நிலையே
சேனைமண வாளனைச் சேய்மொழியில் நான்பாட
தானைத் தளபதியே தாள்பணிந்தேன் கணபதியே !

விண்ணாடும் நிலவொளியே வேல்பிடிக்கும் செஞ்சுடரே
என்நாடும் கார்த்தருளும் எழிற்பழனி வேலவனே
கண்ணான முருகனுனை கவிபாடி நானழைக்க
என்னாசைக் கண்மணியே எழுந்தாய் இதுசமயம்

தில்லைநடம் புரியும்சி தம்பரனார் புத்திரனே
கிள்ளைமொழி செப்புவள்ளி கைப்பிடித்த சுந்தரனே
முள்ளையெடுத் தாலுமதை முல்லையென மாற்றிவைத்து
பிள்ளைக்கு அருளியநீ எழுந்தாய் இதுசமயம்

கண்ணுதலான் நல்மணியே கன்னல்மொழி நாயகமே
மண்ணிலத்தார் மன்றாடும் மழைமயில் வாகனனே
விண்ணப்பித்தேன் என்குறைகள் வேகமாக மாற்றிவிட்டு
அண்ணலாறு முகம்பூக்க எழுந்தாய் இதுசமயம்

பொல்லாத்தி சைகளைந்து பொய்கையென வார்த்தருளும்
புல்லார்ப கையழிக்கும் புள்ளிமயில் வேலவனே
செல்லாத காசெனவே சேய்நிலையும் மாறும்முன்னே
வில்லார்வ டிவழகா எழுந்தாய் இதுசமயம்

வானோர்கு லம்காக்க வண்ணமயி லேறிவந்தாய்
தானவர்தி ரளழிக்க தற்பரமாய் நீயிருந்தாய்
மானாமென் மிடிதீர்க்க மன்னவனே நீயிசைந்தாய்
தேனாந்தமிழ் தொடுத்தேன் எழுந்தாய் இதுசமயம்

தாலாட்டும் நேரமிதில் தாயெனவே நீயும்வந்தாய்
பாலூட்டும் வேளைதனில் பக்கமாக நீயிருந்தாய்

வேலாட்டம் விழியிரண்டால் வேண்டுவரம் நீயருள
கோலாட்டம் ஆடியிங்கு எழுந்தாய் இதுசமயம்

அள்ளிக்கொ டுத்ததெல்லாம் ஆர்வலனே பெருகியதே
புள்ளியெனப் பாங்குயர்த்திப் பிள்ளைநிலை காப்பவனே
கள்ளிமலர்ப் பூத்ததுபோல் கார்முகில்தான் பெய்ததுபோல்
வெள்ளிமயில் ஏறியிங்கு எழுந்தாய் இதுசமயம்

ஆலைக்க ரும்பாக ஆகிநின்ற என்னிலையை
சோலைக்க ரும்பாக்கி சுந்தரமாய்த் தந்தவனே
நாளையெனத் தேதிசொல்லி நாட்களைக்க டத்தாமல்
வேளைபி றந்ததென்று எழுந்தாய் இதுசமயம்

ஒப்பேதும் இல்லையென்று உன்னடியை நம்பிவந்து
எப்போத ழைத்தாலும் இன்முகமாய்த் தோன்றுகிறாய்
அப்பாற்க டலுக்குள்ளே ஆனிமுத்தே அங்கிருந்தும்
தப்பாம லேஇணங்கி எழுந்தாய் இதுசமயம்

வாடாம லர்க்கரத்து வஞ்சியரின் நாயகனே
பாடாத செந்தமிழே பார்த்தருளும் தாயகமே
தேடிவரும் பாலகரைத் தேம்பிடவி டாமலேநீ
நாடிக்கு றைதீர்க்க எழுந்தாய் இதுசமயம்

கல்லிற்சி லைவடித்துக் கந்தாவு னைத்தொழுது
சொல்லாத என்னிலையைச் சொல்லிவிட்டே னிப்போதும்
எல்லாவ ரம்மருளி ஏற்றந்தரும் வேல்முகமே
நல்லார்ம னங்குளிர எழுந்தாய் இதுசமயம் !

- மனிகண்டன் -

மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 05 . 1941

மறைவு
05 . 11 . 2018

வீரப்பு கந்தசாமி

சுன்னாகம் மயிலணியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரப்பு கந்தசாமி 05.11.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரப்பு - மாணிக்கம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், மகாலட்சுமியின் அன்புக் கணவரும், சசிகலா (லண்டன்), சபேசினி (பிரான்ஸ்), சர்மினி (கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீபார்த்திபன் (லண்டன்), விஸ்வரட்ணம் (பிரான்ஸ்), Dr.மணிவாசகர் (கொக்குவில்) ஆகியோரின் அன்பு மாமனும், ஹரிசன், மதுஷா, ஹரிணி, குபேரன், தபிசா, ஜெயசிறி, சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
சிவகுரு லேன், கேணியடி.

(cs14355)(13,17)

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்



பொன்னையா செங்கதிர்ச்செல்வன்

(சிரேஷ்ட விரிவுரையாளர் - தமிழ், யாழ் பல்கலைக்கழகம்)

91/7, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை கந்தர்மடத்தைச் சேர்ந்த பொன்னையா செங்கதிர்ச்செல்வன் 06.11.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இளவாலை கருகம்பனையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா (ஓய்வு பெற்ற அதிபர் - யா/ வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்) - ராணி தம்பதிகளின் ஏக புத்திரனும் சாவகச்சேரியைச் சேர்ந்த இ.நடராசா (வீநாயகர் ஸ்ரோர்ஸ் - சாவகச்சேரி) காலஞ்சென்ற மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் ஆனந்தவனிதை (யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் சேயோன் (SLIIT மாணவன், இறுதி வருடம்), சேந்தன் (சட்டத்துறை மாணவன், பேராதனைப் பல்கலைக்கழகம்), வானதி (க.பொ.த உ/த 2020 மாணவி - யா/ இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2018) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

91/7, இந்து மகளிர்கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(CS 21061) (14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 3862/ 077 648 7999

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

Dr.Mrs.Rukmani Uthayakumar

Dr. திருமதி ருக்மணி உதயகுமார்

(MBBS - Colombo)

திதி:- ஐப்பசி வளர்பிறை சஷ்டி

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் – எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாச தீபம் –
உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
கண்ணின் இமைபோல எமைக் காத்த அம்மா –
உங்கள்
கனவுகள் யாவும் நிறைவேறும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் நினைவில்
கணவர் (உதயகுமார்), மகள் (அர்ச்சனா)
மற்றும் குடும்பத்தினர்.
மயிலணி, சுன்னாகம்

பிறப்பு
13.04.1954

இறப்பு
08.11.2013

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 20.04.1943 இறப்பு 20.10.2017

அமரர்
சிவஞானம் பேரின்பநாதன்

அன்புள்ள அப்பா. நீங்கள் எம்மைவிட்டு
கொன்றையடி வைரவரின் திருவடியை அடைந்து ஓர் ஆண்டு
ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகளை
எம்மால் மறக்கமுடியவில்லையே அப்பா!
உங்கள் ஆன்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்.

என்றும் உங்களை நினைந்து
கவலையோடு இருக்கும்
ஆருயிர் உறவுகள்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேர்த்தி.

222/2. ஆடியபாதம் செங்குந்தா வீதி.
திருநெல்வேலி கிழக்கு.
யாழ்ப்பாணம்.

வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்தலும்

அமரர் மாணிக்கம் செல்லம்மா

கடந்த 09.10.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி அமரர் மாணிக்கம் செல்லம்மா அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (08.11.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் அத்தருணம் தாமும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் எமது துயரில் நேரடியாகப் பங்கு கொண்டவர்களுக்கும் எல்லாவகையிலும் எமக்கு உதவியவர்களுக்கும் எமது நெஞ்சம் மற்வாத நன்றிகளையும் தெரிவித்துகொள்கின்றோம்.

வரணி வடக்கு,
வரணி.

(CS.117113) (13.17) குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 12 . 1939



இறப்பு 06 . 11. . 2018

அருட்தந்தை தோமஸ் மகேந்திரன் இராஜநாயகம்

அருட் தந்தை தோமஸ் மகேந்திரன் இராஜநாயகம் அவர்கள் கடந்த 06.11.2018 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி B.J.T இராஜநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருட்தந்தை அன்ரன் T. இராஜநாயகம் காலஞ்சென்ற L.J இராஜநாயகம் (ஜெயா), A.B இராஜநாயகம் (பாலா.U.K), திருமதி றதினி அந்தோனிமுத்து, திருமதி J.Y.வில்லவராஜா (யோகா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு A.F.றேமன்ஸ் மலர்ச்சாலையில் நாளை 09.11.2018 வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 4 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு 10.11.2018 சனிக்கிழமை புனித மரிய அன்னை பேராலயத்தில் மு.ப. 10 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்பு யாழ்ப்பாணம்கொஞ்சேஞ்சிமாதாசேமக்காலையில்நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
077 3341572 குடும்பத்தினர்.

பெயர்மாற்றம்

வரணியைச் சேர்ந்த பாஸ்கரன் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை பாஸ்கரலிங்கம் (PASKARALINGAM) என மாற்றம் செய்வதுடன் இனிமேல் இது தொடர்பான சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

(CS 00497) (14.17). **பாஸ்கரலிங்கம்.**

கண்ணீர் அஞ்சலி

எமது சகநண்பன்
கனகரத்தினம் புவிசங்கர்
அவர்களின் பாசமிகு தந்தையார்
இரத்தினசிங்கம் கனகரத்தினம் (கனகு)
(முன்னாள் பொறிவலர் இ.போ.ச.)
கடந்த (09.10.2018)
செவ்வாய்க்கிழமை சிவபதம்
அடைந்த செய்திகேட்டு ஆறாத்துயரடைவதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 21076/15/17)

தென்மராட்சி நண்பர்கள்
A/L 1997 வர்த்தகப்பிரிவு

கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக
தமிழ்த்துறை சிரேஷ்ட
விரிவுரையாளர்
திரு.பொன்னையா செங்கதிர்ச்செல்வன்
அவர்கள் 06.11.2018 அன்று
இறைபதம் அடைந்துள்ளார்.
அவரின் மறைவுச் செய்திகேட்டு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம்
அதிர்ச்சியடைகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
ஆசிரியர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை
அவரது குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS31895)(13.17)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.

மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 09 . 1943



இறப்பு 07 . 11 . 2018

சின்னப்பு இராசரத்தினம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல கட்டட ஒப்பந்தகாரரும் தமிழறிஞருமான சின்னப்பு இராசரத்தினம் நேற்று (07.11.2018) காலமானார்.

அன்னார் குணமணி அவர்களின் அன்புக்கணவரும் சசிகலா (ஆசிரியை - யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் யாழ்ப்பாணம்), நிர்மலா (ஆசிரியை -மட் / ஊரணி சரஸ்வதி வித்தியாலயம்), தயாவதி, தயாபரன் (போலந்து), கதீஸ்வரன் (கட்டட ஒப்பந்தகாரர்), சோதரன் (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை), சுதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மராஜா (தாதிய பரிபாலகர், ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி), ரவிச்சந்திரன் (ஆசிரியர், மட்/ திருப்பெருந்துறை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), தேவமயூரன் (மதுவரி திணைக்கள உத்தியோகத்தர், சுன்னாகம்), காயத்திரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் வடமாகாணம்), மதிரூபன் (ஆசிரியர், ஏழாலை புனித இசிதோர் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், லக்ஷிகா (யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஜன்ஷிகா (யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஸ்ரீராம் (யாழ். இந்துக் கல்லூரி), கஜபூஷணி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), அஜஆரணி (யாழ் . இந்து மகளிர் கல்லூரி), லகுஞ்சரன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), கம்ஷிகா (திருக்குடும்ப கன்னியர் மடம், மட்டக்களப்பு), திவிஷன் (மெதடிஸ்ட் மத்திய கல்லூரி, மட்டக்களப்பு), பிரஷ்ணவி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), சோபினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 934 6344

அலுவலக கட்டடம் வாடகைக்கு

யாழ்நகரத்தில் பருத்தித்துறை வீதியில் புகையிரத நிலையத்துக்கு அண்மித்ததாக 5 அறைகள் 2 Hall உள்ள 2 மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள், களஞ்சிய அறைகளுக்கு பொருத்தமானது

(cs 21063) (13.17) **076 704 0744**

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். கனடா PR, 21.10.1988, சதயநட்சத்திரம், கும்பராசி, கிரகபாவம் 61 (வித்தியாசம் 25 வரை எதிர்பார்க்கலாம்), உயரம் 5' 6" உடைய மணமகனுக்கு நற்குணம் உடைய அழகிய படித்த மணமகள் தேவை. (மணமகன் கொழும்பு வந்துள்ளார்)

077 978 0205 (தந்தை)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
பேராசிரியர் அழகையா துரைராஜா
நினைவுப் பேருரை

"Solving Problems at the Interfaces of Human, Natural, and Engineered Systems"

Memorial Lecture delivered by:-

Prof.Kanthasamy. K.Muraleetharan
Kimmell - Bernard Chair in Engineering David Ross Boyd and Presidential Professor, University of Oklahoma, USA.

Place :- Kailasapathy Auditorium, University of Jaffna.

Date :- 09.11.2018 (Friday)

Time :- 3.00 p.m

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- பதிவாளர் -

(IN/8250)(11.17)

ES GRAPHIC design Printers
2019 இற்கான அனைத்து வகையான கலண்டர்களையும் குறைந்த விலையில் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
அனைத்தும் தனித்துவமான கணினி வழிவமைப்புடன்

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432

பதவி வெற்றிடம்
கனரகவாகன இயக்குநர் பதவிக்கான ஆட்சேர்ப்பு ஒப்பந்த அடிப்படையிலானது. (2018)

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/NP/0304 ஆம் இலக்க 2018.03.27 ஆம் திகதிய கடிதம் மூலம் நல்லூர் பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான கனரக உபகரண இயக்குநர் பதவியணியில் உள்ள வெற்றிடத்தினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களின் NP/14/41(1)/1/Cadre.Cre/2018 ஆம் இலக்க 2018.04.27 ஆம் திகதிய கடிதத்திற்கமைவாக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி.இல	பதவிப் பெயர்	வெற்றிட எண்ணிக்கை
01	கனரக இயந்திர இயக்குநர் (ஒப்பந்த அடிப்படை)	01

சேவை நிபந்தனைகள்

1. இப்பதவி முற்றிலும் ஒப்பந்த அடிப்படையிலானது.
2. தங்களது பதவி 1 வருட ஒப்பந்தகாலத்தைக் கொண்டதாகும்.

அடிப்படைத் தகைமைகள்

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
3. நன்னடத்தை உடையவராகவும் சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். சபையால் தெரிவு செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் கல்வித் தகைமை, தொழில் அனுபவம், வேலை மனப்பாங்கு என்பவற்றுக்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
4. விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை

1. நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வரி நீங்கலாக ரூபா 50 இனைச் செலுத்தி விண்ணப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப் படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தப் பட்டு **"செயலாளர், நல்லூர் பிரதேசசபை, இல 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
4. தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் வேண்டும்.
5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின் படி விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் பொய்யானது என நியமனத்திற்கு முன்னராகவோ, பின்னராகவோ தெரியவரும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவ துடன் நியமனமும் நிறுத்தப்படும்
6. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்ப முடிவுதிகதி 2018.11.21 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ எமக்குக் கிடைக்கக கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கல்வித் தகைமைகள்:

1. கல்விப் பொதுத் தராதரசாதாரண பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. பதவி தொடர்பான அரச தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தொழிற் தகைமைச் சான்றிதழ் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தொழிற் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை / தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்குக் குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை (Class of Vehicle CCI) விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று வருடங்களிற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும்.
4. மோட்டார் வாகன சாரதியாக மூன்று வருட அனுபவத்திற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5 அடி 2½ அங்குலம் உயரம் கொண்டவ ராக இருத்தல் வேண்டும்.
6. விண்ணப்பதாரி இரவுபகல் எந்நேரமும் சேவையாற்றக் கூடிய உடல் உறுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண்பார்வையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
7. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மாதாந்த சம்பளம்

மொத்த மாதாந்தபடி ரூபா 32,891.00 மாத்திரம் வழங்கப்படும் வேறு எந்த விதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

05.11.2018

திரு.சு.சுதர்ஜன்,
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

(IN/82610)

யாழ்ப்பாண மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காகவும் 01.01.2019 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சட்ட ஆலோசகர் பதவிக்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சேவை நிபந்தனைகள்:

1. நியமிக்கப்படும் சட்ட ஆலோசகர்களின் எண்ணிக்கை 02 ஆகும்
2. இந்நியமனமானது ஒப்பந்த அடிப்படையிலானதாகும் ஒரு வருட முடிவில் மீள புதுப்பித்தலுடன் நடைமுறைப்படுத்தப்படும்.
3. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொழிற்துறை தீர்ப்புகளம் மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கின்ற நிறுவனங்கள் முதலியவற்றினால் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பாக தமது ஆலோசனைகளை வழங்க வேண்டும். மாநகர சபை சார்பில் இவ்வழக்குகளில் முன்னிலையாதல் வேண்டும்.
4. இந்த ஆலோசனைச் சேவையானது ஒருமாத கால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ, மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.
5. சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக தேவைக்கேற்ப அல்லது குறைந்த பட்சம் வாரத்தில் மூன்று நாள்கள் மாநகரசபை அலுவலகத் திற்கு வருகை தந்து சட்ட ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும்.

அடிப்படை தகைமைகள் :

1. உயர்நீதிமன்றில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து குறைந்தது 05 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான விடயங்களில் முன் அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் முறை :

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாநகரசபையால் நியமிக்கப்படும் தேர்வு குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்கும் முறை :

விண்ணப்பதாரியின் சுயவிவரங்களுடன் தகைமைகளிற்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பதிவுத்தபால் மூலம் முதல்வர் மாநகர சபை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்ப முடிவுதிகதியன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுதிகதி : 30.11.2018 ஆகும்.

கொடுப்பனவு விவரம்

நீதிமன்ற அமர்வு ஒன்றிற்கு	- ரூ. 1250.00
எழுத்து மூல சமர்ப்பணம் ஒன்றிற்கு	- ரூ. 7000.00
ஆட்சேபனை சத்தியக்கூற்று விவரக்கூற்று ஒன்றிற்கு	- ரூ. 7000.00
வழக்குக்கான பிராது	- ரூ. 7000.00
மறுமொழி ஒன்றிற்கு	- ரூ. 7000.00
மனு ஒன்றிற்கு	- ரூ. 7000.00

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
07.11.2018

இம்மானுவேல் ஆனல்ட்
மாநகர முதல்வர்.

சேவை நலன் பாராட்டு

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராகவும். விடுதிச்சகோதரியாகவும். தாதிய பரிபாலகராகவும் 38 வருடங்கள் சேவையாற்றி இன்று ஓய்வு பெறும்

திருமதி பாமா கணேந்திரகுமாரன்

அவர்கள் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம்.

கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு சி.சிதம்பரநாதன் அவர்களின் அன்புப் புதல்வர் செல்வன் சிதம்பரநாதன் அக்சயன் அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

(CS 21073 04.17)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கணபதி நடராசா

(கட்டை வேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஓய்வூதிய பணியாளர்)

பிறப்பு 17.03.1952 இறப்பு 20.10.2017

அன்பு மனைவி குரலுக்கும் அப்பா என்ற சொல்லுக்கும்
அயராது உழைத்து இன்று ஓய்வு எடுத்து ஓராண்டானது
எம்மை விட்டுப் பிரிந்தாலும் உமது நினைவுகள்
என்றும் எங்களை விட்டு அகலாது
மறுபிறவி என்றால் மறவாது கேட்போம் நீங்கள் வேண்டும் என்று
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

குடும்பத்தினர்.

(CS 21070) (04.17)

பெண் அலுவலக உதவியாள் தேவை

யாழ். நகரில் பிரதான வீதியில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு பெண் அலுவலக உதவியாள் தேவை. மோட்டார் சைக்கிள். சாரதி அனுமதிப் பத்திரம் இருப்பின் முன்னுரிமை.- 070 335 9934

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்:3106 திகதி:2018.11.07 புதன்கிழமை

சனிதா SATURDAY FORTUNE ஊதா

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து போனஸ் இலக்கம் அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

20 44 56 73 Y 59 49,463,100/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

பச்சை நிற டிக்கட்டுக்கள் 2018.11.10 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும் வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 427
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.11.07

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,106,090/-

வெற்றி இலக்கங்கள் 01 46 59 60 ஆங்கில எழுத்து Z

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ஊதா நிற டிக்கட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

DLB தேசிய கார்ப்பதி CAR PLUS

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 83
சீட்டிழுப்பு திகதி 07.11.2018

வெற்றி இலக்கங்கள் 08 30 50 ஆங்கில எழுத்து Q அதிஷ்ட நாள் குரலிறு

இன்னார் வெற்றியாளர்கள் பத்து இலட்சம் ஒரு இலட்சம் 14 வழங்கப்பட்ட மொத்த பரிசு 31, 00, 240/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>DL என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு 1919

அடுத்த சீட்டிழுப்பு 2018.11.14 ஆம் திகதி புதன்கிழமை வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்

திகதி 07.11.2018 வெற்றி வாரம் 2396 வர்ணம் பச்சை

கும்பம் வெற்றி இலக்கங்கள் 14 20 36 42

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 22, 09, 092/=

2018.11.09 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கூட்டமைப்பு...

பக்ச மற்றும் அமைச்சர்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூட்டமைப்புத் தெரிவித்து வரும் நிலையில், மகிந்த ராஜபக்ச கல்ந்து கொள்ளும் அபிவிருத்திக் கூட்டத்தில் கூட்டமைப்பு பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

ரணில்...

லும், அரச தலைவர் பதவியிலிருந்து மைத்திரிபால சிறிசேன விலகமாட்டார் என்று தெரியவருகின்றது. அவருக்கும் சிறுபான்மைக் கட்சிகளுக்கும் இடையில் கடந்த இரண்டு நாள்களாக நடந்த சந்திப்புக்களின் ஊடாக அறியமுடிகின்றது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனித் தனியே சந்திப்புக்களை நடத்தி வருகின்றார். இந்தச் சந்திப்புக்களின்போது, மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படும்போது நடுநிலமை வகிக்கக் கோரியுள்ளார்.

அதற்கு நான்கு கட்சிகளும் இணங்கவில்லை. நடுநிலமை வகிக்காவிடினும், ரணில் விக்கிரமசிங்க இதில் வெற்றி பெற்றால், தலைமை அமைச்சராக புதியவர் ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச தலைவர் நான்கு கட்சிகளிடமும் கோரியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களுடன் நடந்த கூட்டத்தில் பேசிய மைத்திரிபால, நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்று மீண்டும் தலைமை அமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டால் அடுத்த மணிநேரமே தனது அரச தலைவர் பதவியைத் துறப்பேன் என்று சவால் விடுத்திருந்தார்.

தற்போது அதிலிருந்து பின்வாங்கியுள்ள அரச தலைவர், ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால், அவருக்குப் பதிலாக ஐ.தே.க.விலிருந்து ஒருவரை நியமிக்குமாறு கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

2019 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2019.01.01ஆம் திகதி தொடக்கம் 2019.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் - 08.11.2018 – 19.11.2018 பி.ப 2.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி - 21.11.2018 பி.ப 1.30 மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி - 21.11.2018 பி.ப 2.00 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் - வலிகாமம் தெற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம்.

தொ இ	விபரம்	மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர)	மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு	ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர)	மாத வாடகை (VAT, NBT தவிர)
	சுன்னாகம் உப அலுவலகம்				
1	சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட)	3,000.00	30,000.00	11,027,100.00	
2	உடுவில் கீளிச் சந்தை	1,000.00	10,000.00	189,000.00	
3	கருவாட்டுக் கடை இல 03	750.00	7,500.00	41,685.00	250.00
4	முட்டைக் கடை இல 04	750.00	7,500.00	52,132.50	250.00
5	பொது மலசலகூடம்	750.00	7,500.00	38,640.00	
	உடுவில் உப அலுவலகம்				
1	மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட)	3,000.00	30,000.00	22,706,250.00	
2	மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம்	750.00	7,500.00	47,500.00	
3	இணுவில் சந்தை	750.00	7,500.00	65,625.00	
4	மல்வம் மாட்டிறைச்சிக் கடை	1,000.00	10,000.00	275,660.00	250.00
	ஏழாலை உப அலுவலகம்				
1	ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை	1,000.00	10,000.00	257,422.00	250.00
2	ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை	750.00	7,500.00	42,750.00	250.00

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை 2018.10.17 ஆம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

க.தர்சன்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

08.11.2018

கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர்

செல்லத்துரை மயூரன்

(உரிமையாளர், சிவசக்தி அரைக்கும் ஆலை, சாவகச்சேரி)

அவர்கள் 07.11.2018 காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

மரண அறிவித்தல்

மலர்வு 15 . 10 . 1978 உதிர்வு 07 . 11 . 2018

செல்லத்துரை மயூரதன்

சிவன்கோவில் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் டச்சுவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மயூரதன் நேற்று (07.11.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லத்துரை - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் பிரசாந்தியின் அன்புக் கணவரும் கந்தசாமி - பாலசரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் மதுசனின் (மாணவன் - யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை) பாசமிகு தந்தையும் யசோதரன். சுகந்தி, சுதாகரன், சுதர்சினி, சுரேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

106, டச்சு வீதி, சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்.





கறை படிந்துள்ள பற்களை வெண்மையாக்குவதற்கு....!

வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப்போகும் என்பதுதெரிந்தாலும்வாயில்ஏற்படும்சிலபிரச்சினைகள்எம்மைச்சிரிக்கவேவிடாது. அதில்முக்கியமான ஒன்றுபற்களில்கறைஏற்படுவது. உடலில்ஏற்படும்இரசாயனமாற்றங்கள்,உணவுப்பழக்கம், வாழ்க்கை முறை போன்ற பல்வேறுகாரணங்களால்பற்களில்கறைஏற்படுவதுண்டு. பிறரிடம்பேசுவதற்கேதயக்கத்தைஏற்படுத்திடும்பற்களின்கறையைப்போக்குவதற்கு நிறையச்செலவுசெய்யவேண்டும்என்றுஅவசியமில்லை. வீட்டிலேயேஎளிதாகப்போக்கலாம்.

கொய்யா: கொய்யாப் பழம் மற்றும் கொய்யா இலைகள் இரண்டுமே பற்களின் கறையை போக்கிடும். தினமும் ஒரு கொய்யாப்பழத்தை சாப்பிடலாம். அதேபோலகொய்யாஇலையைத் தண்ணீரில் கொதிக்க வைத்து அதனைக் கொண்டுவாயைக்கொப்பளித்துவாருங்கள்.

கற்றாழை ஜெல் : தினமும் கற்றாழை ஜெல் கொண்டுபற்களைத்தேய்த்திடுங்கள். இதனால் பற்களில் உள்ள கறை மறைவதுடன் வாய் துர்நாற்றமும்வராது.

கிராம்பு : ஒருகரண்டிகிராம்புப்பொடியுடன்ஒருகரண்டிஒலிவ்எண்ணைகலந்து, கறைபடிந்தபற்களில்தேய்த்திடுங்கள். சிறிதுநேரத்துக்குப்பின்வெதுவெதுப்பானநீரில்வாயைகொப்பளித்துவிடுங்கள். இரவுபடுப்பதற்குமுன்பாகஇதனைச்செய்யவேண்டும்.

தோடம் பழத்தோல் : தோடம் பழத்தோலைக் கொண்டு பற்களை நன்றாகத் தேய்த்துவிடுங்கள். இதனைத் தேய்த்தப்பிறகு வேறு எதையும் சாப்பிடவோ குடிக்கவோ கூடாது. பின்னர் மறுநாள்காலைஎழுந்துவாயைக்கொப்பளிக்கலாம். இரவு முழுவதும் பற்களில் படர்ந்திருப்பதால் தோடம் பழத்தோல் கறையை போக்குவதுடன் கிருமிகளையும்அழித்திடும்.

சீஸ் : சீஸ்சாப்பிடுவதால்எச்சிலில்அல்கலைன்அளவுஅதிகரித்துப்பற்களில்கறைபடிவதுதடுக்கப்படும். அதுமட்டுமின்றிஅவை, பற்களின்மேலேஒருபடலத்தைஉண்டாக்கிப்பற்களில்கறைபடிவதைத்தடுத்திடும். இதனால்உணவுஉட்கொண்டபிறகுசிறிதளவுசீஸ்எடுத்துவாயில்போட்டுக்கொள்ளுங்கள்.

அப்பிள் : உணவைச் சாப்பிட்டு முடித்த ஒரு மணி நேரம் கழித்து அப்பிள் ஒரு துண்டு எடுத்து சாப்பிடுங்கள். இதனால்பற்கள்சுத்தமாவதோடுஈறுகளும்ஆரோக்கியமாகஇருக்கும்.

இதனைதொடர்ந்துசெய்தால்பற்களில்கறைபடிவதுதடுக்கப்படும்.



காய்கறிகளை வெட்டுவதற்காக புதிய வடிவில் தயாரிக்கப்பட்ட உபகரணம் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளது. இது 340 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.



இனிப்புப் பூந்தி

தேவையான பொருள்கள் :

கடலைமாவு : 1கப்
சீனி : 3/4கப்,
தண்ணீர் : கால்கப்,
எண்ணெய் : பொரிக்க,
உலர்ந்ததிராட்சை, கராம்பு, ஏலக்காய்,
முந்திரி : தேவையான அளவு.

செய்முறை :

முதலில் கடலை மாவைச் சிறிது அப்பச் சோடா கலந்து தண்ணீர் விட்டு பஜ்ஜி மாவு பதத்துக்குக் கரைத்துக் கொள்ளவும். நிறம் வர சிறிது வண்ண எசன்ஸ் கலந்து கொள்ளவும்.
வண்ணம் தேவையில்லை யெனில் அது வெள்ளை கலர்ப் பூந்தியாகவும் செய்து கொள்ளவும்.
வாணலியில் நெய் விட்டு முந்திரி, ஏலக்காய் போன்றவைகளை பொரித்து வைத்துகொள்ளவும்.
வேறு வாணலியில் எண்ணெய் விட்டு சூடானதும், அதில் கரைத்த கடலை மாவை கரண்டியில் விட்டு முத்து முத்தாய் பொரித்து எடுத்து கொள்ளவும்.
அதன் பின் ஒரு பாத்திரத்தில் சீனி மற்றும் தண்ணீர் கலந்து சீனிப்பாகு தயார் செய்யவும். அதாவது முறுகிய பதத்தில் சர்க்கரை பாகு வரவேண்டும்.
இதில் பொரித்த பூந்திகளைப் போட்டு கிளறி உதிரியாகச் செய்து அதனுடன் பொரித்த முந்திரி, திராட்சைகளைக் கலந்து பரிமாறவும்.

சுப்பரான இனிப்புப் பூந்தி ரெடி.



நுளம்புத் தொல்லையை விரட்ட...

எலுமிச்சையைப் பாதியாக வெட்டி, அதன் மேல் கிராம்பைச் சொருகி, நுளம்புகள் நுழையும் இடத்தில் வைத்தால் நுளம்புகள் வருவதைத் தடுக்கலாம்.

வீட்டில்நாம்உட்காரும்இடத்தின்அருகில்ஒரு சிட்டியில்கோப்பித்தூளைவைத்துக்கொண்டால்நுளம்புகள்வராது.

ஒரு சிட்டியில் தண்ணீர் ஊற்றி, அதில் சில துண்டுகள் கற்பூரத்தைப் போட்டு, நுளம்புகள் நுழையும் இடத்தில் வைப்பதன் மூலம், நுளம்புகள் வருவதைத் தடுக்கலாம்.

பாதங்களை மிருதுவாக்குவோம்...

பெண்கள்தங்கள்முகத்தைப்பராமரிக்கச்செலவிடும்நேரத்தில் சிலநிமிடங்கள்கூடத்தங்கள்பாதங்களைக்கவனிக்கச்செலவு செய்வதில்லை. பெரும்பான்மையானபெண்களுக்குப்பாதங்களில்ஏற்படும்பிரச்சினைபித்தவெடிப்பு. இவற்றைநீக்குவதற்கான வழிவகைகளைப்பார்ப்போம்...

- விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றைச் சம அளவில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் சிறிது மஞ்சள் தூளை கலந்து பச்சை போல் குழைத்து அதைப் பாதத்தில் வெடிப்புஉள்ளஇடங்களில்தடவிச்சிறிதுநேரம்கழித்துக்கழுவ வேண்டும். இவ்வாறு செய்வதால் பித்த வெடிப்பு முற்றிலும் குணமாகும்.
- வேப்பிலை, மஞ்சள் ஆகியவற்றுடன் சிறிதளவு சுண்ணாம்பு சேர்த்துஅரைக்கவேண்டும். இந்தக்கலவையில்விளக்கெண்ணெய்சேர்த்துபித்தவெடிப்புஉள்ளஇடங்களில்பூசினால்பித்த வெடிப்பு முற்றிலும்நீங்கும்.
- பப்பாளிப் பழத்தை மிருதுவாக அரைத்து அதைப் பாதங்களில் வெடிப்புஉள்ளபகுதிகளில்தேய்க்கவேண்டும். அவைஉலர்ந்ததும்பாதத்தை தண்ணீரில்நனைத்துத்தேய்க்க வேண்டும். இவ்வாறுதொடர்ந்துசெய்துவந்தால்பித்தவெடிப்புமுழுவதும் குணமாகும்.
- மருதாணிஇலைகளைநன்றாகஅரைத்துபித்தவெடிப்புஉள்ள இடங்களில்தேய்த்து உலரவிடவேண்டும். பின்தண்ணீரால் கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் நாளடைவில் பித்த வெடிப்பு முழுவதும்குணமாகும்.
- வேப்ப எண்ணெயில் சிறிதளவு மஞ்சள் பொடியைக் கலந்து பசைபோல்குழைத்துபித்தவெடிப்புஉள்ளஇடத்தில்தடவினால் பித்த வெடிப்பு முழுவதும்குணமாகும்.
- இரவு நேரத்தில் தூங்கப் போவதற்கு முன் காலை நன்றாகத் தேய்த்துக் கழுவி சிறிது தேங்காய் எண்ணெய் தடவி தூங்கப் போகலாம். இப்படிச் செய்தால் பித்த வெடிப்பு வராமல் நீங்கள் தடுக்கலாம்.
- குளித்து முடித்ததும் பாதங்களை ஈரமில்லாதவாறு துணியால் துடைக்க வேண்டும். பின்பாதத்தில் சிறிது விளக்கெண்ணெய் தேய்த்து வந்தால் பித்த வெடிப்பு வராமல் தடுக்கலாம்.

சிவதாஸ்

'இலுப்பை'

"குழந்தைப் பேறின்றி நம்பிக்கையற்ற வாழ்வை நாடிப் பயணிப்பது போல, மரங்களற்ற நாடும் உதவிக் கரங்களற்ற ஏதிலியின் பாடுகளையே சுமந்திருக்கும்."

இயற்கையின் பேறான அளிக்கை

காணும்இடமெல்லாம்தோப்பாக இருந்த காலங்களும், மங்கையரின் கூந்தலைமெருகூட்டஅரப்பாகப்பயன்படுத்தப்பட்ட தன்மைகளும் பாகு, பலகாரம் என சுவைத்திட்ட நினைவுகளும் இன்று கதையாகிப் போனாலும் இலுப்பையின் மகத்துவமும் இனிமையும் எந்தக் காலத்திலும் மறந்திட முடியாத திரவியம்.

முக்கியத்துவம்

இலுப்பை உணவாகவும், குடிபானமாகவும், மருந்தாகவும் மனிதருக்குப் பயன் தந்தது. தவிரபயிருக்கு உரமாகவும், காற்றுத்தடை வேலியாகவும், கால்நடைகளுக்குநல்லஉணவாகவும்விளங்கியது. எனினும் அதிகரித்த பயன்பாடுடைய பயன்தரு மரமான இலுப்பை அழிவின் பாதையில்பயணிக்கிறது.

பழந் தமிழர்கள் இலுப்பைப் பூவையும், பழத்தின் சதைப்பகுதியையும் நொதிக்கவைத்து'சோமபானம்' தயாரித்தார்கள் என்பது வரலாறு. அது உடல் நலனுக்குத் தீங்கிழைக்காத மதுவாக இருந்தது. ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை என்பார்கள்.

அந்தவகையிலே பாலைநிலத்தில் வாழும் பழங்குடியினருக்குக்கோடைகாலத்தில்குடிநீராகவும், உணவாகவும் இலுப்பை பயன்பட்டது. இலுப்பைப்பூ அரிசி, மக்காச்சோளம் போன்ற வற்றுக்கு இணையான காபோவைதரேற்றுச்சத்தைஇதுநிறைவாகக் கொண்டுள்ளது. இதை ஆய்வுத்தரவுகள்வெளிப்படுத்தியுள்ளன. பூவைப்போல விதையும் சிறப்பு வாய்ந்தது. வீடுகளில் தீபம் ஏற்றுவதற்கு ஒரு காலத்தில் இதன் எண்ணெய் பயன்படுத்தப்பட்டது.

எண்ணெய்எடுத்தபின்புகைடைக்கும்பிண்ணாக்கு வயலுக்கு உரமாகப் பயன்படத்தப்பட்டது. இலுப்பம்எண்ணெயில்'சப்போனின்' என்ற வேதிப்பொருள் காணப்படுவதால்'சம்போ' போலதலைகுளிக்கபயன்படுத்தலாம். இதன் மூலம் பொடுகு, நரை இல்லாமல் கூந்தலைப் பராமரிக்கலாம். பலகாரம் செய்யவும் இலுப்பைப்பூ எண்ணெயைப் பயன்படுத்தியதாக மூத்தோர் இன்றும்கருத்துரைக்கின்றனர். இலுப்பை மரம் உறுதியானது. இதனால் தொடருந்துத் தண்டவாளத்துக்கும், கப்பல் கட்டுமானப்பணிகளுக்கும்இவற்றைப்பயன்படுத்துகின்றனர்.

இலுப்பைமரத்தின்காய்கள்மற்றும்பழங்களை நாடிப் பலவகையான பறவைகளும், வண்டினங்களும் படையெடுத்து வருவதால், விவசாய நிலங்களில் இலுப்பை மரங்களை ஆங்காங்கு நடுவதன் ஊடே பயிரைத் தாக்கும் பூச்சிகளை உயிரினமுறையில்கட்டுப்படுத்தமுடியும்.

மருத்துவப் பயன்

போதுமான பால் சுரக்காத தாய்மார்களுக்கு, இலுப்பை இலையை மார்பில் வைத்துக்கட்டினால்தாய்ப்பால்நன்றாகச் சுரக்கும். இலுப்பைப்பூவை தண்ணீரில் போட்டு சுடவைத்து அந்த நீரை பருகிவந்தால் வெப்பத்தால் உண்டான சளி, ஆறாஇருமல், தீராததாகம் போன்றவைதீரும். இடுப்பு வலி, பித்த வெடிப்பு, மூலநோய் போன்றவற்றுக்கும்மருந்தாகப்பயன்படும்.

நாமகரணம்

இது 'மடுகா லோஞ்சி போலியா' என்னும் தாவரவியல் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. 'சப்போடேசியே' குடும் பத்தை சார்ந்தது. ஆங்கிலத்தில் 'இந்தியன் பட்டர்' என்றும்சிங்களத்தில்'மீ' என்றும்அழைக்கப்படுகிறது. இவற்றில்இரண்டுஇனங்கள் உண்டு. அகன்ற இலையைக் கொண்ட இனமாக விளங்குகிறது. 'மதுகா லாட்டி போலியா' நீண்ட இலைகளை உடைய இனம். 'ம்முகாலாஞ்சிபோலியா' எனவும் இதை அழைப்பர்.

சூழல் இயைபாக்கம்

இவை உலர் வறல்வலயத்தில் வளரக்கூடியவை. பொதுவாக எல்லாவகை மண்ணிலும் வளரும். 15 மீற்றர் உயரம் வரை வளரக்கூடிய பருத்த மரம். நாலாபுறமும் கிளை பரப்பி வளரும் தனமையுடையது. பூக்கள் நறுமணம் வீசும். விதைகள் எண்ணெய்த் தன்மை கொண்டது.

நடுகை

மரங்களில் இருந்து விழும் பழங்களில் இருந்து சதையை நீக்கி, விதையை அப்புறப்படுத்தி உடனேயே அதை விதைக்க வேண்டும், எண்ணெய்த் தன்மை கொண்ட விதை என்பதால் உடனேயே விதையை நடுகை செய்ய வேண்டும். அவ்வாறுசெய்யாவிடின்முளைப்புத்திறன் குறைவடையும்.

30 அடி இடைவெளியில் 3 தொடக்கம் 4 விதைகளை நடுகை செய்ய வேண்டும். அவை முளைத்தபின் ஆரோக்கியமான ஒரு நாற்றைத் தெரிவு செய்துகொண்டு ஏனையவற்றறை அகற்றலாம். 6 தொடக்கம் 10 ஆண்டுகளில் அறுவடையைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலுப்பைமரம் தை மாத காலப்பகுதியில் இலைகளை உதிர்த்து மாசி மற்றும் பங்குனி மாதங்களில் புதுத்தளிர்களை உருவாக்கிக் கொள்ளும். பங்குனி மற்றும் சித்திரை மாதங்களில் பூக்களை உருவாக்கி வைகாசி மற்றும் ஆனி மாதங்களில் கனிகளைத் தரும்.

பயன்

இலுப்பைப்பூ பாகு தயாரித்தல், ஜாம் மற்றும் ஜெலி தயாரித்தலில் பயன்படுகிறது. இலுப்பைப் பழம் உணவாக உண்ணவும்,எண்ணெயைப்பெற்றுக்கொள்ளவும் பயனுறுதியாக்கப்படுகிறது. கால்நடைத் தீவனம் மற்றும் இன்னபிற மருத்துவ தேவைகளின்பயன்பாட்டையும்குறிப்பிடலாம்.

பீடைகள்

இலுப்பைப் பழங்கள் பழுக்கும் காலத்தில் கிளி, வெளவால், அணில் ஆகியவற்றின் நடமாட்டமும்தொல்லையும்அதிகரித்துக் காணப்படும்.

விளைச்சல்

நன்றாகவளர்ந்தஇலுப்பைமரத்தில்ஆண்டுக்கு சராசரியாக 90 கிலோ பூக்களைப் பெறலாம். ஒரு மரத்தில் ஆண்டுக்கு 100 தொடக்கம்150 கிலோ விதை கிடைக்கும். ஒருகிலோவில்450விதைகள்இருக்கும். ஒரு கிலோ விதையை அரைத்தால் 300 மில்லி லீற்றர் எண்ணெயைப் பெற்றுக் கொள்ளலாம்.

கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
07.01.1957

விண்ணில்
06.11.2018

உதயனின் மூத்த உதவி ஆசிரியர்
திரு. இராஜேஸ்வரன் அவர்களின் மனைவி
திருமதி இராஜேஸ்வரன்
பிரேமாவதி

அவர்களின் இழப்பால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

உதயன் குழுமத் தலைவரும்,
பணியாளர்களும்

நடுநிலை...

யோருக்கும் இடையில் அரச தலைவர் செயலகத்தில் நேற்று ஒன்றரை மணிநேரம் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் ஆரம்பத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கருத்துத் தெரிவித்துள்ளார். 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டேன் என்பதில் தொடங்கி, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கியமை வரையிலான விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் தற்போதைய அரசியல் குழப்பங்கள் தொடர்பில் இரு தரப்பினரும் ஆராய்ந்துள்ளனர். நாடாளுமன்றத்தில் புதிய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்பிக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானம் மீதான வாக்கெடுப்பின்போது கூட்டமைப்பு நடுநிலமை வகிக்கவேண்டும் என்று அரச தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் கூட்டமைப்பு அதனை நிராகரித்துள்ளது. மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகச் சமர்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குவது என்று கட்சி முடிவு எடுத்து அறிவித்துள்ளமையை அரச தலைவருக்குச் சுட்டிக்காட்டினர். மகிந்த ராஜபக்சவை கூட்டமைப்பு ஆதரிக்க முடியாதிருப்பதை தான் ஏற்றுக் கொள்வதாக அரச தலைவர் இதன்போது கூறியுள்ளார்.

இதேவேளை அரச தலைவருடனான சந்திப்புத்தொடர்பில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை தொடர்பில்மிக நீண்டகலந்துரையாடல் இடம் பெற்றது. இதன்போது அரச தலைவர் சில முடிவுகள் எடுக்கப்பட்டதன் பின்னணி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினருக்கு விளக்கமளித்தார். இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் அதன் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கான காரணங்களை மைத்திரிக்கு கூட்டமைப்பினர் எடுத்துக் கூறினார்கள். இந்தத் தீர்மானங்கள் ஏற்கனவே பகிரங்கமாக முழு நாட்டுக்கும் உலகிற்கும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.தாம் ஏற்கனவே எடுத்த தீர்மானங்களை மாற்ற முடியாது என்றும் அந்தத் தீர்மானங்களின்படியே தாம் செயற்படுவோம்என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மைத்திரிக்கு கூறினார்கள். அனைத்துக் கட்சிகளினுடைய இணக்கப்பாட்டோடு நாட்டின் அரசியல் சூழ்நிலையை சுமூகநிலைக்கு கொண்டு வருவதற்காக எதிர்காலத்தில் அரச தலைவர் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அவரோடு கலந்தாலோசித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது முழுமையான ஆதரவைக் கொடுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழு மைத்திரிக்கு உறுதியளித்தது.

இந்த நிலையை விரைவாக அடைவதற்குத் தற்போது யோசித்துள்ள திகதிக்கு முன்னதான ஒரு திகதியில் நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டுமென்று அரச தலைவருக்கு கூட்டமைப்பு வலியுறுத்தியது. இந்த வேண்டுகோளைத் தான் கவனமாக ஆராய்வதாக மைத்திரி உறுதியளித்தார் - என்றுள்ளது. (5,105)

வடக்கு...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பு ஆரம்பித்து 15 நிமிடங்களின் பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் குரேயும் இதில் பங்கேற்றுள்ளார்.

கூட்டு அரசு தொடரவேண்டும் என்பதே கூட்டமைப்பின் விருப்பம் என்று சம்பந்தன் கூறியுள்ளார். தமிழ் மக்களின் பிரச்சினைக்கு கூட்டு அரசாலேயே தீர்வு காண முடியும் என்று சம்பந்தன் அழுத்தித் தெரிவித்துள்ளார்.

இதன்போது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், கூட்டாட்சி அரசமைப்பு மற்றும் வடகிழக்கு இணைப்பு என்பனவற்றுக்கு நான் உயிரோடு இருக்கும் வரையில் இடமளிக்கப் போவதில்லை என்று நீங்கள் கூறியதாக செய்திகள் வெளிவந்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நானும் அந்தச் செய்திகளைப் பார்த்தேன். நான் அப்படி எதுவும் சொல்லவில்லை. அன்று நடந்தது எங்கள் கட்சி அமைப்பாளர்களுடனான கூட்டம். அந்தக் கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்பட்டன. பேசப்பட்டன. அது கலந்துரையாடலாகவே நடந்தது. அங்கு நான் இப்படியொன்றைச் சொல்லவில்லை. இதனை விரைவில் பொதுமேடையில் அறிவிப்பேன் இதேவேளை, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரனை உருவி எடுத்து அவருக்கு பிரதி அமைச்சுப் பதவி வழங்கியமை தொடர்பில் கூட்டமைப்பினர் மைத்திரியிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். தனக்கு இது தொடர்பில் எதுவும் தெரியாது என்றும், ஆள் ஒருவரை தன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார்கள் என்றும், அவருக்கு தான் பதவிப்பிரமாணம் செய்து வைத்தேன் என்றும் குறிப்பிட்டமைத்திரி, இந்த நடவடிக்கை பிழையானது என்பதை ஒப்புக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்-என்றார். (5,105)

தீர்வு...

வீதியில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் தயாசிறி ஜயசேகர இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மகிந்தவா அல்லது ரணிலா என்பது முக்கியமல்ல. அவர்கள் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வொன்று அவசியம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஜக்கிய தேசியக் கட்சிக்கு கூட்டமைப்பு ஆதரவளிக்குமானால் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது.

தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வை சிங்கள மக்களிடம் கொண்டுசென்று அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள மகிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரால் மாத்திரமே முடியும். ரணில் விக்கிரமசிங்கவால் ஒருபோதும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை சிங்கள மக்களின் அங்கீகாரத்துடன் பெற்றுக்கொடுக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை தெளிவாக விளங்கிக்கொள்வது அவசியம்.

நாங்கள் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளிக்குமாறு கோரவில்லை. ஆனால், ஜக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பாதிப்புக்கு உள்ளாக்கிவிடாதீர்கள். கூட்டமைப்பின் தலைமைக்கு இது நன்றாகத் தெரியும். ஆனால், எதிர்காலத்தில் ஜக்கிய தேசியக் கட்சின் தேசியப் பட்டியல் உறுப்புரிமையை பெற்றுக்கொள்வதற்காக சிலர் தவறாக வழி நடத்துகின்றனர் - என்றார். (5,10)

நாடாளுமன்றம் கலைக்...

மன்ற உறுப்பினர்கள் பகிரங்கமாக அறிவித்துள்ள நிலையில், புதிய அரசின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அரச தலைவர் செயலகத்துக்கு நேற்று மாலை அவசரமாக அழைத்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அவர்களுடன் முக்கிய பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் புதிய தலைமை அமைச்சர் மகிந்தவும் கலந்துகொண்டார்.

113 உறுப்பினர்களின் பெரும்பான்மைப் பலம் எங்களிடம் உள்ளது. அதனை நாடாளுமன்றத்தில் நிரூபித்துக் காட்டுவோம். எந்தக் காரணம் கொண்டும் நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது. நாடாளுமன்றக் கலைப்பு தொடர்பில் ஐ.தே.கவினர் கட்டுக்கதைகளை வெளியிட்டு வருகின்றனர். இதனை எவரும் நம்பவேண்டாம், என்று மைத்திரியும், மகிந்தவும் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அரச தகவல் திணைக்களமும், நாடாளுமன்றம் கலைக்கப்படமாட்டாது என்று நேற்றிரவு அறிக்கை வெளியிட்டது. (5)

வடகிழக்குச்...

செயலணியின் கூட்டம், அரச தலைவர் செயலகத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. கடந்த கூட்டத்தில் வடகிழக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகள் விடுவிப்புத் தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது.

கடந்த மாதம் 26ஆம் திகதி தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை தடாலடியாக நீக்கிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை நியமித்தார். இந்த நியமனம் அரசமைப்புக்கு முற்றிலும் விரோதமானது என்று தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, தலைமை அமைச்சராக தானே தொடர்வதாக அறிவித்திருந்தார். இதனால் நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

வடகிழக்கு அரச தலைவர் அபிவிருத்திச் செயலணியின் கடந்த காலக் கூட்டங்களில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான மனோகணேசன், சுவாமிநாதன், ஹக்கீம், ரிசாட் பதியுதீன் உள்ளிட்ட அமைச்சர்கள் கடந்த காலங்களில் பங்கேற்றிருந்தனர்.

இன்று நடைபெறவுள்ள கூட்டத்திற்கு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அனைத்து மக்கள் பிரதிநிதிகளுக்கும், புதிய தலைமை அமைச்சர், மகிந்த ராஜபக்ச மற்றும் புதிய அமைச்சர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. (5)

ராஜபக்ச...

சுகாதாரம் போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சராகவும், எஸ்.பி.திசாநாயக்க பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சராகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

பவித்திராதேவி வன்னியாராச்சி பெற்றோலியவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகவும் அரச தலைவர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துள்ளார். (5)

14 ஆம்...

வழங்கப்படும் என்று சபாநாயகர் கரு ஜயசூரியா அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 14ஆம் திகதி கூட்டப்படும் போது அரச தலைவரின் கொள்ளை விளக்க உரை மட்டுமே இடம்பெறும் என்று புதிய அமைச்சரவைப் பேச்சாளர் நேற்று முற்பகல் தெரிவித்த நிலையில் சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று மாலை இடம் பெற்றது. மகிந்த அணியினரும் பங்கேற்றிருந்தனர். நாடாளுமன்றத்தை அரச தலைவர் முடக்கியுள்ளமை தொடர்பில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

நாடாளுமன்றம் 14ஆம் திகதி கூட்டப்படும் போது, மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக சமர்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்புக்கு அனுமதி வழங்கப்படும் என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார். மகிந்த அணியினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். அன்றைய தினம் வாக்கெடுப்புக்கு அனுமதி வழங்க முடியாது என்று கூறியுள்ளனர். ஆனாலும், சபாநாயகர் கரு ஜயசூரிய அன்றைய தினம் வாக்கெடுப்பு நடக்கும் என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார். (5,105)

கோத்தா...

பகுதியில், சிறிய உழவு இயந்திரத்துடன் மோதி இந்த விபத்து ஏற்பட்டது.

உழவு இயந்திரத்தில் மோதிய கோத்தபாய ராஜபக்சவின் வாகனம், கட்டுப்பாட்டை இழந்து மரம் ஒன்றுடன் மோதி நின்றது. இந்தச் சம்பவத்தில் கோத்தாபய ராஜபக்சவுக்கோ, அவரது மனைவிக்கோ எந்தக் காயங்களும் ஏற்படவில்லை. அவர்கள் மற்றொரு வாகனத்தில் ஏறி பயணத்தை தொடர்ந்தனர்.

இந்த விபத்தில் உழவு இயந்திரத்தின் சாரதி படுகாயமடைந்தார். கோத்தபாய ராஜபக்சவின் வாகனச் சாரதியும் சிறிய காயங்களுக்கு உள்ளானார். (5)

மக்களாட்சிக்கு...

கிரமசிங்கவை நியமிப்பதற்குமே மக்கள் ஆணை வழங்கப்பட்டது. அரசியல் நெருக்கடிகளில் ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் பதவிகளைப் பெற்றுக்கொண்டு கீழ்த்தரமாக நடந்துகொள்ள ஒருபோதும்

யாழ் வருகிறார் திருமாவளவன்

யாழ்ப்பாணம் நவ 8

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண மரநடுகை தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் மரநடுகையும், மலர் கண்காட்சியும் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவே திருமாவளவன் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். (8)

நான் முயற்சிக்க மாட்டேன். அரச தலைவர் என்னை தலைமை அமைச்சராக நியப்பது தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவித்தேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், தலைமை அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு உங்களிடம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரியதாக தெரிவித்த கருத்துத் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய அரசில் நெருக்கடிகளும், பிரச்சினைகளும் ஏற்பட்டிருந்த தருணங்களில் இருதரப்பிலும் இணக்கப்பாட்டை ஏற்பட்டுத்தவே நான் ஒவ்வொரு முறையும் செயற்பட்டிருந்தேன். நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவிகளின் பின்னால் செல்பவன் அல்ல. எடுக்கப்படும் முடிவுகளால் மக்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளின் அடிப்படையில் தீர்மானம் எடுப்பவன்.

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின் போது மக்களிடம் ஆணையைப் பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் ஒரு தேர்தல் அறிக்கையை முன்வைத்திருந்தோம். அதில் அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன தெரிவுசெய்யப்பட்டப் பின்னர் தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவே நியமிக்கப்படுவார் எனவும் தெளிவாக கூறப்பட்டிருந்தது. அதேபோல் 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்கள் ஆணை இதற்குதான் வழங்கப்பட்டது. தலைவருடன் மோதுவது அல்ல ஜனநாயகம் - என்றார். (5,10)

நாடாளுமன்றம்...

தேசியக் கட்சியின் குற்றச்சாட்டால் கொழும்பு அரசியலில் நேற்று மாலை தீடீர் பரபரப்பு ஏற்பட்டது.

ஏற்கனவே முன்னாள் தலைமை நீதியரசர் சரத் என் சில்வா, நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு அரச தலைவருக்கு அதிகாரம் இருக்கின்றது என்று கருத்து வெளியிட்டிருந்தார். 19ஆவது திருத்தச் சட்டம் ஊடாக, நான்கரை ஆண்டுகளுக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்ற சரத்து, அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரம் முன்பாகச் செல்லுபடியாகாது என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான அஜித் பி பெரேரா, சரத் பொன்சேகா ஆகியோர் நாடாளுமன்றம் கலைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

ஏற்கனவே அரசமைப்புக்கு முரணாக நடவடிக்கைகளை எடுத்த அரச தலைவர், தற்போதும் அவ்வாறானதொரு முயற்சியை எடுக்கவுள்ளார் என்றும் அவர்கள் குற்றம் சுமத்தினர்.

நேற்றுமாலை திடீரென வெளியான இந்தத் தகவலால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சமூக ஊடகங்களிலும் இந்த விடயம் பேசு பொருளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,8)

ஐக்கிய கழகத்தின் கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ. 8
மன்னார் ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.
பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணிக்கும் சாந்திபுரம் குறோஸ்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பனங்கட்டிக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
எமில்நகர் இருதயநாதர் விளையாட்டுக் கழக அணிக்கும் வங்காலை சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் எமில்நகர் இருதயநாதர் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
சென். லூட்சியா விளையாட்டுக் கழக பி அணிக்கும் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென். லூட்சியா விளையாட்டுக் கழக பி அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தாராபுரம் அல்ஜின்னா விளையாட்டுக் கழக அணிக்கும் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக சி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தாராபுரம் அல்ஜின்னா விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

தெல்லிப்பழை மகாஜனா இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 8
இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி இன்னிங்ஸ் வெற்றிபெற்றது.
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 16.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 31 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பந்துவீச்சில் ஜேம்சன் 6 இலக்குகளையும், அணித் தலைவர் கோகுல்நாத் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி 42 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 187 ஓட்டங்களை பெற்ற நிலையில் தனது ஆட்டத்தை நிறுத்தியது. அதிகபட்சமாக வசிகரன் 86, யோவெல் றொசான் ஆட்டம் இழக்காமல் 50 ஓட்டங்களைப் பெற்றனர்.
தனது இரண்டாவது இன்னிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 31.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 82 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதையடுத்து இன்னிங்சால் வெற்றிபெற்றது மகாஜனா. (ம-422)

நீண்ட போராட்டத்தின் பின்னர்

பற்றிசியன்சை தோற்கடித்தது சென்றலைட்ஸ்

யாழ்ப்பாணம், நவ. 8
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி கிண்ணம் வென்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது கால் பாதியில் 18:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது பற்றிசியன்ஸ். இரண்டாவது கால் பாதியை 14:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியது சென்றலைட்ஸ். முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா 31 புள்ளிகளைப் பெற்றிருந்தன.
மூன்றாவது கால்பாதியை 11:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியது பற்றிசியன்ஸ் அணி. நான்காவது கால்பாதி 15:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென்றலைட்ஸிடம் சென்றது.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா 56 புள்ளிகளைப் பெற்றிருந்தன. இதனால் வெற்றியைத் தீர்மானிப்பதற்காக மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டன. மேலதிக நிமிடங்களில் ஆதிக்கம் செலுத்திய சென்றலைட்ஸ் முடிவில் 61:60 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

இறுதியில் சுப்பர்றாங்

தீபாவளித் திருநாளை முன்னிட்டுபுதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் சுப்பர்றாங் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் சுப்பர்றாங் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் சுப்பர்றாங் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.
(ம-23)

சதுரங்கம்

இலங்கைச் சதுரங்கச் சம்மேளனத்தால் நடத்தப்படும் இளையோருக்கான இருபாலருக்குமான தேசியமட்ட சதுரங்கத் தொடர் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதுவரையில் போட்டிக்கான பதிவுகளை மேற்கொள்ளாத போட்டியாளர்கள் போட்டி நடைபெறும் மண்டபத்தில் நண்பகல் 2.30 மணிக்கு முன்னதாக வருகைதந்து பதிவுகளை மேற்கொண்டு போட்டிகளில் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-23)

சென். யூட் அதிரடி

யாழ்ப்பாணம், நவ. 8
தீபாவளித் திருநாளை முன்னிட்டு புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் சென். யூட் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முந்தினம் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி மோதியது. 10:1 என்ற கோல் கணக்கில் சென். யூட் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.
(ம-23)

சங்கடத்தில் ஆஸி அணி

ஸ்ரெய்ன் கிண்டல்

"ஆஸ்திரேலிய அணி தற்போது மிகவும் சங்கடமான நிலையில் உள்ளது" என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன்.

தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் ஸ்ரெய்னின் அபாரமான பந்து வீச்சால் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. ஸ்ரெய்ன் ஆட்டநாயகனாகவும் தெரிவானார். இந்த நிலையில் ஆஸ்திரேலிய அணியின் தற்போதைய நிலையை விமர்சித்துள்ளார் ஸ்ரெய்ன்.

"ஆஸ்திரேலிய அணி தற்போது பெரும் சங்கடத்தில் உள்ளது. வெற்றிக்கான வழியை அறியாது தவிக்கிறது" என்று ஸ்ரெய்ன் மேலும் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் ஆஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. இந்தத் தொடரின்போது தென்னாபிரிக்காவின் பேரெழுச்சியைத் தடுக்க பந்தைச் சேதப்படுத்தும் வியூகத்தைக் கையிலெடுத்தது ஆஸ்திரேலிய அணி. இந்த விவகாரத்தில் முன்னாள் தலைவர் சிமித், உபதலைவர் வோர்ணர், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குரொப்ட் ஆகியோர் சிக்கித் தடைபெற்றனர். இந்த விவகாரத்தையே ஸ்ரெய்ன், "ஆஸ்திரேலிய அணி தற்போது மிகவும் சங்கடமான நிலையில் உள்ளது" என்று குறிப்பிட்டார் என்று சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)





டோனி வேண்டும் பன்ட் வேண்டாம்

சமூக வலைத்தளங்களில் விளாசல்

இந்திய ரி-20 அணியில் இருந்து டோனி நீக்கப்பட்டு பதில் வீரராக பன்ட் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், பன்ட் நீக்கப்பட்டு மீண்டும் டோனி அணிக்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்று சமூக வலைத் தளங்களில் கருத்துக்கள் குவிந்துள்ளன.

டோனி அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருடன் பெரும்பாலும் ஓய்வு பெறலாம் என்பதால் அவர் ஆஸ்திரேலியாவில் 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ரி-20 உலகக்கிண்ணத் தொடரைக் கருத்தில்கொண்டு ரி-20 அணியில் இருந்து அண்மையில் நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக பன்ட் சேர்க்கப்பட்டார். இந்த முடிவுக்கு டோனியின் ரசிகர்கள் மிகப்பெரும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களிலும் பன்ட் பெரியளவில் பிரகாசிக்கவில்லை. முதலாவது ரி-20 ஆட்டத்தில் ஓர் ஓட்டத்துடனும், நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் வெறும் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தார். இதையடுத்தே பன்ட்டுக்கு எதிராகவும் இந்திய அணியின் தெரிவுக் குழுவுக்கு எதிராகவும் முழக்கமிட ஆரம்பித்துள்ளனர் டோனியின் ரசிகர்கள். "டோனி விரும்பும் வரை அவரை விளையாட அனுமதிக்க வேண்டும்" என்றவாறாக அவர்கள் பதிவிட்டு வருகின்றனர். (ம)



கோக்லியின் சாதனையை தகர்த்தார் ரோகித்



ரி-20 ஆட்டங்களில் அதிக ஓட்டங்களைக் குவித்த இந்தியர் என்ற சாதனையை இந்திய அணித் தலைவர் கோக்லியிடம் இருந்து தட்டிப் பறித்தார் இந்திய அணியின் உபதலைவர் ரோகித் சர்மா.

பன்னாட்டு ஒருநாள் ஆட்டங்களில் அதிக ஓட்டங்களைக் கடந்த இந்திய வீரர்களின் பட்டியலில் இந்திய அணியின் தலைவர் கோக்லி 2 ஆயிரத்து 101 ஓட்டங்களைக் குவித்து முதலிடத்தில் இருந்தார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சதம் விளாசிய ரோகித் சர்மா தற்போது 2 ஆயிரத்து 203 ஓட்டங்களைக்குவித்து கோக்லியைப் பின்தள்ளினார்.

பன்னாட்டு வீரர்களின் பட்டியலில் நியூசிலாந்து அணியின் வீரர் கப்ரில் 2 ஆயிரத்து 271 ஓட்டங்களுடன் முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்த இடத்தில் தற்போது கோக்லி உள்ளார். (ம)

சிகர் தவானை விடுவித்தது ஏன்?

ஹைதராபாத் விளக்கம்

அடுத்த ஐ.பி.எல். தொடரில் ஹைதராபாத் அணியில் இருந்து தவான் ஏன் நீக்கப்பட்டார் என்று விளக்கம் வழங்கியுள்ளது ஹைதராபாத் நிர்வாகம்.

கனத்த இதயத்துடன் இதனை அறிவிக்கிறோம் எங்கள் அணிக்காக நீண்ட காலம் விளையாடிய தவான் 2019ஆம் ஆண்டு

ஐ.பி.எல். தொடரில் வேறொரு அணிக்குச் செல்கிறார். தவானை நாங்கள் ஏலத்தில் எடுத்தத் தொகை மீது அவருக்கு அதிருப்தி நிலவி வந்தது. இதனை நாங்கள் ஐ.பி.எல். விதிமுறைகளினால் மாற்றியமைக்க முடியவில்லை. ஆகவே அவரை மற்றொரு அணிக்கு பரிமாற்றிக் கொள்வது இருதரப்பினருக்கும் உகந்ததாக இருக்கும் என்று அணி நிர்வாகம் கருதியது. இத்தனையாண்டுகளாக தவான் செய்த பங்களிப்புகளை சன்ரைசர்ஸ் மதிப்புடன் அணுகுகிறது. ஆனால் நிதிப்பிரச்சினை காரணமாக அவர் வேறு அணிக்கு போவது சரியென நினைத்தது குறித்து வருத்தமடைகிறோம். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வாழ்த்துக்கள் என்று ஹைதராபாத் நிர்வாகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

முன்னேறினார் சிந்து

சீன ரென்னிஸ் தொடரில் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் இந்திய வீராங்கனை பி.வி.சிந்து.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் சிந்துவை எதிர்த்து ரஷ்ய வீராங்கனை எவ்ஜெனியா மோதினார். 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேறினார் சிந்து. (ம)

இங்கிலாந்து முன்னிலை!

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது இங்கிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 321 ஓட்டங்களைக் பெற்றிருந்தது. போக்ஸ் 87 ஓட்டங்களுடனும், லீச் 14 ஓட்டங்களுடனும் இரண்டாவது நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள். சதம் கடந்தார் போக்ஸ். அவர் 107 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். லீச் 15 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். 342 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து. பந்துவீச்சில் டில்ருவான் பெரேரா 5 இலக்குகளையும், லக்மல் 3 இலக்குகளையும், தனஞ்சய, கேரத் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 203 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மத்தியூஸ் 52 ஓட்டங்களையும், சந்திமல் 33 ஓட்டங்களையும், டிக்வெல்ல 28 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மொயின் அலி 4 இலக்குகளையும், ரசிட், லீச் இருவரும் தலா 2 இலக்குகளையும், அண்டர்சன், கரன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்று இரண்டாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இங்கிலாந்து அணி இலக்குச் சரிவில்லாமல் 38 ஓட்டங்களை பெற்றிருந்தபோது நாள் முடிவு கண்டது. இதுவரை இங்கிலாந்து அணி 177 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. (மு)

வேலை வாய்ப்பு

உருக்கு அலுமாரி செய்வதற்கு அலுமாரி வேலை தெரிந்தவர்கள். வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் தேவை.

077 905 0186/077 226 9950

(CS 21066) (04-17)

STUDY IN EUROPE (Lithuania)

Nursing Degree 4 years full time

உயர்தரத்தில் விஞ்ஞான பிரிவில் இருபாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஐரோப்பிய பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் அரிய வாய்ப்பு.

- 100% வீசா உத்தரவாதம்
- மிகக்குறைந்த கட்டணங்கள்
- பகுதிநேர வேலைவாய்ப்புகள்
- பட்டப்படிப்பின் பின்னர் ஐரோப்பிய நாடொன்றில் வேலைவாய்ப்பிற்கான உத்தரவாதம்

முதலில் பதிவு செய்யும் 10 மாணவர்களுக்கு விசேட புலமைப் பரிசில் வழங்கப்படும்.

WINSTAR CONSULTANTS (Pvt) Ltd.
45, Vembadi Street, Jaffna.
076 136 8544 / 071 071 6979

(C 8366/134/17)

Uduvil Girls' College

Presents

BETHLEHEM MORNING

a Christmas Cantata
on
Friday, 9 November, 2018
at
4.30 pm
in the
College Hall
You are Cordially invited.

Principal, Staff & Students.

(IN 8262) (04.17)

மரண அறிவித்தல்

தோற்றம்
16
05
1951

மறைவு
05
11
2018

மார்க்கண்டு நவரத்தினராசா

(வயரிங் நவம்)

பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கையைப் (ஆரியகுளம்) பிறப்பிடமாகவும் கல்தீட்டி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு நவரத்தினராசா கடந்த (05.11.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு - ராசம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வனும் கந்தையா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஷ்பராணியின் அன்புக் கணவரும் சாருஜன் (ஜேர்மனி), சிந்துஜன் (ஜேர்மனி), நிரோஜன், நிசாளினி (ஜேர்மனி), நிலானி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விமலாதேவி, ராஜேஸ்வரி, கனகராசா (பிரான்ஸ்), தவமணிதேவி, தருமராசா (வயரிங்), ஸ்ரீஸ்கந்தராசா (நோர்வே), கலாதேவி (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசன், இராஜன்பாபு, சாந்தினி, பரமராசா, கிருஷ்ணன், ரஞ்சி (பிரான்ஸ்), கோபாலசிங்கம், கிருஜா (வெள்ளச்சி), சண்முக்ராசா (பெல்ஜியம்), மாலினி (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் சிவநந்தினி (ஜேர்மனி), கஸ்தூரி (ஜேர்மனி), கஜேந்தினி (தாதிய உத்தியோகத்தர் - தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை), ஸ்ரீராம் (சிரேஷ்ட முகாமையாளர் - Soft Logic), சரண்ஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆதிஷா, அத்ரிஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.